15வது வருடத்தில்
# விளம்பரம்™
VLAMBARAM™
☎ 416-282-8059    416-282-4978

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
OPEN 7 DAYS
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்

வீடு விற்க, வாங்க...
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto
Direct: 416.315.9397
OFFICE: 416.321.6969
Sales Agents Welcome

நதி 15 | பாலம் 11 | சமூக முன்னேற்றப் பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | JUNE 01, 2005


வானத்தில் ஒரு பறவை 03


ஐயரின் தமிழ்த் தூது 23

**தமிழ் மொழி வாரம்**
**யூன் 26, 05 - யூலை 02, 05**

# பிரிட்டிஷ் கொலம்பியா மாகாண முதல்வர்

79 உறுப்பினர்களை கொண்ட பிரிட்டிஷ் கொலம்பியா மாகாண பாராளுமன்றத்தில் 45 உறுப்பினர்கள் லிபரல் (Liberal) கட்சியில் இருந்து தெரிவானதால் கோர்டன் கம்பல் திரும்பவும் முதல்வரானார். மிகுதி 34 உறுப்பினர்களும் புதிய ஜனநாயக கட்சி (NDP) யில் இருந்து தெரிவு செய்யப்பட்டார்கள். மாகாண பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆட்சி அமைக்க 40 உறுப்பினர்கள் தேவை.

கடந்த 22 வருடங்களில் இருமுறை அடுத்தடுத்து முதல்வராக வந்த ஒரே ஒருவர் என்ற பெருமையையும் கோர்டன் கம்பல் பெற்றார். கோர்டன் மீண்டும் முதல்வராக தெரிவு செய்யப்பட்டாலும் அவரது கட்சியின் பெரும்பான்மை ஆசனங்கள் மிகவும் குறைந்துள்ளன. கடந்த தேர்தலில் லிபரல் கட்சி 77 ஆசனங்களையும் புதிய ஜனநாயகக் கட்சி 2 ஆசனங்களையும் பெற்றிருந்தது. புதிய ஜனநாயகக் கட்சியின் புதிய தலைவி கரோல் ஜேம்ஸின் (Carole James) விடாமுயற்சியும் திட்டமிட்டு செயலாற்றும் திறனுமே அவருடைய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையை 2 இல் இருந்து 34 ஆக அதிகரிக்க உதவியது.

கரோல் ஜேம்ஸ் சீலை அணிந்து சீக்கிய மதவழிபாட்டிடங்களுக்கு சென்று இந்திய (Indo - Canadian) மக்களின் வாக்குகளை தனக்கும், தனது கட்சிக்கும் வழங்குமாறு கேட்டு தேர்தல் பிரச்சாரங்கள் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

1948 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12ஆம் திகதி பிறந்த கோர்டன் கம்பெல் ஒரு கலைத்துறை பட்டதாரியும் (BA - Dartmouth) நிர்வாகத்துறையில் முதுகலைப்பட்டம் பெற்றவரும் ஆவர். (MBA - Simon fraser university) இவர் தற்போது வன்கூவர் கல்வி மாவட்டத்திற்கு உப அதிபராக இருக்கும் நான்சியை (Nancy) 34 வருடங்களுக்கு முன்னர் மணம் முடித்தார். இவர்களுக்கு 2 வளர்ந்த ஆண்பிள்ளைகள் உண்டு. கோர்டன் கம்பெல் வன்கூவரிலேயே தனது இளமைப்பிராயத்தில்

தொடர்ச்சி 02ம் பக்கம்

# அதிர்ச்சியில் இலங்கை அரசு



உயர் இராணுவ புலனாய்வு அதிகாரி சுட்டுக்கொலை!

இலங்கை இராணுவத்தின், உயர் புலனாய்வு அதிகாரி ரி.எம். முத்தலிப் பாதுகாப்பு நிறைந்த கொழும்பில் சுட்டுக் கொலை செய்யப்பட சம்பவத்தினால் இலங்கை அரசும், இராணுவமும் அதிர்ச்சியடைந்திருப்பதாக தகவல்கள் கூறுகின்றன.

செவ்வாய் கிழமை காலை தனது வீட்டில் இருந்து கொத்தலாவெல இராணுவக் கல்லூரிக்கு செல்லும் போது முத்தலிப்பையை பின் தொடர்ந்து சென்ற இரு கொலையாளிகள், கிருலப்பனையில் வைத்து சுட்டுக் கொன்றனர்.

பின்புறம் இருந்து பதின் மூன்று தடவைகள் கொலையாளிகள் இவரை சுட்டுள்ளனர். முத்தலிப்பையைக் கொல்வதற்கு பயன்படுத்திய துப்பாக்கி இதுவரை இலங்கையில் பாவனையில் இல்லாத துப்பாக்கி என்றும் செய்திகள் வெளியாகி உள்ளன.

தொடர்ச்சியாக இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் கொல்லப்பட்டு வந்த போதும் முத்தலிப்பின் இழப்பு இலங்கை இராணுவதற்கு ஒரு பெரும் இழப்பு என்று கருதப்படுகின்றது. இவர் அமெரிக்கா, இந்தியா, பங்களாதேஸ் போன்ற நாடுகளில் விசேட பயிற்சி பெற்றவர் என்றும், ஊடுருவித் தாக்குதல் செய்வது, குழப்பங்களை ஏற்படுத்தி அரசுக்கு இலாபங்களை ஏற்படுத்தி கொடுப்பது போன்ற விடயங்களில் கைதேர்ந்தவர் என்றும் சொல்லப்படுகின்றது.

இதே சமயம் இக்கொலையை அடுத்து 'நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. உயர் அதிகாரிகளை இலங்கை அரசு பாதுகாக்க தவறிவிட்டது' என்று அடுத்தடுத்த குற்றச்சாட்டுகளை ஐ.தே.க. சந்திரிகா அரசின் மீது சுமத்தியுள்ளது


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்
காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.

Singapore Communication
Since 1991
$40/350 min + Unlimited incoming local calling
$50/500 min + Unlimited incoming local calling
$75/750 min + Unlimited incoming local calling
**Option E & W calling , Free phone $20, $30 Packages also available
For More Info Please Visit to the Store
*** Offer Ends Without Notice***
More Info. Call: 416-740-5292
5010 Steeles Ave. W., Unit 17 ABC-(Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை
வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
416.267.8221

"Making Dreams Reality"

HomeLife GTA Realty Inc.
Ravi R. Raveendran BSc.(Eng)
Sales Representative
416•817•8479
Bus: 416•321•6969
1711 McCowan Rd., Suite #206, Scarborough, ON. M1S 3Y3
INDEPENDENTLY OWNED AND OPERATED, BROKER


Insurance & Financial Services
Balan Kanapathi (Agent)
• Auto • Home • R.R.S.P • Life
• Disability • Mutual Fund • Group Insurance • Child Education
• Travel & Business
416.321.1515 •905.294.2429
4433 Sheppard Ave. E. Suite 200, (Brimley/Sheppard)

வீடு வாங்க, விற்க...
ரவி பரமு
வீட்டுப் பிரதிநிதி
DIRECT: 416.262.4176
OFFICE: 416.321.6969

HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto

# உங்கள் வியாபார வெற்றிக்கு இணையத்தளம் தேவையா?

பகுதி - 03

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது" என்ற விளம்பர வரிகள் என்னைக் கவர்ந்தன. கனவுகள் நனவாகின்றன. உண்மை, நீங்கள் நம்பினால் உங்கள் கனவுகள் நனவாகின்ற அந்தக் கனவைப் பிரதிபலிப்பதாக உங்கள் இணையதளம் அமைந்திருக்க வேண்டும். இணையதளம் கூடிக் கொண்டே போகும் வருகையாளர்களைத் தரலாம். ஆனால் அந்த வருகையாளர்களை வாடிக்கையாளர்கள் ஆக்கத் தெரிந்திருக்க வேண்டும். ஆக இணையத்தளத்தில் முக்கியமாகச் செய்ய வேண்டியவை இரண்டு - முதலாவது. பார்வையாளர் எண்ணிக்கை கூடிக்கொண்டே போகக்கூடிய முறையில், கவர்ச்சியாக, பயனுள்ள செய்திகளைக் கொண்ட இணையதளமாக உங்கள் இணையதளத்தை அமைக்க வேண்டும். அடுத்தபடியாக வரும் பார்வையாளர்களை வாடிக்கையாளர்களாக மாற்றும் திறமை கொண்டதாக உங்கள் இணையதளம் அமைந்திருக்க வேண்டும். இந்த இரண்டுக்குமே அடிப்படை, இணையதளத்தில் அமைந்துள்ள செய்திகள் தான். செய்திகள் அரசன். செய்தி சரியில்லை என்றால் இணையதளம் சரியில்லை. அரசனே சரியில்லை என்றால் அந்த நாடு எப்படி சிறந்து விளங்க முடியும்? செய்திகளைப் போடுவதில், கவனத்தைச் செலுத்துங்கள். செய்திகள் என்று இங்கே சொல்லப்படுவது உங்கள் வியாபாரம் சம்மந்தப்பட்ட விடயங்களையே. இடை இடையே நல்ல படங்களையும் போடுங்கள். கண்ணுக்கும், கருத்துக்கும் குளிர்ச்சியாக அவை இருக்கட்டும். ஒரு படம் ஆயிரம் வார்த்தைகளுக்குச் சமம் என்பார்கள்.

திரும்ப ஒரு அடிப்படைக் கேள்வியையே ஆராய்வோம். உங்கள் இணையதளத்தின் நோக்கம் என்ன? நான் சொல்வது ஒரு புறம் இருக்கட்டும். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**செய்யும் தொழிலில் வெற்றி பெற**

இணையதளம் உங்கள் வியாபாரத்தைப் பெருக்கும் என்று நம்புகிறீர்களா? புதிய வாடிக்கையாளர்களைச் சென்றடையும் என்று நினைக்கிறீர்களா? உங்கள் வாடிக்கையாளர் என்ன விரும்புகிறார் என்பதைத் தெரிந்து கொள்ள இணையத் தளம் ஒரு கருவியாகப் பயன்படுமா? அதன் அடிப்படையில் உங்கள் வியாபார உத்திகளை அமைக்க முடியுமா?

இன்றைக்குத் தினமும் ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட பக்கங்கள் இணையதளத்தில் இணைக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. இந்தக் கடலில் உங்கள் இணையதளக் கப்பலை வாடிக்கையாளர் எப்படித் தேடுவார்? பல இணையதளங்கள் தோன்றிய வேகத்திலேயே காணாமலும் போய் விடுகின்றன. உங்கள் இணையத்தளம் எத்தகையதாக அமைய வேண்டும். யோசியுங்கள்! இணையதளத்தை அமைத்து விட்டால் மட்டும் போதாது. அதை ஒருவர் தினமும் கண்காணிக்க வேண்டும். புதுப்புது செய்திகளைத் தந்து கொண்டே இருக்க வேண்டும். வீட்டை அவ்வப்போது சுத்தப்படுத்துவதைப் போல, இணையதளத்திலும் பழையனவற்றை நீக்கிப் புதியனவற்றை பொலிவுடன் சேர்க்க வேண்டும்.

ஒருவர் இணையதளத்தின் மூலமாக உங்கள் பொருளை வாங்குவதில் விருப்பம் தெரிவித்தால் அதை எவ்வளவு விரைவில் எப்படி செயல் படுத்த முடியும்? திட்டம் தயாராக உள்ளதா? இல்லை என்று நீங்கள் பதில் அளித்தால், உங்களுக்கு இணையத்தளம் தேவையில்லை என்பதுதான் என் கருத்து. இல்லை என்று பதில் அளிப்பவராய் இருந்தால், இணைய தளமுயற்சி, உங்களுக்கு கால விரயத்தையும், பொருள் விரயத்தையும் தரும். எனவே அந்த எண்ணத்தைத் தூர வையுங்கள்.

இணையதளம் பற்றிய இந்தக் குறிப்புக்களை நினைவில் வையுங்கள்.

• எளிமை, எளிமை, எளிமை.

இணையதளம் எளிமையானதாக, இனிமையான தாக இருக்கட்டும்.

• உங்கள் இணையத் தளத்துக்கு வருகை தந்தவர் திருப்தியடைய வேண்டும். அவர் உங்கள் இணைய தளத்தில் செலவிட்ட நேரம் பெறுமதியானது என்று கருதக்கூடியதாக உங்கள் இணையதளம் அமைந்திருக்க வேண்டும்.

• புதிதாகவும், புதிய செய்திகளைக் கொண்டதாகவும் இணையதளம் அமையட்டும்.

• பக்கத்தை வடிவமைக்கும் போது

**பெரி. முத்துராமன்**

வாடிக்கையாளரின் பார்வையில் எப்படி இருக்கும் என்று நினைத்துப்பார்த்து வடிவமையுங்கள்.

• உங்களின் முத்திரையை நீங்கள் அங்கே இருக்கிறீர்கள் என்பதைப் பார்வையாளர் உணரக்கூடியதாக இணையதளம் அமைந்திருக்க வேண்டும்.

• இணையதளத்தின் வியாபார உத்தியை, மற்ற வியாபார யுத்திகளுடன் ஒன்றிணையுங்கள். இணையத்தளத்தை மட்டும் வியாபார வளர்ச்சிக்கு நம்பியிராதீர். ஒருங்கிணைந்த முயற்சி நற்பலன்களை விரைவில் தரும்.




WEB CREATION

அதிக செலவில்லாமல் சிறப்பான இணைய தளத்தை உங்கள் வியாபாரத்துக்கு என அமைக்க வேண்டுமா? இலவச ஆலோசனை பெற இன்றே, இப்போதே அழையுங்கள் M. Karthik

தொலைபேசி எண் - 647 519 0623




# பிரிட்டிஷ் கொலம்பியா மாகாண முதல்வர்

1ஆம் பக்கத் தொடர்ச்சி

வசித்தவர். இவரது தந்தையார் பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்திற்கு உதவி பீடாதிபதியாக இருந்தவர் (Assistant Dean of Medicine) கோர்டன் கம்பெல் தனது 13 வயதிலேயே தகப்பனாரை இழந்தவர். அதன்பின்னர் இவரது தாயார் தனது செயலாளர் தொழில் மூலம் (Secretarial job) தனது குடும்பத்தை சிறிய தொடர்மாடி வீட்டிற்கு (Small apartment) மாற்றி பராமரித்து வந்தார். இளங்கலை, முதுகலைப் பட்டங்கள் பெற்ற கோர்டன் திருமணத்தின் பின்னர் தனது மனைவியுடன் 1970 இல் நைஜீரியா சென்று அங்கு இரண்டு வருடங்கள் ஆசிரியர் தொழில் பார்த்தார்.

1984 இல் வன்கூவர் நகரசபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட கோர்டன் 1986 இல் இருந்து 1993ஆம் ஆண்டுவரை வன்கூவர் நகரபிதாவாக இருந்தார். 1993 ஆம் ஆண்டு லிபரல் கட்சியின் தலைவராக கோர்டன் தெரிவு செய்யப்பட்டார். 2001ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் பிரிட்டிஸ் கொலம்பியா மாகாணத்தின் சரித்திரத்திலேயே இல்லாதவாறு 79 ஆசனங்களில் 77 இனைப் பெற்று முதல்வ ரானார். முதல்வரான முதல்நாளே மாகாண வருமானவரியும், வியாபார வரியையும் குறைத்தார். பின்னர் அரச செலவினங்களை குறைத்தார். இதனால் பல ஆயிரக்கணக்கான அரச உத்தியோகத்தர்களது பதவி பறிபோனது. பாடசாலைகள் வசூலிக்கும் மாணவர்க்கான கட்டணங்களின் (Tuition fees) அதிகரிப்பு தடையை நீக்கினார். இவ்விரண்டு செய்கை களும் இவரது செல்வாக்கை மக்களிடம்




குறைத்திருந்தாலும் இதுவே இவரது கட்சி 2004 ஆம் ஆண்டு துண்டுவிழாத (Blanched Budget) வரவு செலவு திட்டத்தை பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் கொண்டுவர உதவியது. இவரது 2005 ஆம் ஆண்டிற்குரிய வரவு செலவுத்திட்டமும் ஒரு சமநிலையான வரவு செலவுத்திட்டமே.

புதிய ஜனநாயகக் கட்சியின் முந்திய 10வருட ஆட்சியில் பேரழிவை கண்ட பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தின் பொருளாதாரம் இவரது ஆட்சியில் அபரித வளர்ச்சி காணத் தொடங்கியது. இதனால் இவர் மக்களிடையே திரும்பவும் செல்வாக்கு பெற்றார். லிபரல் கட்சி மொத்தவாக்காளர்களினது 46% வாக்குகளை யும், புதிய ஜனநாயகக்கட்சி 41% வாக்குகளையும் பெற்றன. மூன்றாம் இடத்திற்கு வந்த பசுமைக்கட்சி (Green party) 9% வாக்குகளைப் பெற்றும் ஒரு மாகாண பாராளுமன்ற உறுப்பினராதல் இக்கட்சியில் இருந்து தெரிவு செய்யப்படாதது குறிப்பிடத்தக்கது.

இம்முறை மே மாதம் 17ஆம்திகதி 2005ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தின் அரசியல் அமைப்பில் முன் கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட திகதியில் நடைபெற்ற தேர்தல் ஆகும். கனடாவிலேயே முதன்முதலாக அரசியல் அமைப்பிலேயே எப்போது தேர்தல் நடைபெற வேண்டும் என எழுதிய மாகாணமும் அதன்படியே தேர்தலை நடத்திய மாகாணமும் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணம் ஆகும். இதன் அடுத்த தேர்தல் மே மாதம் 12ஆம்திகதி 2009 ஆம் ஆண்டு நடைபெற வேண்டும் என பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தின் அரசியல் அமைப்பு கூறுகிறது.

பிரிட்டிஷ் கொலம்பியாவில் 45 பதிவு செய்யப்பட்ட கட்சிகள் உண்டு. அவற்றுள் சில



1. Liberal Party
2. New Democratic party
3. Green party
4. Confederation party
5. Labour party
6. Conservative party
7. Alternative party
8. Marijuana party
9. Democratic Reform party
10. Sex party
11. Millionaires party
12. Your party

**சிவ ஞானநாயகன்**

இம் முறை தேர்தலில் பிரிட்டிஷ் கொலம்பியா மக்கள் தங்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்ததுடன் ஒரு சர்வஜன வாக்கெடுப்பிலும் பங்குபற்றினார்கள். பிரிட்டிஷ் கொலம்பியா தேர்தல் முறையை விகிதசார தெரிவுமுறைக்கு மாற்றுவதா இல்லையா என்பதே அச்சர்வஜன வாக்கெடுப்பாகும். இச்சர்வஜன வாக்கெடுப்பு விதிமுறையின்படி தேர்தல் முறையை விகிதசார தெரிவுமுறைக்கு மாற்ற மாகாணம் முழுவதிலும் அறுபது வீதமான வாக்குகளும் மற்றும் தனித்தனியே 60 வீத தொகுதிகளும் (48 தொகுதிகள்) ஆம் என வாக்களிக்க வேண்டும். தேர்தல் முடிவுகளின்படி 97 வீதமான தொகுதிகளில் (77 தொகுதிகள்) பெரும் பான்மையோர் 'ஆம்' என வாக்களித்திருந்தாலும் மாகாணம் முழுவதிலும் 57.3 வீதமான வாக்குகளே 'ஆம்' என வாக்களிப்பட்டிருந்தன.




விளம்பரம் VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.



பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிகேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.



Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com



HOME INSPECTION

• வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள... • வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...

ந. தயாபரன்

Certified Inspection Specialist

Expert Building Inspections LTD.

• Exceed the Standards • Industry Canada Registered • Professionals Serving the GTA • On site Report

24 /7 - Toll Free - 1.866.373.3315 416.727.8336

# வானத்தில் ஒரு பறவை

நாளுக்கு நாள் விமானப் பயணிகள் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. அதே வேளையில் எரிபொருள் விலையும் அதிகரித்து வருகின்றது. இது இரண்டையும் சமாளிக்க விமான உற்பத்தி நிறுவனங்கள் பல முயற்சிகளை எடுத்து வருகின்றன. இந்த அடிப்படையில் ஐரோப்பிய விமான உற்பத்தி நிறுவனமான Airbus புதிய ரக விமானமான A - 380 என்ற விமாத்தை கடந்த ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி முதன் முதலாக பரீட்சார்த்த பறப்பில் ஈடுபடுத்தி வெற்றி கண்டது. இது ஒரு




பெரிய விமானமாகும். 261.8 அடி சிறக்கைகளின் அகலமாகவும், 239.5 அடி நீளமாகவும் 79 அடி உயரமாகவும் உள்ளது. எனவே தற்போதுள்ள பயணிகள் விமானங்களுள் ஆகப் பெரிய பயணிகள் விமானமாக இது விளங்குகின்றது. இதுவரையிலும் Boeing 747-400 என்ற விமானமே பெரிய பயணிகள் விமானமாக இருந்தது. ஆயினும் Airbus A - 380 தான் ஆகப் பெரிய விமானமென்று கூறமுடியாது. இதைவிடப் பெரியதாக வேறு தேவைகளுக்கு அமைக்கப்பட்ட விமானங்கள் உள்ளன. இதுவரையிலும் இருந்த ஆகப்பெரிய விமானம் UKRAINIAN AN-225 COSSACK ஆகும். 6 இயந்திரங்களைக் கொண்ட இந்த இராட்சத விமானம் ரஷ்ய விண்கலத்தை கொண்டு செல்ல 1988 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. தற்போது ஒரேயொரு விமானம்தான் இந்த ரகத்தில் உருவாக்கப்பட்டது. தற்போது பொதிகள் கொண்டு செல்லும் விமானமாக உள்ளது. இதற்கு அடுத்தபடியாக HUGHES HK -1 FLY-ING BOAT இருந்தது. 1947 இல் உருவாக்கப்பட்ட இந்த விமானம் ஒரேயொரு முறைதான் பறந்தது. தற்போது நூதனக் காட்சிச்சாலையிலுள்ளது. எனவே Airbus A - 380 மூன்றாவது பெரிய விமானம் என்று கூறலாம்.

| | Airbus A - 380 | Boeing 747 - 400 |
|---|---|---|
| இறக்கைகள் அகலம் | 261அடி 10அங். | 211அடி 5அங். |
| நீளம் | 239அடி 6அங். | 231அடி 10அங். |
| உயரம் | 79அடி | 63அடி 8அங். |
| வெறும் விமான நிறை | 610,700 இறாத்தல் | 399,000 இறாத்தல் |
| அதிகூடிய பறக்கக்கூடிய நிறை | 1,234,600 இறாத்தல் | 875,000 இறாத்தல் |

இந்த விமானத்தை தயாரிப்பதற்கான முயற்சி 1990 களின் ஆரம்பத்தில் எடுக்கப்பட்டது. Boeing 747 ற்கு போட்டியாக 500 பயணிகளுக்கு மேல் பயணிகளைக் கொண்டு செல்லக்கூடிய விமானத்தை தயாரிக்க வேண்டுமென Airbus நிறுவனம் விரும்பியது. 1994 ஆம் ஆண்டு இதற்குரிய வடிவமைப்புக்களை தீர்மானிக்கத் தொடங்கினார்கள். முதலில் அகலமான விமானத்தை தயாரிக்க எண்ணினார்கள். பின்னர் ஓடுபாதையை கருத்திற்கொண்டு இரண்டு தட்டுகளில் ஆசனங்களைக் கொண்ட விமானத்தைத் தயாரிக்க தீர்மானித்து முதலில் இதற்கு A 3XX எனப்பெயரிட்டு, பின்னர் குறுக்கு வெட்டுமுகமாக பிரயாணிகள் பகுதி "8" வடிவமாக இருந்ததால் A-380 எனப் பெயரிட்டார்கள். 2000ஆம் ஆண்டளவில் இந்த விமானத்துக்கான ஓடர்களை Airbus நிறுவனம் பெற்றுக்கொள்ள ஆரம்பித்ததை அடுத்து பாரிய விமானத்தரிப்பிட கொட்டகைகள் (Hangars) களையும், பிரான்ஸ், வேல்ஸ், ஜேர்மனி, இங்கிலாந்து, ஸ்பெயின் ஆகிய நாடுகளில் தொழிற்சாலைகளையும் அமைக்க ஆரம்பித்தது. 2002 ஆம் ஆண்டளவில் 6000 வேலையாட்கள் தயாரிப்பில் ஈடுபடுத்தப்பட்டனர். விற்பனையும் அதிகரித்து 2005ஆம் ஆண்டு ஆரம்பத்தில் 154 விமானங்களுக்கான ஓடர்கள் பெறப்பட்டன.

முதலில் Emirates விமானச் சேவையும், அதைத் தொடர்ந்து Air France, சிங்கப்பூர் ஏயார்லைன்ஸ், குவான்ரஸ், வேர்ஜின் அட்லாண்டிக் Fedex பொதி சேவை, Qatar Airwqys, Lufthansa, Korean Air, Malaysian Airlines, Etihad Airways, Thai Airways, UPS ஆகியவை ஓடர்களைக் கொடுத்தன. இதில் குறிப்பிடக்கூடிய விடயம் என்னவென்றால் அமெரிக்கா, கனடா மற்றும் அமெரிக்க சார்பான இங்கிலாந்து, ஜப்பான் போன்ற நாடுகளின் விமானசேவைகள் இந்த விமானங்களை வாங்குவதற்கு முயற்சி செய்யவில்லை. கனடாவின் Air canada விமானநிறுவனம் தற்போது வைத்திருக்கும் அதிகமான விமானங்கள் Airbus விமானங்களாகும். ஆனால் அண்மையில் கூட Boeing விமானங்களுக்கே ஓடர்கள் கொடுத்துள்ளன.

Airbus A - 380 விமானத்தில் ஆரம்ப இருக்கைகளின் அமைப்பின்படி மொத்தம் 555 இருக்கைகளை கொண்டதாக உள்ளது. இரண்டு தட்டுகள் (Double Decker) கொண்ட அமைப்பில் மேல்தட்டில், ஒரு வரிசையில் 6 இருக்கைகள் வீதம் 16 வரிசையில் மொத்தம் 96 இருக்கைகள் Business Class க்கும், அதே மேல்வரிசையில் Economy வகுப்பின் 103 இருக்கைகளும் அமைந்துள்ளது. கீழ்தட்டில் முன்பக்கமாக ஒன்றுவிட்ட நிரைகளாக ஒரு வரிசையில் 4 இருக்கைகளும், 2 இருக்கைகளுமாக மாறிமாறி 22 இருக்கைகள் First Class க்கு உள்ளன. ஒன்றுவிட்ட வரிசையில் இருப்பதால், இருக்கையை நீட்டி படுக்கையாக மாற்றிக் கொள்ளலாம். இதைத் தொடர்ந்து அதே கீழ்த்தட்டில் ஒரு வரிசையில் 10 இருக்கைகளாக மொத்தம் 334 Economy இருக்கைகளும் அமைந்துள்ளன. Boeing 747 - 400 விமானம் 416 இருக்கைகள் கொண்டதாகவும், அதேநேரம் Airbus A - 380 555 இருக்கைகள் கொண்டதாகவும் அமைந்துள்ளது. தற்போதுள்ள வடிவமைப்பில் Airbus A - 380 இல் உணவுவிடுதி, மதுபான சாலை, குளிக்கும் இடம், சூதாட்ட இடம், வியாபாரக் கூட்டங்களுக்கான இடம் போன்றவையும் அமைக்கப்பட்டுள்ளன. ஆனாலும் வெவ்வேறு விமானச் சேவைகள் இந்த விமானங்களை வாங்கி, தங்கள் விருப்பத்திற்கேற்ப இருக்கைகளின் அமைப்பை மாற்றி 800 வரையும் இருக்கைகளை அமைத்துக் கொள்ளலாம்.

பெரிய விமானம் ஒன்றில் கூடுதலான பயணிகள் கொண்டு செல்லக்கூடியதாக இருப்பதால் ஒரு பிரயாணிக்குரிய செலவு 15 - 20 வீதத்தால் குறையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. Airbus A - 380 யானது எரிபொருளை திறனாக உபயோகிக்கக்கூடியதாக Rolls-Royce நிறுவனமும் மற்றும் General Electric ம் Pratt & Whitney இணைந்த Engine Alliance என்ற நிறுவனம் ஆகியன ஒரு சக்திவாய்ந்த விமான இயந்திரத்தை அமைத்துள்ளன. Carbon - Fiber reinforced plastic (CFRP) என்ற நிறைகுறைந்த பதார்த்தம் மூலம் மொத்த விமான நிறைகுறைவானதாக உள்ளது. விமானத்தின் வடிவமும் காற்றை நன்கு கிழித்துக்கொண்டு செல்லக்கூடிய Aerodynamic வடிவத்தைக் கொண்டதாகவும் உள்ளது.

மிகவும் சிறந்த ஒரு வடிவமைப்பைக் கொண்டிருந்தாலும் சில பிரச்சினைகளை இந்த விமானம் எதிர்நோக்கத்தான் செய்கின்றது. இந்த விமானத் தயாரிப்புத் திட்டத்திற்கான செலவு எதிர்பார்த்ததை விட 1.4 பில்லியன் யூரோக்கள் அதிகமாக மொத்தம் 1.2 பில்லியன் யூரோக்களாகி உள்ளது. ஒரு விமானம் தற்போது 285 பில்லியன் அமெரிக்க டொலராக விலை குறிக்கப்பட்டுள்ளது. செலவை ஈடுசெய்ய ஆகக் குறைந்தது 250 விமானங்களையாவது விற்கவேண்டும். இலாபம் அதிகம் ஈட்டாத விமான சேவை நிறுவனங்கள், சிறிலங்கன் எயார் லைன்ஸ் போன்று Secound hand அல்லது உபயோகித்த விமானங்களை வாங்கும் விமானச் சேவை நிறுவனங்கள் ஆகியவையுள்ள, விமானச் சேவையில் விமானங்களை விற்க முடியுமா என்பது பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டியுள்ளது.

விமானநிலையங்கள் இந்த புதியரக பாரிய உருவமுள்ள விமானங்களை உள்வாங்கக் கூடிய நிலையில் உள்ளனவா என்பது கேள்விக்குறியாக உள்ளது. பாரிய விமானங்களுக்கு மிகநீண்ட ஓடுபாதை தேவையாக உள்ளன. ஆனால் அதிகமான

**விஜே குலத்துங்கம்**

விமானநிலையங்கள் நீண்ட ஓடுபாதையைக் கொண்டனவையாக உள்ளன. கூடிய பாரத்தைத் தாங்குமா என்ற கேள்விக்கு, விமானம் 22 சில்லுகளைக் கொண்டதால், ஒரு சில்லில் ஏற்படும் தாக்கம் குறைவென்பதால் பிரச்சினை இருக்காது எனக் கூறப்படுகின்றது. ஆனாலும் சில விமான நிலையங்களில் ஓடுபாதையின் அகலத்தை சிறிது அதிகரிக்க வேண்டியிருக்கும். அதைவிட Taxi way எனப் படும் ஓடுபாதைக்கும் Terminalக்கும் இடையேயுள்ள பாதையும் அகலப்படுத்த வேண்டியிருக்கும்.

விமானநிலையங்கள் எதிர்நோக்கும் பிரச்சினை, அதிகரித்த பயணிகளைச் சமாளிப்பதில்தான் உள்ளது. 800வரையிலும் பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் விமானம் என்பதால், Check-in எனப்படும் பொதிகளைக் கையளிக்கும் இடம், பின்னர் விமானத்தில் ஏறும் இடம் போன்றவற்றில் மிக நீண்டவரிசைகள் காணப்படும். அத்துடன் உள்ளே வரும் அதிகரித்த பயணிகளைச் சமாளிப்பதால் குடிவரவுப் பகுதி, சுங்க இலாகாப் பகுதி ஆகியன பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும். எனவே இவற்றிற்காக விமானநிலையங்கள் மறுசீரமைக் கப்பட வேண்டியுள்ளதாக இருக்கும்.

2006 ஆம் ஆண்டு சிங்கப்பூர் ஏயார்லைன்ஸ் முதலாவது பயணிகள் சேவையை ஆரம்பிக்கவுள்ளது. Fedex நிறுவனம் 2008 ஆம் ஆண்டு A-380f எனப்படும் பொதிகள் ஏற்றும் விமானத்தை உபயோகிக்க உள்ளது.







APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL

# “தமிழ் தமிழ் தமிழ்” புலம்பெயர்ந்தாலும் தமிழ் சிறக்கவைக்கும்

தமிழ்மொழியே தாய்மொழியே என்று சொல்லுவோம் - அந்தத்
தமிழின்பம் தழைக்க இங்கே பாடுபடுவோம்
இமிழ்கின்ற தமிழ்மூச்சு என்றும் நிலைக்க - எங்கள்
தமிழ்மொழியின் தனித்தன்மை அறிந்து நடப்போம்.

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களாகிய எங்கள் நெஞ்சத்தை நெருடும் விடயம், இங்கு தமிழ்மொழி நிலைக்குமோ அன்றேல் நிலைக்காதோ என்ற எண்ண அலை என்கில் அது எல்லாத்தமிழர்களையும் இன்றும் என்றும் பாதிக்கச் செய்யும். இதற்குப் புலம்பெயர்ந்த தமிழர் வரலாற்றில், எங்கள் மொழி அடைந்த ஏற்ற இறக்கங்கள், உலகத்தமிழர் பத்திரிகையில் வெளியான தமிழ்க்கலைத் தொழில்நுட்பக் கல்லூரிப் பொறுப்பாளர் திரு. சு. இராசரத்தினத்தின் கட்டுரை வழி சுருங்கக் கூறித் தொடரலாம் என்பது என் எண்ணம். புலப்பெயர்வில் உலக இனங்கள் தங்கள் மொழியைத் தக்கவைத்துள்ள இனம் எனவும், தக்கவைக்காது மனம்வருந்தி முயற்சிசெய்து மொழிகாக்க விரும்பும் இனம் எனவும் முற்றிலும் தம்மொழி இழந்து அடையாளம் இன்றி இருக்கும் இனம் எனவும் பகுக்கலாம்.

புலப்பெயர்விலும் குறிப்பாகச் சீனர், யப்பானியர், யூதர், இத்தானியர், கிரேக்கர் ஆகியோர் தம் மொழியைத் தக்கவைத்துக் கலாசார விழுமியங்களை இன்றும் பேணி வளர்க்கின்றனர். ஆபிரிக்கா இனங்களில் சில பல்வேறு ஆட்சி இடைத்தாக்கங்களால், சொந்த மொழிமறந்து வந்தாரின் மொழி பயின்று, தமது கலாசாரம் மறந்து வாழ்கின்றனர். தமிழினம் பல்வேறு காரணங்களால் புலம்பெயர்ந்து ஆங்கில பிரெஞ்சுக் குடியேற்ற நாடுகளிற் குடியேறின. சிங்கப்பூர், மலேசியா, பர்மா, பீஜித்தீவுகள், மொரீசியஸ், சீசெல்ஸ், நீயுகினியன், தென்னாபிரிக்கா, கரீபியன் தீவுகள் ஆகியவற்றில் புலம்பெயர்ந்த தமிழர்களை நோக்கினால், தமிழ் மறந்தவர்களையும், தமிழ் மறந்து கலாசாரம் தொலைத்தவர்களையும், தமிழ்மொழி இழந்து, தாய்மொழி அவசியம் உணர்ந்து, அவற்றை மீண்டும் படிக்க முயல்பவர்களையும் காணலாம்.

மொழிவழியே கலாசாரம், பண்பு நடத்தைப் பாங்கு வாழ்வியல் முறைகள் அமையும். மொழியே தன்னைத் தக்கவும் வளரவும் வழி ஒளியாய், நெறியாய்த்திகழும். பீஜி நாட்டில் 1880ம் ஆண்டளவில் தோட்டத் தொழிலாளராகச் சென்ற தமிழர், தமது அடையாளம் இழந்து அல்லற்படுவதைக் காணலாம். கனடாவில் இருப்பவர்களை வினவினால், தமது மூதாதையர் பெயர், வணங்கும் கணேசாத் தெய்வம் போல்வன கூறுவர். இந்நிலை எம் வருங்காலத் தமிழ்ப் பிள்ளைகளுக்கு வரவேண்டுமா! உங்கள் இனம் யாது? பண்பாடு யாது? உமது சந்ததி யார், உம் நாடு, உமது ஊர் என்பன கேட்கின் யாது சொல்வார்?

யாமறிந்தோம் இல்லை, நமது மொழி அறிந்தோம் இல்லை, நமது சந்ததியின் வாழ்வியலே தெரியாது என்று சொல்வதை எந்தத் தமிழ்ப் பெற்றோரும் விரும்ப மாட்டார்கள்.

இப்போது வெண்பா ஒன்று நினைவு வருகிறது. அதில் என்ன குறை என்று சொல்லாது உணர்ந்து செயற்படு நிலை அறிக.
நேரிசை வெண்பா

”தனம்பெற்று மேனிலை தாம்பெறினும் தாம்யார்?
இனம்யாது? என்றறியா எங்கள் - இனச்சிறார்கள்
என்றென்றும் உள்ளத்தில் ஏதிலியே! என்பதிலே
என்னபிழை, உண்டெனவே சாற்று.

புலப்பெயர்வில் தமிழ்மொழி படிக்கலாமா என்று பலர் சிந்திக்கலாம், பாரதி பாவிலே ”தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்” என்றார். பாரதியைப் படிக்கும் நாம், பாரதி விழாக்கள் ஊரிலும் இங்கும் கொண்டாடும் நாம், பாரதி கண்ட கனவை, நிறைவு செய்யக் கனடிய அரசு செய்கின்ற உதவிகளைப் பயன்படுத்தாது விடலாமா!. இங்கே கனடிய அரசு தமிழ் மொழியையும் அனைத்துலக மொழிகளில் ஒன்றாக்கி, மற்றப் புலம்பெயர்ந்த இனங்களுக்கு உதவுவது போல் படிப்பதற்கும், அதிலே விசேட சித்திகள் உயர்நிலை வகுப்பிலும் பல்கலைக் கழகம் புகுமுகத்தேர்வுக்கான ஆறுசித்திகளில் ஒன்றாகவும் ஏற்படுத்தி உறுதுணை செய்கிறது. மேலும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு வேதனம் அளிக்கிறது. அது மட்டும் மல்லாமல், மூலவளங்களும் கொடுத்துதவுகிறது. நம்மவர்கள் கற்பிக்க வழிகாட்டு நூல்களும், ஒன்றிணைத்து கூட்டுறவுக் கற்பித்தல் வழிகளும் ஆசிரிய கருத்தரங்குகளில் அளிக்கிறது. கற்பிக்கும் விடயங்களும், எங்கள் கலாசார, கனடிய கலாசார உலக விழுமியங்களோடு தொடர்பு படுத்தி அமைக்க வழி செய்கிறது. பிள்ளை பூரண ஆளுமை விருத்திக்கு மொழிவழி வழிகாட்டல், ஆலோசனைகள் அளிக்கிறது. அதனை உணர்ந்து பெற்றோரும் மற்றோரும் தமிழ் மொழி விளங்கப் பாரம்பரியம் உணர, பண்பாடு தவழ, பாராட்டி புலப் பெயர்விலும் பல்லுறவு சிறக்கப் படிக்க படிப்பிக்க வேண்டும்.

எமக்கு இல்லாத ஒன்றைப் பெறுவதில் எல்லோருக்கும் ஆனந்தம். ஈழத்தில் இருக்கும் போது ஆங்கிலம் பேசுவது எம்மவர் பலருக்கு மிகக் சிக்கலாக இருந்தது. ஆதலினாலே இங்குவந்த பின்னும் எமது பிள்ளைகள் ஆங்கிலத்திலே பேசுகிறார்கள் என்பதில் எங்களுக்கு இன்பம் இருப்பினும் உண்மை நிலை அறியின், பெற்றோர்களாகிய நாங்கள் எமது வழி-மாற்றுவோம். இன்று ”மதராஸ்“ தமிழைக் கேட்டால், அது தமிங்கலம் என்று சொல்லுமளவிற்கு உள்ளது. நாங்கள் பிள்ளைகளோடு எப்படிப் பேசுகிறோம்? தயவுசெய்து, தமிழ்மொழி தக்க வைக்க வேண்டும் என்ற ஆவலில், வீட்டிலே பிள்ளைகளோடு தமிழில் பேசுங்கள். எந்த மொழி கற்பித்தல் முறைகளை எடுத்துப் பார்த்தாலும், பேச்சு மொழியே மிகமிக முக்கியம் என்கின்றது. கனடிய அனைத்துலக மொழிக் கலைத்திட்டம் கூட, பேச்சு மொழிக்கே மிகமிக முக்கியமளிக்கிறது. ஆரம்ப வகுப்பு முதலே அதிகமான புள்ளி பேச்சு மொழிக்கு அளிக்கிறது. பேச்சு மொழி கற்றல் கற்பித்தலில் பாரிய வீச்சு என்பதனை மறவாதீர்கள். ஒரு பிள்ளை எத்தனை மொழிகள் அறிகிறதோ அத்தனை திறன்கள் மொழி கற்றல் கற்பித்தலில் ஏற்படும். மொழி வல்லுநர்கள் பிள்ளை இரண்டாம், மூன்றாம் மொழிகளை இலகுவில் கற்கிறது என்கின்றனர். பல்லின நாட்டிலே பல மொழிகள் தெரிவது ஆளுமை வளர்ச்சிக்கும் பொருளாதார மேமபாட்டிற்கும், சமூக உறவுக்கும் வழிவகுக்கும். சலனமிலாத் தமிழ் மேம்பாடு சிறக்கும் வளரும்.

தமிழர் புலப்பெயர்விலே தமிழ்மொழியைப் படிக்க உதவுபவர்கள் யார்? என்ற வினாவை உங்களிடமே நீங்கள் கேட்டுப் பாருங்கள். வீடு முதல் ஆசான். அது பற்றி முன்பே கூறியதால், அடுத்துள்ள, பாடசாலை, ஆசிரியர், ஊடகங்கள், தாபனங்கள் என்று பல எழுதிக் கொண்டே போகலாம். இவை ஒவ்வொன்றும் தனிப்பட்ட அலகுகளாக இருப்பதால் ஒவ்வொன்றைப் பற்றியும் சில முக்கிய விடயங்கள் பற்றிக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இவற்றை எல்லாம் கூற இவர் யார் என்று கேட்காதீர்கள். பல வருடங்களாகத் தமிழ்மொழியை ஆரம்ப பாடசாலை முதல் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி வரை கற்பித்ததாலும், பல தமிழ்மொழி வழிகாட்டு நூல்கள் ஆசிரியர்களுக்கு எழுதியதாலும், இங்கும் பல்வேறு நிலை வகுப்புக்களில் தமிழ்மொழி கற்பித்ததாலும், எனது அநுபவச்சிதறல்களை கூறுகிறேன். பெற்றோர், முதல்நிலை ஆசிரியர்கள், அவர்கள் முன்மாதிரிகை பிள்ளைகளைக் கவரும். மொழித்திறன்கள் கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் என்பர். பிள்ளைகள் தமிழ்மொழியை வீட்டிலே கேட்கப் பேச வழிவகுத்தால் மிக வலுவான கற்பித்தல் செய்தவர் ஆவீர்கள். கனட-ாவில் வதியும் தமிழறிஞர், மட்டக்களப்பு ஈழத்துப் பூராடனார், செல்வராஜா கோபாலோடு மொழிகற்பித்தல் சம்பந்தமான உரையாடல் ஏற்பட்டது. அவர் பல்வேறு நாடுகளில் புலம்பெயர்ந்த மக்கள் மத்தியிலே தமிழ் கற்பித்தல் கற்றல் பற்றி அவதானித்துள்ளார். அவர் சென்ற நாடுகளிலே பல தமிழ்மக்கள் தம்தாய் மொழியான தமிழை மறந்தாலும் ஒவ்வொரு நிகழ்வின் முன்னும் தேவாரம் தமிழில் சொல்வார்கள். ஆனால் அதில் பாடப்படும் எச்சொல்லும் தமிழ்ச் சொல் போன்றிராதாம். ஆனால் தமிழ்ப்பண் - அதன் தமிழ்த் தொனி போல் ஏதோ வாயிற் சொல்லி இறையை வாழ்த்துவராம். இதில் இருந்து மொழி கற்பிப்பதற்குச் சிறந்த ஊடகம் கோயில்கள் என்பதை மறக்கக்கூடாது. ஞாயிற்றுக்கிழமைப் பாடசாலை, வெள்ளிக்கிழமை தேவார வகுப்பு, பௌத்த சமயத்தவர் ஞாயிறு பாடசாலை நடத்தும் வகுப்புப் போல்வன உண்டு. ஆதலினால் இறை வழிபாட்டில் தமிழ் மொழி மிக விளக்கம் பெறும். சிலர் வழிபாட்டை ஆங்கில மயப்படுத்த முயல்வது தமிழ்மொழிப் பண்பாட்டைத் தொடர்ந்து காக்கும் தன்மையைக் குறைத்துவிடும். இந்து சமயத் தமிழர்களோ அன்றேல் கிறிஸ்த்துவத் தமிழர்களோ, அன்றேல் இஸ்லாமியத் தமிழர்களோ வேண்டிய இடத்துத் தாய் மொழியாம் தமிழை இறையை வழிபடுதலில் பயன்படுத்திவரின் எக்காலமும் தமிழின் பயன்பாட்டைத்தக்க வைக்கலாம் என்பது என் திண்ணமான எண்ணம்.

தமிழ்மொழியைக் கேட்க இன்று வானொலிகள் திரைப்படங்கள் உண்டு. சிறுவர்கள் வானொலியில் கேட்பதை அப்படியே கூறுவர். ஆதலினாலே பதிவுத்தட்டுகள், வானொலி நிகழ்ச்சிகள் மற்றும் ஊடகங்களில் கேட்கும் தமிழ் இயன்றளவு நற்றமிழாய் அமைதல் நன்மை பயக்கும். தண்ணீர்கள் என்றோ, சோறுகள் என்றோ, நன்றிகள் என்றோ, ஐம்பது சதங்கள் என்றோ பயன்பாட்டுத் தமிழில் இல்லை. இவைகள் கவனித்துக் கூறப்படின் நல்ல பேச்சுத் தமிழ் சிறுவர்கள் மத்தியிலே கேட்டு வளர்வதற்கு உதவி புரிந்தவர்கள் ஆகலாம். வானொலி நாடகம், கதைகள், உரையாடல்கள், தமிழ்மொழி கற்பித்தலில் உயர்ந்த அடைவு தருவதை நீடிப்பதனால் நற்றமிழ் நம்மவர் மத்தியிலே நின்றுலவும்.

தமிழ்மொழியைக் கேட்க இன்று வானொலிகள் திரைப்படங்கள் உண்டு. சிறுவர்கள் வானொலியில் கேட்பதை அப்படியே கூறுவர். ஆதலினாலே பதிவுத்தட்டுகள், வானொலி நிகழ்ச்சிகள் மற்றும் ஊடகங்களில் கேட்கும் தமிழ் இயன்றளவு நற்றமிழாய் அமைதல் நன்மை பயக்கும். தண்ணீர்கள் என்றோ, சோறுகள் என்றோ, நன்றிகள் என்றோ, ஐம்பது சதங்கள் என்றோ பயன்பாட்டுத் தமிழில் இல்லை. இவைகள் கவனித்துக் கூறப்படின் நல்ல பேச்சுத் தமிழ் சிறுவர்கள் மத்தியிலே கேட்டு வளர்வதற்கு உதவி புரிந்தவர்கள் ஆகலாம். வானொலி நாடகம், கதைகள், உரையாடல்கள், தமிழ்மொழி கற்பித்தலில் உயர்ந்த அடைவு தருவதை நீடிப்பதனால் நற்றமிழ் நம்மவர் மத்தியிலே நின்றுலவும்.

**ம.செ. அலெக்ஸ்சாந்தர்**
**முன்னாள் தமிழ் விரிவுரையாளர்**
**பலாலி ஆசிரியர் கலாசாலை**
**இலங்கை**

தமிழாசிரியர்கள் கற்பிக்கும் போது வருங்காலத்தில் தமிழை நம் பரம்பரையினரும் பயன்படுத்தக் கற்பிக்கிறோம் என்பதை உணர்ந்து கற்பித்தல் பெருமை. பிள்ளை நல்ல தமிழைக் கேட்க, பேச, வாசிக்க, எழுத வாய்ப்பளித்தல் சாலவும் சிறந்ததாகும். நீங்கள் கற்பிக்கும் போது ஏற்படும் வழுக்களையும் அவற்றிற்கான நிவிர்திகளையும் புத்தகம் எழுதும் தாபனங்களுக்குக் கொடுத்துதவலாம். இதனால் நடைமுறை இலக்கண, இலக்கியப் பயன்பாடு கற்றல் கற்பித்தலில் பயிலும். தமிழ்மொழி கற்பித்தல் ஒரு தெய்வீகத் தொண்டு, புலப்பெயர்வில் என்று சொல்லலாம். இதனால் தாய்மொழி படித்தல் புலப்பெயர்வில் பொலிவுறும் நின்று என்றும் நிலவும்.

தமிழ்மொழி ஆசிரியரின் வகுப்பவதானம் பிள்ளை தமிழ்மொழியை இலகுவாகக் கற்க வழியை ஏற்படுத்தும். கற்பிக்கும் போது, பிள்ளை கூர்மையாகத் துலங்கும் விடயங்களும் அவற்றின் பெறு பேறுகளும் அவதானிக்கப்பட வேண்டும். தமிழ்க்கலைத் தொழில்நுட்பக் கல்லூரிப் பொறுப்பாளர், இதுபற்றி எழுதுக என்று கேட்ட போது எனது சிந்தனையில் ஈழத்தில் நாம் பயன்படுத்திய முறைகளும் கனடாவில் பயன்படுத்தும் முறைகளும் ஒப்பிட்டு, எது கூடிய பலன் தருகிறதோ அதனைப் பயன்படுத்த வேண்டும். இலங்கையிலே ஒன்றிணைப்பு முறை ஆரம்பக் கல்விமுதல் இடைநிலைக் கல்விவரை பயன்படுத்திப் பொதுத்தராதரம் என்ற பெயரும் அளிக்கப்பட்டது. இங்கு கூட்டுறவுமுறை கூடிய முக்கியத்துவம் பெறுகிறது. இதிலே பிள்ளைக-ளின் ஈடுபாடு, பிள்ளைகள் பிள்ளைகளுக்கு உதவுதல், ஆசிரியர் மேற்பார்வை, வழிகாட்டு என்பன இடம் பெறுகின்றன. ஈழத்து ஒன்றிணைப்புக் கற்றல் கற்பித்தலில் விடய ஒன்றிணைப்பு, மாணவர் செய்து கற்றல், வழிகாட்டுகை, களப்பயிற்சி போல்வன முக்கியம் பெற்றன. இங்கே பல நவீன கருவிகள் மூலவளமாகக் கற்பித்தலில் பயன்படுத்தப் படுகின்றன. கணினிப்பயன்பாடு, தமிழ் கற்பித்தலில் கையாளப்பட வேண்டும். பிள்ளையைக் கவரும் விடயங்கள் கனடிய ஈழ, உலகப் பொதுமை விழுமியங்கள் அடைவு பெறக் கற்பித்தல் வேண்டும். மாணவர் செயற்பாடுகள் அறிந்து குறை நிவிர்த்திக் கற்றல் கற்பித்தல் தனிப்பட்ட உதவியும் குழு உதவியும் வகுப்புதவியும் பெற்று வழி நடத்தப்பட வேண்டும். ஆசிரியர் கருத்தரங்குகளில் கருத்துக்கள் பரிமாறப் பட்டு, சிறந்தன கடைப்பிடித்துத் தமிழ் கற்றல் கற்பித்தலை மேம்படுத்தலாம்.

## தமிழ் மொழி வாரம் சிறப்புப் பக்கம்

**யூன் 26 . 2005 - யூலை 02 . 2005**

எமது சமூகத்தின் உயிர்ப்பான இருப்பு எமது மொழியையும் எமது கலை, இலக்கியங்கள், பண்பாட்டையும் பேணி வளர்ப்பதிலேயே தங்கியுள்ளது. புலம் பெயர்ந்தாலும் மொழிப் புலமையை வளர்த்துக் கொள்கிற சமூகங்கள் வரலாற்றை வெற்றி கொள்கின்றன. தமிழ்மொழி கற்றலின் அவசியத்தையும் தமிழ்மொழியின் சிறப்பையும் வலியுறுத்தவும் தமிழுக்கு வளத்தையும் புதுமையையும் சேர்க்கவும் தமிழ்மொழி வளர்ச்சியை முன்னெடுப்பதற்காகத் தமிழ்மொழி வாரம் கொண்டாடப்படுகிறது.

“தமிழின் வாழ்வே தமிழர் வாழ்வு”

தமிழ்மொழி வாரம் புலம் பெயர்ந்த தமிழர்களாக-ிய எங்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் என்பது என் எண்ணம். தமிழ் மொழி வாழ்ந்தாலே தமிழியம் வாழும். மொழிவழிக் கலாசாரம் மேம்புறும். தமிழன் யார்? அவன் வாழ்வியல் யாது? அவர்களிடத்தே காணப்படும் வாழும் இலக்கிய இலக்கணக் கருவூலங்கள் எவை? அவற்றை எப்போதும் எந்தமிழ்ச் சிறார் வழிவழிச் சமூகம் காக்கும், பேணும் எடுத்துரைக்கும்.

“தமிழ்கற் பாரைத் தமிழே உயர்த்தும்
கனடாத் தமிழும் என்றும் நிலைக்கும்
இமிழ்தமிழ் நாதம் இயல்புற உவக்கும்
இனத்தின் வழிவழி இசைவு மலரும்
குமிக்கும் கருத்தும் தமிழால் கூடும்
இனமன இதமும் என்றும் துலங்கும்
துமிதரு குளிர்மைத் தமிழின் பண்பும்
இனமாய்ப் புலத்தில் தமிழால் நிற்கும்”

*“வாழ்க, வளர்க தமிழ்”*



# போவோமா ஊர்கோலம்

மார்ச்மாதத்தின் முதல் சனிக்கிழமை, எவ்வளவு தான் முயன்றும் இயன்றவரையில் ஊருக்கு போவது அதுவும் பத்து வருடங்களுக்கு பிறகு போவது பற்றி மனம் மகிழ்வாக இருக்கும் என்று பார்த்தால், இங்குள்ள குடும்ப நிலவரங்களால் மனைவி பிள்ளைகளை விட்டு தனியே புறப்பட வேண்டும் என்பது கவலையாய் இருந்தது. அதிலும் என்னேரமும் கால்களையே சுற்றிக் கொண்டும், வேலைவிடயமாக வெளியில் சென்று திரும்பி வர நேரமாகி விட்டால் தனது தாயாரிடம் அப்பாவை எங்கே இன்னும் காணவில்லை என்று துளைத்தெடுத்து விடும் எனது சின்னவளை விட்டு செல்வது பிரயாணத்தின் ஆர்வத்தை குறைத்தது. அதேவேளை பத்து வருடங்களாக எனது அம்மாவை கூட பார்க்காமல் எனது குடும்பம் என்று மட்டுமே இருந்துவிட்டதால், சில வேளைகளில் மனம் அலுத்துக்கொள்ளும் போது எனது குடும்பத்திற்கு எனது அருமை தெரிவதில்லை என்று எண்ணுவதும் ஞாபகத்திற்கு வந்தது. இப்படி ஒரு தடவை இவர்களை விட்டு சென்றால் தான் எனது முக்கியத்துவம் அவர்களுக்கு புரியும் என்று என்னில் இருக்கும் சிறிய குரூர மனம் ஒரு பக்கம் ஆறுதல் கூறியது. ஆனால் புறப்படும் நேரத்தில் ஒன்றுமே பேசாமல், முகத்தில் சோகம் நிழலாட அமைதியாக இருந்த எனது சின்னவள், எங்கும் போகாமல் என்னை இன்னும் ஒரு பத்து வருடங்கள் இங்கு கட்டிப்போட்டு விடுவாள் போன்று இருந்தது.

## சாதாரண மனிதனின் பார்வையிலிருந்து

**ரொறொன்ரோ சர்வதேச விமானநிலையம்.** பிரமாண்டமாக கட்டி விடப்பட்ட புதிய பிரயாணிகள் மண்டபதை பாம்புகள் படையெடுத்திருப்பது போன்று பல மக்கள் நிரைகள் நிரப்பியிருந்தன. மார்ச் விடுமுறை என்ற பெயரில் கடும் குளிரில் இருந்து தப்பிக்கொள்ள ரொறொன்ரோ நகரமே புறப்பட்டு விட்டதோ என்று எண்ணும் வகையில் பயணிகளும், வழி அனுப்ப வந்தவர்களுமாக மக்கள் வெள்ளம். பயங்கரவாதத்தின் புண்ணியத்தால் பல மணிநேரத்திற்கு முன்பாகவே விமான நிலையம் சென்று விட வேண்டும் என்ற சட்டத்தை மதித்து அங்கு சென்று இருந்த போதும், AC 348 விமானத்தை பிடிப்பதற்காக நின்றிருந்த மக்கள் கூட்டத்தை பார்த்த போது, விமானம் புறப்படும் நேரத்தையும் தாண்டி ஓடு தளத்தில் புறப்பட்டு விட்ட விமானத்தை, காங்கேசன்துறை புகையிரத நிலையத்தில் கடைசி நிமிடத்தில் ஓடிச் சென்று ஓடும் புகையிரத பெட்டிக்குள் தாவிப் பார்த்து ஏறுவது போல தான் விமானத்திலும் ஏற வேண்டி இருக்குமோ என்று எண்ணத் தோன்றியது. ஒருவழியாக பொதிகளை சமர்ப்பித்த பின்னர் உள்ளே செல்ல தயாராக இருந்த நேரத்தில் முதன்முறையாக அந்த பயண மண்டபத்தின் பிரமாண்டத்தில் எனது பிள்ளைகள் திளைத்திருந்ததனால் அவர்களின் கண்ணீர்க் கோலத்தில் இருந்து தப்ப முடிந்ததே என்று மண்டபத்திற்கு நன்றி கூறிக்கொண்டு உறவுகளை மண்டபத்தில் விட்டு விமானத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தேன்.

ஓடுதளத்தில் விமானம் மின்னல் வேகத்தில் ஓடிச் சென்று ஆகாயத்தில் தாவியது. கண்களை மூடிக்கொண்டு இஸ்ட தெய்வங்களை வேண்டிக் கொள்ளலாம் என்றால் சிதைந்து போன நியூயோர்க் உலக வர்த்தக மையங்களும், எத்தனையோ வருடங்களுக்கு முன் நடைபெற்ற, தொலைக்காட்சிகளின் புண்ணியத்தால் செய்திகள் என்ற பெயரில் பார்த்த விமான விபத்துக் காட்சிகளும் மனக்கண்களில் திரும்பவும் காட்சிகளாக ஓடத்தொடங்கின. ஆண்டவனே போய்திரும்பி வரும்வரை விமானங்களை காப்பாற்று தெய்வமே என்று வேண்டிக்கொண்டுடன், விபத்து நடந்து விட்டால் குடும்ப உறவுகள், நண்பர்கள் என்ன செய்வார்கள் என்பது போன்ற கேள்விகள் கொண்ட கற்பனைகளும் கரைபுரண்டோடத் தொடங்கியது. கவலை இன்னும் அதிகமாகியது. எனது சின்னவளின் முகம் நெஞ்சில் பாறாங்கல்லாக ஏறிக்கொண்டது. ஆகாயத்தில் பறப்பது போன்ற உணர்வு, கண்விழித்து பார்த்தால் ஜன்னலின் வழியாக புகை மண்டலத்தின் கீழே மின்னும் நட்சத்திரங்களாக ரொறொன்ரோவின் மின்விளக்குகள் ஓடி மறைந்து கொண்டிருந்தன. இனி என்ன இன்னும் சில நேரங்களில் விமானத்தினுள் பழையபடி வெளிச்சம் வந்து வனப்பு மிகு வானத்து தேவதைகள் போன்ற விமானப்பணிப் பெண்கள் இதமான சோமபானத்துடன், நாவுக்கு சுவையாக அறுசுவை உணவை படைப்பார்கள் என்று ஆவலுடன் எதிர்பார்த்திருந்த வேளையில் அதிர்ச்சி!. ஏதோ வயோதிபர் மடத்திற்குள் தவறுதலாக வந்து விட்டோமோ என்று எண்ணக்கூடிய வகையில், வயது முதிர்ந்த ஏயர் கனடா பணிப்பெண்கள் காட்சி தரத் தொடங்கியதும் ஏயர் கனடா (Air Canada) நிறுவனம் உண்மையிலேயே நிதித் தட்டுப்பாட்டில் உழல்வதாக அண்மையில் வெளிவந்த செய்திகளை உண்மைதானென ஊர்ஜிதப்படுத்துவதாக அது அமைந்திருந்தது. இப்படி பல விதமான மனப்போராட்டங்களுடன், விமானத்தில் திரையிடப்பட்ட திரைப்படத்தையாவது பார்த்து மனதிற்கு அமைதி தேடலாம் என்று எண்ணியது தான் தெரியும். ஓடுகின்ற பஸ்வண்டிக்குள் நித்திரை செய்வது போன்ற ஓர் உணர்வு. திடுக்குற்று எழும்பிய போது விமானம் இலண்டன் விமான நிலையத்தின் ஓடு தளத்தில் இறங்கி ஓடிக்கொண்டு இருந்தது. அப்பாடா! ஆண்டவனின் புண்ணியத்தில் முழுமையாக வந்து இறங்கி விட்டோம். ரொறொன்ரோவில் தூங்கும் நேரத்தில் பயணித்ததால் மனப்போராட்டம் கொடுத்த களைப்புடன் இதமான சோமபானமும் கொடுத்த உறக்கத்தால் உற்சாகத்துடன் இலண்டனில் எனது உறவுகளை சந்திக்கத் தயாரானேன். இலண்டன் இலும் பல காலம் வாழ்ந்து இருந்ததனால் சொந்த ஊருக்கு போகும் வழியில் தத்து எடுத்து வளர்த்த ஊரில் கால்வைப்பதும் சுகமே. பத்து வருடங்கள் தொடர்ச்சியாக பிரமாண்டமான ரொறொன்ரோ சாலைகளும், வாகனங்களுமாக வாழ்ந்துவிட்டு இலண்டனில் இறங்கினால் ஏதோ Pickering Miniature Village ற்குள் போன உணர்வு போன்று இலண்டன் சாலைகளும், வாகனங்களும், கட்டிடங்களும் காட்சி அளித்தன.

மூன்று நாட்களை இலண்டனில் கழித்து விட்டு கொழும்பு புறப்படும் தினம். இலண்டன் விமான நிலையம் சென்று சிறிலங்கா விமானம் புறப்படும் சேவை உறுதிப்படுத்தும் இடத்திற்குச் சென்றால் மூட்டை முடிச்சுகளுடன் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் நிற்பது போன்ற ஓர் உணர்வு. ஆங்காங்கே சில வெள்ளையினத்தவர்கள் காணப்பட்டனர். மேல்நாட்டு நாகரிகத்தில் முற்றாக மாறிவிட்ட தமிழர்களும், அரைகுறையாக ஆரம்பித்து இருப்பவர்களும், இலங்கை என்றால் என்ன இலண்டன் என்றால் என்ன எம்மை எவராலும் மாற்றிவிட முடியாது என்ற கோலம் பூண்டவர்களுமாக மண்டபம் பயணிகளால் நிறைந்து இருந்தது. அதற்குள் சில தமிழ் குழந்தைகளும், பெற்றோர்களும் விசேடமாக கவனத்தை ஈர்த்தனர். அமெரிக்காவில் பிரபலமாக சில காலங்களுக்கு முன் நடைபெற்ற தொலைக்காட்சி தொடரில் Mr. T என்றொரு கதாபாத்திரம் இருந்தது. அவர் உடல் முழுவதும் தங்கத்தால் ஆன நாய் சங்கிலிகள் போன்ற பல ஆபரணங்களை அணிந்திருப்பார். அவரது வம்சத்தில் பிறந்த இலங்கை தமிழர்களோ என்று எண்ணும் வகையில் ஆர்ப்பாட்டமாக நகைகள் அணிந்து தமக்குள்ளேயே பெருமை பிடிபடாமல் அங்கும் இங்குமாக நடைபவனி செய்து மற்றவர்களின் கவனத்தை ஈர்த்தனர். இலண்டனில் கோடீஸ்வரர்களாக தாம் வாழ்வதாக இலங்கையில் வாழும் அப்பாவி உறவுகளுக்கு தம்பட்டமடிக்க இங்கேயே அடி எடுத்துவிட்டார்கள் போலும் என்று எண்ணிக்கொண்டேன். வெளிநாட்டில் இருந்து வரும் தமிழர்களை கொழும்பில் Auto Rickshaw வில் கொண்டு சென்று ஏன் கொள்ளை அடிக்கின்றார்கள் என்ற கேள்விக்கு பதில் கிடைத்தது. கொள்ளை அடிப்பவர்களின் பக்கத்திலும் நியாயம் இருப்பதாகவே தென்பட்டது.

சிறிலங்கன் விமானம். உள்ளே கால் வைத்ததும் ஊருக்கே சென்றுவிட்டது போன்ற உணர்வினைக் கொடுத்தது. புத்தம் புதிய விமானம், புலிகளின் உபகாரமோ? பணிப்பெண்களின் சேவையும், உணவும், பொழுது போக்கு அம்சங்களும் ஏயர் கனடா இவர்களிடம் பிச்சை எடுக்க வேண்டும் என்று எண்ணும் வகையில் அமைந்திருந்தது. விமானம் புறப்பட்டு சில மணி நேரத்தில் உறங்கலாம் என்று முயற்சித்தால் உறக்கம் வராதபடி சில குழந்தைகள் வீரிட்டு அழுத வண்ணம் இருந்தன. அவர்களை யாரென கவனித்தால் நகைகளால் அலங்காரம் செய்யப்பட்ட



02

அதே தமிழ் குழந்தைகள். அவர்கள் நகைகள் குத்தி அழுகின்றார்களா? அல்லது விமானத்திற்குள் உள்ள அழுத்த மாற்றத்தினால் காதுக்குள் வலி எடுத்து அழுகின்றார்களா என்று அறிய முடியவில்லை. விமானத்தில் பயணம் செய்ய முன்பு பிள்ளைகளை குடும்ப வைத்தியரிடம் அழைத்து சென்று அவர்களுக்கு இப்படியான சந்தர்ப்பங்கள் வரும்போது கொடுக்க வேண்டிய மருந்துகள் பற்றி எல்லாம் ஆராய இவர்களுக்கு எங்கே நேரம் இருந்து இருக்க போகிறது. நகைக் கடைகளிலேயே காலத்தை செலவழித்திருப்பார்கள் போலும். ஒருவழியாக உறங்கியும், உறங்காமலும், உறவுகளை பற்றிய எண்ணங்களுமாக பயணம் தொடர்ந்தது. இறுதியில் கொழும்பு விமான நிலையமும் அருகில் வந்தது. கொழும்பு விமானநிலையத்திற்கு அருகாமையில் தாழ்வாக பறக்கும் போது காணும் பச்சைபசேல் என்ற காட்சி! ஆகா அதை அனுபவிப்பவர்களுக்கு மட்டும்தான் புரியும் தாய் மண்ணின் மகிமை. விமான ஓடுதளத்தில் விமானம் இறங்கி நிறுத்தப்பட்டபின் கதவை திறந்ததும் முகத்தில் குப்பென்று ஒரு வாடையுடன் சேர்ந்து அடித்த வெட்கை, சொர்க்கலோகத்தையே நேரில் போய் தரிசித்த உணர்வினை கொடுத்தது.

*பயணம் தொடரும்...*

ராம்ஜி

ஒரு சாதாரண மனிதன்




**உங்கள் பிள்ளைச் செல்வங்களுக்கு எமது தாய் மண்ணுடன் ஒரு தொடர்பினை ஏற்படுத்த அல்லது உங்கள் ஓய்வு காலத்தை அங்கு இன்பமாகக் களித்திட இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் வீடு நிலங்களில் முதலிட எண்ணுகிறீர்களா?**

**நம்பிக்கையுடன் தொடர்பு கொள்ளுங்கள்**

பரம்ஜி - **416.230.1107**

**PARAM. G GNANASWARAN**
Sales Representative

**HOME LIFE GTA REALTY INC.**
1711 McCowan Rd., Suite 206, Scarborough, ON

HOMELIFE
HIGHER STANDARDS

**416.321.6969**
**905.670.9969**
(Mississauga)
paramg@themathuram.com



# French Open - 2005 ரெனிஸ் துளிகள்

## அகஸ்ஸி அதிர்ச்சி தோல்வி

பிரெஞ்சு ஓபன் ரெனிஸ் போட்டியின் முதல் சுற்றிலேயே வெளியேறினார் உலகின் முன்னாள் முதல் நிலை வீரர் அமெரிக்காவின் ஆந்த்ரே அகஸ்ஸி.




ரோலண்ட் காரோஸில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் அகஸ்ஸி 5-7, 6-4, 7-6, 1-6, 0-6 என்ற செற் கணக்கில் பின்லாந்து வீரர் ஜார்கோ நீமினெனிடம் அதிர்ச்சித் தோல்வியுற்றார். தகுதிச் சுற்று மூலம் பிரதான சுற்றுக்கு முன்னேறியவர் நீமினென்.

கிராண்ட்ஸ்லாம் வரலாற்றில் அதிகமான போட்டிகளில் விளையாடிய அனுபவம் பெற்ற அகஸ்ஸி, முதல் சுற்றிலேயே தோல்வியுற்றது, ரெனிஸ் இரசிகர்களுக்கு ஏமாற்றமாக அமைந்துள்ளது. கடந்த ஆண்டும் இப் போட்டியில் முதல் சுற்றிலேயே அகஸ்ஸி தோல்வியுற்றது குறிப்பிடத்தக்கது. மூன்று மணி நேரத்துக்கும் மேலாக இப்போட்டி நீடித்தது.

## மிங்கினா அதிர்ச்சித் தோல்வி

பிரெஞ் ஓபன் ரெனிஸ் போட்டியின் முதல் சுற்றிலேயே தோல்வியுற்று, போட்டிக்கு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளார் ரஷியாவைச் சேர்ந்த நடப்பு சாம்பியன் அனஸ்தாஷியா மிஸ்கினா. பாரீஸில் திங்கட்கிழமை நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் 6-4, 4-6, 6-0 என்ற செற் கணக்கில் ஸ்பெயின் வீராங்கனை மரியா சான்செஸ் லாரன்சோவிடம் மிஸ்கினா அதிர்ச்சி தோல்வியடைந்தார். ஒரு மணி 44 நிமிடம் இந்த ஆட்டம் நீடித்தது. 23 வயதாகும் மிஸ்கினா இப் போட்டித் தரநிலையில் 5-வது இடத்தில் இருந்தார். நடப்புச் சாம்பியன் ஒருவர் முதல் சுற்றிலேயே தோல்வியுறுவது, பிரெஞ் ஓபன் வரலாற்றில் இதுவே முதல்முறை.

2004ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டியில் ஜஸ்டின் ஹெனின் 2-வது சுற்றிலும், 1990இல் அராண்ட்சா சான்செஸ் விகாரியோ 2-வது சுற்றிலும் தோல்வியுற்றதே இதற்கு முந்தைய மோசமான தோல்விகளாக அமைந்துள்ளன.

## கிரிக்கெட்

### பிராட்மனின் சாதனையை சமன் செய்தார் லாரா!

பாகிஸ்தானுக்கு எதிரான முதல் கிரிக்கெட் ரெஸ்ட் போட்டியில் 345 ஓட்டங்களைக் குவித்து முதல் இன்னிங்ஸை இழந்தது மேற்கிந்திய தீவுகள். இவ்விரு அணிகளுக்கிடையிலான முதல் ரெஸ்ட் ஜார்ஜ்டவுனில் மே 26ஆம்திகதி தொடங்கியது.

நாணயச்சுழற்சியில் (TOSS) வென்ற மேற்கிந்திய தீவுகள் முதலில் துடுப்பாடத் தொடங்கினர்.

45 ஓட்டங்களைச் சேர்ப்பதற்குள் மூன்று விக்கெட்டுகளை இழந்து திண்டாடியது மேற்கிந்தியதீவுகள். இந்நிலையில் முன்னாள் அணித்தலைவர் பிரையன் லாரா, அணித் தலைவர் சந்தர்பாலுடன் இணைந்து பாகிஸ்தான் பந்துவீச்சாளர்களின் நினைப்பை தவிடுபொடி யாக்கினர். கிடுகிடுவென ஓட்டங்களைக் குவித்து ரசிகர்களுக்கு விருந்தளித்தார்.

**எஸ். கணேஷ்**

கனேரியா வீசிய ஓவரில் அடுத்தடுத்து 2 இமாலய சிக்ஸர்களை விளாசி (90இலிருந்து 102) சதத்தை எட்டினார் லாரா.

முடிவுற்ற ஒருதினத் தொடரில் லாராவுக்கு ஓய்வு அளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. 37 வயதாகும் லாராவுக்கு இது 29-வது சதமாக அமைந்தது. இதன் மூலம் அவுஸ்திரேலிய ஜாம்பவான் டான் பிராட்மனின் 29 சத சாதனையை சமன் செய்துள்ளார் லாரா.

அத்துடன் ரெஸ்ட் போட்டியில் விளையாடும் அந்தஸ்தைப் பெற்ற 9 நாடுகளுக்கு எதிராகவும் சதம் அடித்த சிறப்பையும் திராவிட் பெற்றார். டெண்டுல்கர், காரி கிர்ஸ்டன், ஸ்டீவ் மட்டுமே ஏற்கனவே இச் சிறப்பை பெற்றுள்ளனர். 120 பந்துகளில் 130 ஓட்டங்களை குவித்திருந்தபோது கனேரியா வீசிய பந்தில் 'போல்டு' ஆனார் லாரா. அவரது எண்ணிக்கையில் 4 சிக்ஸர், 14 பவுண்டரிகள் அடங்கும். லாராவும், சந்தர்பாலும் இணைந்து 4-வது விக்கெட்டுக்கு 169 ஓட்டங்களைக் குவித்தனர். தனது 14-வது சதத்தை எட்டுவதற்கு 8 ஓட்டங்கள் தேவைப் பட்ட நிலையில் சந்தர்பால் ஆட்டமிழந்தார்.

## "விழுந்தாலும் மீசையில் மண் படவில்லை"

முதல் சுற்றிலேயே தோல்வியுற்றாலும் ஒரு சாதனையுடனே அமெரிக்காவின் ஆந்த்ரே அகஸ்ஸி ரோலன் காரோலிருந்து வெளியேறியுள்ளார். "விழுந்தாலும் மீசையில் மண்படவில்லை" என்று தப்பி விட்டார்! அதாவது 58-வது கிராண்ட் ஸ்லாம் போட்டியில் விளையாடிய சிறப்பை பெற்றுள்ளார் அவர். பங்கேற்புக்கு முன்னர் அவருக்கு இந்த விடயம் தெரியாது. அது குறித்து பேச மறுத்த அகஸ்ஸி, "எவ்வளவு அதிகமான போட்டிகளில் விளையாடுகிறீர்களோ, அவ்வளவு அதிகமான வெற்றிகளைப் பெறமுடியும், சரியா" என புன்னகை ததும்ப கூறினார்.

மைக்கேல் சாங், ஜிம்மி கானர்ஸ், இவான் லென்டில், வேய்ன் ஃபெரைரா ஆகியோர் ஓய்வு பெறுவதற்கு முன்பாக 57 ராண்ட் ஸ்லாம் போட்டிகளில் விளையாடியுள்ளனர். அகஸ்ஸி அவர்களைத் தற்போது விஞ்சியுள்ளார். 8 அவுஸ்திரேலிய ஓபன் 17 பிரெஞ் ஓபன், 13 விம்பிள்டன், 19 யு.எஸ் ஓபன் போட்டிகளில் விளையாடிய சிறப்புக்குரியவர் அகஸ்ஸி. 35 வயதாகும் அகஸ்ஸி இதுவரை 8 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார்.



இவை ஒருபுறமிருக்க தென் ஆபிரிக்காவைச் சேர்ந்த வேய்ன் ஃபெரைரா தொடர்ந்து 56 கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் விளையாடிய தனிச் சிறப்பை பெற்றுள்ளார்.


17 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

**யோகாஸ்**

**குறுக்கு எழுத்துப் போட்டி இல. 164**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | ■ | | | 3 |
| | ■ | ■ | | ■ | | ■ | |
| 4 | | | | ■ | | ■ | |
| | ■ | ■ | | ■ | | ■ | |
| ■ | | ■ | 5 | | 6 | | |
| | 7 | 8 | ■ | ■ | ■ | ■ | ■ |
| | ■ | ■ | ■ | 9 | | 10 | |
| 11 | | | | | ■ | | 12 |

**இட - வல**

1. மாமனிதர் பட்டம் பெற்ற ஊடகவியலா ளரின் புனைபெயர்
3. பூமாலை (வல-இட)
4. அப்பியாசம்
5. சுத்தம்
8. கறையான் (வல - இட)
9. குழந்தை
11. மனித உள் உறுப்பு ஒன்று
12. பறவையின் வீடு (வல - இட)

**மேல் - கீழ்**

1. கணவன் மனைவி
2. சிறிதளவு
3. இத்தளம் வீழ்ந்த ஐந்தாம் ஆண்டு வெற்றிவிழா அண்மை யில் கொண்டாடப்பட்டது
6. போட்டி (கீழ்-மேல்)
7. செழிப்பாக வளர் (கீழ் - மேல்)
9. வெண்மையைக் குறிக்கும் திரவம்
10. நஞ்சு
11. இது தன்வாயால் கெடும் என்பது பழ மொழி (கீழ் - மேல்)
12. வளைவு (கீழ்-மேல்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஒ | த் | து | க் | கொ | ள் | ■ | அ |
| த் | ■ | லா | ■ | ப் | ■ | உ | ழு |
| தி | பா | ■ | ■ | பு | ளி | ■ | க் |
| கை | க | ண் | ட | ■ | ள் | ■ | கா |
| ■ | ன் | ஊ | ■ | ■ | பு | நி | று |
| று | ■ | ■ | ம் | ■ | ற் | யா | ■ |
| ன் | ஏ | ■ | ம | ■ | கா | ■ | சை |
| ஒ | ழு | க் | க | ம் | ■ | லை | ஒ |

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக் கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் June 28, 2005க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**163இல் வெற்றி பெற்றோர்**

1) Shahila K., Mississauga
2) S. Rajaratnam, Etobicoke

- ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
- அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.
- வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!

**(416) 267-0408** 731 - 733 Kennedy Road [Ken-Mark Plaza]



**WAREHOUSE SALE**



**நம்பிக்கை, தரம், குறைந்த விலையில் நிறைந்த பொருட்கள் விசேட மலிவு விற்பனையில் உண்டு.**



- நம்பமுடியாத, வேறு எங்கும் பெறமுடியாத விலையில் Blankets.
- விதம்விதமான Shirts, T Shirts வகைகள்
- பெரியவர்களுக்கான Gloves, Shoes
- சமையலுக்குத் தேவையான பொருட்கள்
- Traveling Suitcase

இன்னும் பல பொருட்கள் மிகக் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: Raja / Shawn

**(416) 412.6180**

**40 Nugget Ave.**
**Unit #8**
**Mccowan & Nugget**



# புதிய ஆதனம் வாங்குபவர்களின் ஞாபகத்தில் இருக்க....

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

## தொடர் - 207

நீண்ட குளிர்காலத்திற்கு பிற்பாடாக காலநிலை சிறிது சிறிதாக மாறுவதும், மறைவதுமாக இருக்கின்றது. காலத்தின் கட்டாயம் காலநிலை ஓரளவு சுமுகமாக இருக்கும் என கருதுவோம். ஆதனம் வாங்க விரும்புபவர்கள் வெளியே உலாவுவதைக் காணக்கூடியதாக உள்ளது. இதற்குள் புதிதாக நிர்மாணிக்கும் வீடுகள், அடுக்குமாடிக் கட்டிடங்களில் வாங்க விரும்பும் பலரைக் காணக்கூடியதாக உள்ளது. இதற்கு உதாரணமாக கடந்த கிழமை 'Tridel' என்ற தொடர் அடுக்குமாடிக்கட்டிடம் நிர்மாணிக்கும் நிறுவனம் புதிதாக தொடங்கிவைத்த வியாபார நிலையத்தில் 20% ஆதனம் முதல் நாளே விற்பனை ஆகிவிட்டது. இந்தநிலை எவ்வளவு காலம் தொடரும் என்பதே இந்தக் கேள்விக்குறி? இதற்கு வட்டிவீதமும் ஒரு காரணமாக உள்ளது. கடந்த புதன்கிழமை, மே 25, 2005 ஆம் திகதி கனடியமத்தியவங்கி வட்டிவீதத்தில் எதுவிதமாற்றமும் செய்யாமல் விட்டுள்ளது. அமெரிக்க வட்டிவீதம் கடந்த சில மாதங்களாக அதிகரித்து வந்த போதும் கனடிய வட்டி வீதத்தில் எதுவிதமாற்றத்தையும் காண முடியவில்லை. மத்தியவங்கி அடுத்த தடவையாக யூலை 12ஆம் திகதி சந்திக்கும் போது என்ன நடக்கும் என்பதில் பொருளாதார நிபுணர்களால் முடிவிற்கு வரமுடியவில்லை.

•• பொதுவாக புதிதாக நிர்மாணிக்கும் ஆதனத்தை வாங்கும் போது, Builders இன் விலையில் தான் வாங்கவேண்டும் என்ற கட்டாயம் கிடையாது. விலையை குறைத்து கேட்கலாம். அல்லது சில Builders வீட்டின் விலையைக் குறைக்க விரும்பா விட்டால், பல Upgrades ஐ தரமுயலுவார்கள்.

எனவே ஒரு தடவை இதனைப் பற்றி உங்களுடைய ஆதன முகவருடன் கலந்துரை யாடுவது நல்ல விளைவைக் கொடுக்கலாம்.

•• பொதுவாக அடுக்குமாடிக்கட்டிடத்தை தவிர்ந்த வீடுகள் வாங்கும் போது "10 Days Cooling-Period" கிடையாது. அதாவது வீடுவாங்கும் போது எதுவித நிபந்தனைகளும் இல்லாமல் வீடுவாங்க ஒப்பந்தம் எழுதினால், நீங்கள் பிற்பாடு மனதை மாற்றினால் பல நெருக்கடிக்குள் சிக்குவதுடன், உங்களது முதற்பணத்தையும் இழக்கும் சந்தர்ப்பமும் ஏற்படலாம். எனவே குறைந்தது அடமானம் பெறுவதற்கான நிபந்தனையையும், சட்டத்தரணி யின் அறிவுறுத்தலும் தேவை என்ற நிபந்தனைகளை சேர்த்து கொள்வது எதிர்காலத் தில் ஏற்படக்கூடிய சிக்கல்களை தீர்க்க உதவும்.

கட்டிட நிறுவனம், GST ஐ அவர்களே பெற்றுக் கொள்ளுவர். அதற்கான பத்திரங்களில் நாம் ஒப்பமிடவேண்டும் என்ப தனை அவர்கள் தெரிவித்துக் கொள்வார்கள்.

• வீடுகள், கொண்டோக்கள் வாங்கும் போது மிகவும் ஆரம்பநிலையில் எதுவித Upgrades இல்லாதவற்றிற்கான விலையே நாம் செலுத்துகின்றோம். ஆதனம் வாங்குவதற்கான

> ரொறொன்ரோ பெரும்பாகத்தில் (Greater Toronto Area - GTA இல் விற்கப்படும் உயரம் குறைந்த வீடுகள்: தனிவீடு (Detached house), இரண்டு சேர்ந்த வீடுகள் (link house), தொடர் வீடுகள் (Semi Detached), Freehold town house மற்றும் மாதாந்த கட்டுப்பணம் செலுத்தப்படும் தொடர்வீடுகள் (Condo townhouses) மற்றும் தொடர் அடுக்குவீடுகள் (Condo apartment) யாவற்றிலும் GST சேர்த்தே விற்கப்படு கின்றது. GST வீட்டின விலையில் சேர்க்கப்பட்டுள்ளது. புதிதாக வாங்கும் வீடுக ளிற்கு மேலதிகமாக GST செலுத்ததேவையில்லை. இதேமாதிரி (ஏற்கனவே வசித்த வீடுகளிற்கும் GST செலுத்த தேவையில்லை என்பதனையும் கவனத்தில் கொள்க.

ரொறொன்ரோ பெரும்பாகத்தில் (Greater Toronto Area - GTA இல் விற்கப்படும் உயரம் குறைந்த வீடுகள்: தனிவீடு (Detached house), இரண்டு சேர்ந்த வீடுகள் (link house), தொடர் வீடுகள் (Semi Detached), Freehold town house மற்றும் மாதாந்த கட்டுப்பணம் செலுத்தப்படும் தொடர்வீடுகள் (Condo townhouses) மற்றும் தொடர் அடுக்குவீடுகள் (Condo apartment) யாவற்றிலும் GST சேர்த்தே விற்கப்படுகின்றது. GST வீட்டின விலையில் சேர்க்கப்பட்டுள்ளது. புதிதாக வாங் கும் வீடுகளிற்கு மேலதிகமாக GST செலுத்த தேவையில்லை. இதேமாதிரி (ஏற்கனவே வசித்த வீடுகளிற்கும் GST செலுத்த தேவை யில்லை என்பதனையும் கவனத்தில் கொள்க.

இருந்தும், புதிதாக நிர்மாணிக்கும் ஆதனத்தை வாங்கும்போது GST சேர்க்கப்பட்டுள்ளதா, அல்லது மேலதிகமாக செலுத்த வேண்டுமா என்பதனையும் அறிந்து கொள்ளுதல் வேண்டும். பொதுவாக பத்திரத்தில் ஒப்பமிடுவதற்கு முன்பாக வீட்டுடன் என்னென்ன சேர்த்து வருகின்றது என்பதனையும் அறிந்து கொள்ள வேண்டும். Model Home இல் இருப்பது போல் எல்லாம் இருக்கும் என்று நினைப்பது தவறு. Model Home best of best பிற்பாடு சேர்ந்து கொள்ளமுடியாது. வீட்டின் அளவைப் பொறுத்து இந்த Upgrades ஐ பெற்றுக் கொள்வது நல்லது. எனவே உங்களுடைய ஆதனமுகவரைக் கொண்டு எந்தெந்த Upgrades எடுப்பது நல்லது என்பதனை அறிந்து கொள்ளவும்.

• ஆதனம் வாங்குவதற்காக கொடுத்தவிலையை விட வேறு எந்தெந்த செலவுகள் வரும் என்பதனை ஆரம்பத்திலே அறிந்து கொள்ள வேண்டும்.

மேலதிக செலவுகளாக Tree Planting fee grading செய்வதற்காக திருப்பிதரக்கூடிய முற்பணம் (Refundable grading deposit) Warranty, Development charge, driveway Paving charge, Hydro, Gas, meter Hook-up charge... போன்றவற்றை குறிப்பிடலம்.

(இந்த செலவுகளை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்காக ஆகக்கூடிய எவ்வளவு செலவு வரும் என்பதனை கட்டிடத்தின் வீட்டுப் பிரதிநிதி எழுத்தில் வாங்கி கொள்ள முயற்சி செய்யலாம், எதற்கும் சட்டத்தரணியின் ஆலோசனை பெறுவது நல்லது. முக்கியமான இன்னொரு விடயம் Completion, Closing date என அழைக்கப்படும் திறப்பு/சாவி பெறும் நாள்.

வீடு வாங்கும் போது (Condominium, Town house, Apartment தவிர்ந்த) ஒரு குறிப்பிட்ட திகதி குறிக்கப்பட வேண்டும். Building, Closing date ஐ 120 நாட்கள் வரை நீடிக்கலாம்.

உங்களிற்கு போதியளவு கால அவகாசம் தராமல் Closing date ஐ நீடித்தால் ஒரு நாளைக்கு $100 தொடக்கம் ஆகக் கூடியதாக $5000 வரை வீடு வாங்குபவரிற்கு செலுத்த வேண்டும்.

(Condominium town house, Apartment வாங்கும் போது Tentative occupancy திகதி அல்லது Confirmed occupancy திகதி தரப்படும். இதற்கு இரண்டு Closing இருக்கின்றது என்பதனை ஞாபகத்தில் கொள்ளவும்)

• வீடு வாங்கிய பிற்பாடு, முக்கியமானதாக காணப்படும் சேவைகள், கட்டிட நிறுவனத்தால் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பதனை தெரிந்திருக்க வேண்டும்.



Baby Boomers in their 50s 32%.
It total Population 32 million Baby Boomers 10.2 m.


Neilson/Sheppard



Detached 2- Storey
5 +1 Bedrooms, 2 kitchens
New Windows
Easy Access to Shopping, TTC
$259,900

Taunton(Steels)/Westny



Brand New Detached 2-Storey
Tribute Builders, 9'Ceiling
50' Frontage, over $40k Upgrades
3198 SFT, Hardwood Floor
4 Bedrooms, 4 washrooms
$439,900

Old Harwood/Hwy#2



Detached 2- Storey
4 +1 Bedrooms, 2 kitchens,
4 Washrooms
Walkout Basement
$339,900

Warden/Lawrence



Free Standing building
Central Location
Clean Office Space
Close To Major Hwys
$1,200,000

Lawrence/Beechgrove

LAND FOR SALE

One Acre Vacant Industrial Lot
Survey Available
Lot Is Graded + Flat.
Easy Access To Hwy 401
Plans For 20,000 Sft Warehouse
Approved + Included
$349,000

Markham/Denison
Detached-Storey
Bedrooms: 4+2
4 Washrooms
Kitchen: 2,
Finished Bsmt. With Sept.Entrance
$364,000



HOMELIFE HIGHER STANDARDS

Raja Mahendran, P.Eng.
Broker/Owner
Cell: 416.315.9397
Off : 416.321.6969



HOMELIFE/GTA Realty Inc. 1711McCowan Rd. Suite 206, Toronto, ON M1S-3Y3

# அரங்க நடிகர்

நாடகமே உலகம் என்பது முது மொழி. உலகம் ஓர் அரங்கு. அதில் மக்கள் எல்லோரும் நடிகர்கள் என்கிறார் நாடக மேதை சேக்ஸ்பியர்.

மக்கள் உலக அரங்கிலே பிறந்து வெவ்வேறு பாத்திரங்களைத் தாங்கித் தத்தம் வாழ்க்கையை நடத்தி முடித்து அரங்கைவிட்டு அகன்றுவிடுவது (இறந்துவிடுவது) உலக இயல்பு. மகனாக, மகளாக, தாயாக, தந்தையாக, பேரனாக, பேர்த்தியாக, அண்ணனாக, தம்பியாக, தமக்கையாக, தங்கையாக, மாமனாக, மாமியாக. முதலாளியாக, தொழிலாளியாக - இப்படி எத்தனையோ பாத்திரங்கள்! இப் பாத்திரங்களில் மேற்கொள்ளப்படும் இயக்கத்துக்கு (வினைகளுக்கு) வேலை, தொழில், கடமை என்றெல்லாம் பெயர்கள். நடிப்பு என்று அவற்றை யாரும் சொல்வதில்லை.

**கவிஞர் வி. கந்தவனம்**

ஆயின், அவ்விதமான வேலைகளிலோ கடமைகளிலோ ஈடுபடுகையில் ஏதாவது ஒரு கட்டத்தில் - முக்கியமாக ஒன்றை இன்னொன்றாகப் பாவிக்கும் நிலைமைகளில் - மக்கள் நடிப்புக்குள்ளாவர். குழந்தை பாவைப்பிள்ளைக்குப் பால் ஊட்டுவது, திரைப்படம் ஒன்றைப் பார்த்துவிட்டு அப்படத்துக் கதாநாயகனைப்போல ஆண்களும் கதாநாயகியைப்போலப் பெண்களும் பாவனை பண்ணுவது, கோழை ஒருவன் தனக்குப் பிடித்த வீரனைப்போல் தன்னைப் பாவிப்பது எல்லாமே ஒருவகை நடிப்புத்தான். என்றாலும் அது பொதுவாக உணரப்படுவதில்லை.

விதிவிலக்காக, 'நாடகத்தால் உன் அடியார்போல் நடித்து ...' என்று பாடிய மாணிக்கவாசகரைப் போல சிலர் தாம் செய்வது நடிப்புத்தான் என்பதை உணருவது முண்டு. உணர்ந்து வேண்டுமென்றே தமது எண்ணங்களை நிறைவேற்றுவதற்காக நடிப்பை ஒரு தற்காலிகக் கருவியாகப் பயன்படுத்துவதும் உலக வழக்காக இருந்துவருகிறது.



இவ்வித நடிப்பால் மற்றவருக்கு நன்மையுண்டாகுமெனின் அது வரவேற்கப்பட வேண்டிய தொன்றே. வள்ளுவர் பெருமானும்,

பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்

என்ற குறளால் இதனையே வலியுறுத்துகின்றார்.

பாவனை பண்ணுதல் உலகியல் வழக்கில் இயல்பானதெனினும் அதற்கும் அரங்க நடிப்புக்கும் நிறையவே வேறுபாடுகள் உள்ளன. அதுபோலவே தெரிந்தோ தெரியாமலோ வாழ்க்கையில் நடிப்பவரும் நடிப்பைக் கலையாக் கொண்டு அரங்கேறி நடிப்பவரும் வேறானவர்.

## நடிகர் தகைமை

அரங்க நடிகர் ஒரு கலைஞர். ஏனைய கலைகளிலும் அதிக ஊக்கமும் உழைப்பும் தேவைப்படும் கலைஞர். தன்னை எந்த நேரமும் தயார் நிலையில் வைத்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமும் இவருக்கு உண்டு.

அரங்கத்துக்கு நடிப்பதும் திரைப்படத்துக்கு அல்லது தொலைக்காட்சிக்கு நடிப்பதும் ஒன்றல்ல. திரைப்படக் காட்சிகளிலோ தொலைக்காட்சி நாடகங்களிலோ பிழைகள் விட்டால் அல்லது இயக்குநர் எதிர்பார்த்த அளவுக்கு நடிப்பு அமையவில்லை யென்றால் அவற்றைத் திருப்பி எடுக்கலாம் - எத்தனை முறை வேண்டுமென்றாலும் எடுக்கலாம். எடுத்து முடிந்தபின்னருங்கூட, அவற்றைச் செம்மைப் படுத்தும் முறைகளும் உள்ளன.

அரங்க நடிகருக்கு இத்தகைய வாய்ப்புக்கள் இல்லை. அரங்கில் அவர் தோன்றிவிட்டால் நடிப்புத் தொடருதல் வேண்டும். பிழைகள், தடைகள் நேரவே கூடாது.

திரைப்பட, தொலைக்காட்சி நடிகர் விட்டு விட்டு, களைப்பாறி நடிக்கலாம். இந்த வாய்ப்பு எல்லாக் காட்சிகளிலும் தோன்றும் அரங்க நடிகருக்கு இல்லவே இல்லை. பொதுவாக ஒரு முழுமையான நாடகம் இரண்டரை அல்லது மூன்று மணிவரை நீடிக்கும். இந்த நேரம் முழுவதும் அயராத ஊக்கத்துடன் நடிக்கும் ஆற்றல் நடிகருக்கு இருத்தல் வேண்டும்.

அரங்க நடிகருக்கு இருக்க வேண்டிய மற்றுமொரு தகைமை நினைவாற்றல். வசனங்களை மனப்பாடஞ் செய்யவேண்டியது அவரது பொறுப்பு - தலையாய பொறுப்பு. திரைப்பட நடிகர் பகுதி பகுதியாக (காட்சி காட்சியாக) வசனங்களைப் பாடமாக்கலாம். அரங்க நடிகர் நாடகத்தில் தான் பேச வேண்டிய வசனங்கள் முழுவதையும் மனப்பாடஞ் செய்தாக வேண்டும். அது மட்டுமல்லாது சக நடிகர்கள் பேசும் வசனங்களையும் தெரிந்திருத்தல் வேண்டும். பயிற்சி முறையால் நினைவாற்றலை வளர்த்துக்கொள்ள வேண்டியது இவர் பொறுப்பு.



அரங்க நடிகருக்குக் கற்பனைத் திறன் இருத்தலும் நல்லது. வசனங்களிலிருந்து தனது பாத்திரத்தின் ஆளுமை எவ்விதம் இருக்கும் என்று ஊகிப்பதற்கும் அதற்கேற்ற வகையில் வசனங்களை எப்படிப் பேசலாம் என்று சிந்தித்து ஒரு முடிவுக்கு வருவதற்கும் கற்பனைத் திறன் நடிகருக்கு உதவியாக இருக்கும்.

திரைப்படம் எடுக்கப்படுகையில் பார்வையாளர் கூட்டம் நடிகர்முன் இருப்பதில்லை. (சில தொலைக்காட்சி நகைச்சுவை நாடகங்கள் அழைக்கப்பட்ட பார்வையாளர்முன் ஒளிப்பதிவு செய்யப்படுவதுண்டு.) அரங்க நடிகர் என்போர் அவையோர்முன் நேரடியாகத் தோன்றி நடிப்பவர். இத்தன்மை மற்றையவகை நடிகரிலிருந்து அரங்க நடிகரை மிகவே தனித்துவப் படுத்துவதுடன் அவர்களுக்கு வேண்டப்படும் தகைமைகளையும் அதிகரிக்கின்றது. அவற்றுள் உடல் நலம், குரல் வளம் என்பன முதன்மை வாய்ந்தவை.



- தொடரும்...


தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்

# ரவி நடராஜா



• வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும், உரிய இழப்பீடுகள், மற்றைய இழப்பீடுகள், விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள் Accident & Traffic Ticket

(14 Years Insurance Claims Experience)

416-245-6555 2095 Weston Road, Suite 203, Toronto, ON

416-755-2801 2390 Eglinton Ave., E. Suite 223, Scarborough, ON



# SRI PARADISE Catering & Take -out



416.269.4509

292 Markham Road, Scarborough, ON

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திங்கள் - செவ்வாய் சிங்கப்பூர் நூடில்ஸ் (கோழி மரக்கறிகளுடன்) | புதன் - வியாழன் கொத்துரொட்டி ஆடு மாடு கோழி | வெள்ளி மரக்கறிச்சாப்பாடு 5 மரக்கறி, சலாட், பப்படம், ரசம், மிளகாய்ப்பொரியல், அச்சாறு, பாயாசம், வடை | Daily special மரக்கறிச்சாப்பாடு 3 மரக்கறி சலாட், பப்படம் ரசம், மிளகாய்ப்பொரியல், அச்சாறு | Dinner Special சிங்கப்பூர் நூடில்ஸ் கோழி மரக்கறிகளுடன் | சனி - ஞாயிறு Lunch Special வாழையிலைச் சாப்பாடு கோழி, ஆடு, மாடு, இறால், நண்டு, மீன், முட்டை, கருவாடு, அச்சாறு, கட்டைச் சம்பல், மீன் பொரியல், கட்லட், உருளைக் கிழங்கு, நெத்தலி பிரட்டல், கத்தரிக்காய் பிரட்டல் |
| $2.99 | $2.99 | $4.50 | $2.99 | $2.99 | $5.99 |



| | | |
|---|---|---|
| பரடைசின் Special புரியாணி, தண்டூரி சிக்கன், இஞ்சிச் சம்பல், salad | Dinner Special மசாலா தோசை, சாம்பாறு, சம்பல் | Daily Special பரடைசின் Special புரியாணி சிக்கன்கறி சலாட் முட்டை |
| $2.99 | $1.99 | $2.99 |

*Sri Paradiase Specials*

- 10LB அவித்த கோதுமை மா - $3.99
- ரொட்டி .50¢
- விசேட வைபவங்களுக்குத் தேவையான 6 வகையான Combo package. 20 பேர் கொண்ட சபைக்கு $99 மட்டுமே.
- மாதத்திற்குரிய சாப்பாடு - 1 நேரச் சாப்பாடு 1 மாதத்திற்கு - $99.00
  2 நேரச் சாப்பாடு 1 மாதத்திற்கு - $150.00

சமையலில் அனுபவம் உள்ளவர்கள் வேலைக்குத் தேவை. தொடர்பு கொள்ளவும்

25 மேல் கொள்வனவு செய்வோருக்கு 10LB அவித்த மா இலவசம்

# சிங்கள மக்களை யுத்த அபாயத்துக்கு அழைத்துச் செல்கின்றது ஜே.வி.பி

'புலிகளை அங்கீகரிக்காமல், அவர்களுடன் பேசாமல் எப்படி யுத்தத்தை நிறுத்துவது. புலிகளை அங்கீகரிக்காவிடில் எவ்வாறு அவர் களுடன் அரசாங்கம் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டது. இது பற்றி யெல்லாம் எந்த சிந்தனையும், பொறுப்புணர்வும் இல்லாமல், ஜே.வி.பி செயல்படுகின்றது. விடுதலைப் புலிகள் தமது பிரதேச மக்களை பிரதிநிதித்துவப் படுத்துகின்றார்கள் என்பதை ஜே.வி.பி மறந்துவிட்டது. ஜே.வி.பி யின் இந்த வேலை சிங்கள மக்களை மற்றுமோர் யுத்த அபாயத்தில் கொண்டு சென்று நிறுத்தப் போகின்றது.'

1971ம் ஆண்டை இலங்கை மக்கள் மறந்து விடமுடியாது. தனது அரசியல் செயல்பாடு காரணமாக, சரத் பெர்னான்டோ 1971ம் ஆண்டு, முதல் தடவையாக இலங்கை ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டார். அப்போது இயந்திரவியல் பீடத்தின் கடைசி வருட மாணவனாக இருந்தார். நான்கு ஆண்டு காலம் சிறை வைக்கப்பட்டிருந்த சரத், விடுதலை செய்யப்பட்டதன் பின்னர், தனது இறுதி ஆண்டு பரீட்சையைப் பற்றி ஒரு போதும் நினைத்ததில்லை. பல இடர்பாடுகளின் மத்தியிலும், அவர் நினைத்ததெல்லாம் மக்களுக்காக எவ்வாறு செயலாற்றுவது என்பதேயாகும்.

இலங்கையில் இருந்து, சுனாமிக்குப் பின்னான நிகழ்வுகள் குறித்து பேசுவதற்காக விசேடமாகக் கனடா வந்திருந்த சரத் பெர்னான்டோ இவ்வாறு எம்மிடம் தெரிவித்தார்.

1990ம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து இன்றுவரை காணி, விவசாய சீர்திருத்தங் களுக்கான தேசிய இயக்கத்தில் (Movement for National and Agricultural Reform (MONLAR) சரத் பெர்னான்டோ பணியாற்றுகின்றார். அந்த அமைப்பின் இணைச் செயலாளராக உள்ள இவர், தேசிய இனப்பிரச்சினை பற்றி அதிக அக்கறை கொண்டவர். தமிழ் மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள், இன்னல்களை தென் இலங்கையில், சிங்கள மக்கள் மத்தியில் தொடர்ந்து எடுத்துச் சொல்லி பணியாற்றியும் வருகின்றார்.

சுனாமியின் காரணமாக இலங்கைக்கு கிடைக்கின்ற பணத்தை பயன்படுத்தி, இலங்கையை மறுபடி கட்டி எழுப்புவதற்கு என்று சந்திரிகாவினால் அமைக்கப்பட்ட உத்தியோக பூர்வமான அமைப்பில் உள்ள பத்துப் பேரில் எட்டுப்பேர், இலங்கையின் பிரபலமான முதலாளிகள். பெரும் கம்பனிகளும், பங்குச் சந்தைகளும், சுற்றுலா கம்பனிகளும் ஆகும்.

அது மட்டுமா? இந்த எட்டுப்பேரில் ஒருவரான ஹரி ஜெயவர்தன ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர். விசாரணைக்குட்படுத்தப்பட்டவர். பின்னர் விசாரணைகள் முடிவடையாமலே ஜனாதிபதியின் பொருளாதார திட்ட தலைமை ஆலோசகரா நியமிக்கப்பட்டவர். இவர்கள்தான் சுனாமி காரணமாக இலங்கைக்கு கிடைக்கின்ற பணத்தை எவ்வாறு செலவழிப்பது, எந்த திட்டத்துக்கு செலவழிப்பது என்பது குறித்தெல்லாம் முடிவெடுக்க அதிகாரம் படைத்தவர்கள். இலங்கையின் தலைமை முதலாளிகளும், ஊழல் பேர்வழிகளும் சேர்ந்து சுனாமியால் இலங்கைக்கு கிடைக்கின்ற பணத்தை மக்களின் நலனுக்காக பயன்படுத்தவா போகின்றார்கள்? என்ற கேள்வி, எமக்குள் எழுந்தது நியாயம் தானே.

'மக்களின் நலனுக்காக இந்த சுனாமிப் பணம் பயன் படுத்தப்படவே போவதில்லை. இந்தப் பணம், உலக வங்கியின் ஆலோசனைப்படி ஏற்கனவே இலங்கை அரசினால் திட்டமிடப்பட்ட மக்கள் விரோத காரியங்களுக்கே பயன் பயன்படுத்தப்பட உள்ளது' என்று திட்டவட்டமாக சரத் பெர்னான்டோ எம்மிடம் தெரிவித்தார்.

சுனாமிக்குப் பின் இலங்கையில் என்ன நிகழ்கின்றது என்பது குறித்து பல நாடுகளுக்குச் சென்று தனது கருத்தை தெரிவித்து வரும் சரத் மேலும் கூறுகையில், 'சுனாமியால், அறுபது வீதத்திற்கு அதிகமான இழப்பு வடக்கு கிழக்கிலேயே நடந்துள்ளது என்று இலங்கை அரசாங்கமே ஒத்துக் கொண்டுள்ளது. விடுதலைப் புலிகள் தமது பகுதிகளில் நடைபெறும் சகல மீள் கட்டியெழுப்பும் வேலைகளும் தமது கண்காணிப்பின் கீழ் நடை பெற வேண்டும் என்று விரும்புகின்றார்கள். குறிப்பாக வடக்கு கிழக்கில் இயங்கும் TRO அமைப்பினாலேயே நடைபெற வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றனர். தங்கள் சொந்த நிலங்களில் நடைபெற வேண்டிய காரியங்களை தாமே தீர்மானிக்கும் உரிமை புலிகளுக்கு உண்டு என்று நான் நம்புகின்றேன்.' என்று இவர் கூறுகின்றார்.

'அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில், அதிகாரத்தில் உள்ளவர்களான, பிரதம மந்திரி, மந்திரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் என்று எல்லாருமே, சுனாமி உதவிகள் எங்கு போய் சேரவேண்டும் என்பதை, தங்கள் கைகளுக்குள் வைத்துக் கொண்டுள்ளனர். இதில் மக்களின் நலன் என்பதே கிடையாது. தமது சொந்த அரசியல் நலனை முன்வைத்தே இவர்கள் செயல் படுகின்றார்கள். JVP யும் இதே போலச் செயல் படுகின்றது. ஆனால் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இயங்கும் TRO இவ்வாறு செயல்படவில்லை. பாதிப்படைந்த மக்கள் அனைவருக்குமாக அவர்கள் தங்கள் பிரதேசத்தில் செயல்படுகின்றனர்.'

'சுனாமியால் பாதிக்கப்பட்ட, இலங்கையின் எந்தப்பகுதி மக்களுக்குமே உடனடி நிவாரணத்தை இலங்கை அரசு வழங்கவில்லை'. இலங்கை அரசின் போக்கு குறித்து சாடுகின்ற சரத் பெர்னான்டோ, 'சுனாமியால் பாதிக்கப்பட்டு பரிதவித்து நின்ற மக்களுக்கு உடனடியாக உதவியது இலங்கை மக்களே' என்றும் குறிப்பிடுகின்றார்.

அரசாங்கம் செய்தது என்ன? என்பது குறித்து குறிப்பிடும் போது, 'பாடசாலைகள், தேவாலயங்கள், கோயில்களில் அகதிகளாக மக்கள் வந்து ஐந்து மாதங்களின் பின்னர், ஆள் ஒன்றுக்கு, 375ரூபாய் பெறுமதியான பொருட்கள், 200 ரூபாய் காசு பணமாக மற்றும் 175 ரூபாய் பெறுமதியான உணவு வழங்கியது மட்டுமே' என்று சரத் சொல்கின்றார்.



'பின்னர் சுனாமியால் இறந்த ஒவ்வொருவருக்கும் பதினைந்து ஆயிரம் ரூபாயை இலங்கை அரசு வழங்கியது. அத்தோடு பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றுக்கு 5ஆயிரம் ரூபாய் பணத்தை நான்கு மாதங்களுக்கு வழங்கியது. ஆனால் இவை எல்லாக் குடும்பங்களுக்கும் கிடைத்தது என்று சொல்ல முடியாது. அதே சமயம் தலைமுறை தலைமுறையாக தாங்கள் வசித்த கரையோரப் பகுதிகளை விட்டு, அரசாங்க உத்தரவின் பிரகாரம் வெளியேற மறுத்த (குறிப்பாக காலி, அம்பாந்தோட்டை, மாத்தறை பகுதி) மக்களுக்கு ஒன்றுமே கிடைக்கவில்லை. 375 ரூபாய் பெறுமதியான பொருட்கள், 200 ரூபாய் பணம், 175 ரூபாய் பெறுமதியான உணவு கூட இவர்களுக்குக் கிடைக்கவில்லை.' என்று சரத் குறிப்பிடும் போது உலகம் எல்லாம் இருந்து குவிந்த பணம், பாதிக்கப்பட்ட எல்லா மக்களுக்கும் கிடைக்கும் என்று நம்பி இருந்தவர்களுக்கு நிச்சயமாக பெரும் துயரமாகவும், ஏமாற்றமாகவும் இருக்கும்.

'ஏன் இந்த கரையோரப் பகுதி மக்களை, அந்த இடத்தில் இருந்து வெளியேறுமாறு அரசு வற்புறுத்துகின்றது?' என்று கேட்டோம்.

'மீண்டும் ஒரு சுனாமி ஏற்படுமாயின், கடற்கரையை ஒட்டி வாழும் மக்களைப் பாதுகாப்பதற்கு என்று ஒரு திட்டத்தை இலங்கை அரசு வகுத்துள்ளது. அதன் பிரகாரம் கிழக்குக் கடற்கரைப் பகுதியில், கடலில் இருந்து 200 மீற்றர் தூரம் வரை மக்கள் யாருமே குடியிருக்க முடியாது. அதுபோல் தெற்கு, மேற்கு கடற்கரைப் பகுதியில் கடலில் இருந்து 100 மீற்றர் தூரம்வரை மக்கள் எவரும் குடியிருக்கக் கூடாது என்று அரச ஆணை கூறுகின்றது. இந்த வலயத்தை பாதுகாப்பு வலயம் என்று அரசு பிரகடனப்படுத்தி உள்ளது'.

'தலைமுறை தலைமுறையாக இந்தப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் எவருமே, சுனாமியால் பாதிக்கப்பட்ட தமது குடிசைகளை மறுபடியும் புனருத்தானம் செய்யமுடியாது அரசினால் தடுக்கப்பட்டுள்ளனர். ஆனால் இதில் உள்ள வேடிக்கை என்னவென்றால், இதே பாதுகாப்பு வலயத்தினுள் இருக்கின்ற அனைத்து சுற்றுலா விடுதிகள், ஹோட்டல்கள் எல்லாமே மறுபடி தங்களை புதுப்பித்துக் கொண்டு செயல்பட அரசு உடனடியாகவே அனுமதி அளித்துள்ளது.' என்று சரத் கூறுகின்றார்.

'சுனாமிக்கு மிக நீண்ட நாட்களுக்கு முன்பாக உலக வங்கி இலங்கை அரசிற்கு வழங்கிய திட்டத்தின்படி, கடற்கரையை ஒட்டி வாழும் மக்களை அந்த இடத்தில் இருந்து அகற்றிவிட்டு, கடற்கரையை சுற்றுலாப் பயணிகளுக்காக ஒதுக்கி விடவேண்டும் என்பதாகும். அந்த திட்டத்தை எப்படி அமுல்படுத்துவது என்று திண்டாடிக் கொண்டிருந்த அரசு, சுனாமியை பாவித்து இப்போ அமுல்படுத்தத் தொடங்கியுள் ளது.' என்று சரத் கூறும்போது, உலக வங்கியின் உதவியுடன் இலங்கை அரசு போடும் சதித் திட்டம் எமக்கு இலேசாகப் புரியத் தொடங்கியது.

இந்த சதித்திட்டத்தைப் புரிந்து கொண்டு, அதற்கு அடிபணிய மறுக்கின்ற மக்களை, அவர்களுக்கு வழங்க வேண்டிய நிவாரணத்தை வழங்காமல் இலங்கை அரசு பழிவாங்குகின்றது என்பது உங்களுக்கும் இப்போ புரிந்திருக்கும்.

(அடுத்த இதழில் முடியும்)

'பாடசாலைகள் மறுபடியும் ஆரம்பிக்க வேண்டும். தேவாலயங்கள் தமது பணிகளைத் தொடரவேண்டும் என்பதால் அங்கு தொடர்ந்தும் மக்கள் இருக்க முடியாது. இங்கெல்லாம் சுனாமி அகதிகளாக இருந்த மக்களுக்கு தற்காலிக குடியிருப்புகள் அமைக்கப்பட்டன. இதற்காக ஒரு குடும்பத்திற்கு 25 ஆயிரம் என்று இருபது மில்லியன் அமெரிக்க டொலர் இலங்கை அரசினால் ஒதுக்கப்பட்டது. ஆனால் இந்த தற்காலிக குடியிருப்புகளை அமைத்தது அரசாங்கம் அல்ல. அரசு சார்பற்ற தன்னார்வ நிறுவனங்களே. இருபது மில்லியன் அமெரிக்க டொலரில் இருந்து ஒரு சதம் கூட அரசாங்கத்தால் செலவழிக்கப்படவில்லை.'

'இந்த தற்காலிக குடியிருப்புகள் துணிகளால் ஆனவை. இலங்கையின் கால நிலையை கருத்திற் கொள்ளாமல் அமைக்கப்பட்டவையே இவை. முப்பத்தி ஐந்து, நாற்பது, ஐம்பது பாகை வெப்பநிலையில் இந்த குடியிருப்புக்குள் போகவே முடியாது. குறிப்பாக சிறுவர்கள், வயது போனவர்கள் என்பவர்களால் இந்த குடியிருப்புக் களுக்குள் உள்ள வெப்பத்தை தாங்கவே முடியாது. அதனால் மக்கள் இந்த தற்காலிக குடியிருப்புக்குள் பகல் நேரத்தில் போவதில்லை. இரவு நேரத்தில் மட்டுமே போகின்றனர்.'

'தற்காலிக குடியிருப்புகளை விடுங்கள். நிரந்தர குடியிருப்புகளுக்காக குடும்பம் ஒன்றுக்கு நூறு ஆயிரம் ரூபாயை இலங்கை அரசு ஒதுக்கியுள்ளது. ஆனால் இதற்காகக் கூட ஒரு சதத்தையும் இலங்கை அரசு செலவிடப் போவதில்லை. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் நிரந்தர குடியுருப்புக்களை அமைப்பதற் காக அரசு சார்பு அற்ற உள்ளநாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒப்பந்தந்தை ஏற்படுத்தவே அரசு காத்திருக்கின்றது.'


SAMI DAYCARE



* மாதம் தொடக்கம் 6 வயதுச் சிறார்களுக்குச் சிறந்த பராமரிப்பு
* ECE தகுதி பெற்ற நடத்துனர் * TAX RECEIPT வழங்கப்படும்
* காலை 7:00 மணி - மாலை 6:00 மணி வரை * மாலை 6:00 மணி - மாலை 10:00 மணி வரை * சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் பிள்ளைகள் பராமரிக்கப்படும்

1 Hr. - $3.00
Day - $15.00
Week - $75.00

Summer Daycare - $60 with food & Everything
தினசரி நடவடிக்கைகள் * உள்ளக, வெளியக, விளையாட்டுக்கள், தமிழ் ஆங்கிலம் படிப்பித்தல், இரு நேர உணவு, வெளிப்புறச் சுற்றுலா.

#7 Birchcrest Court (Finch / Warden) Mrs.S.J. சௌந்தரநாயகம் 416-502-3033

*The Mortgage Alliance company of Canada*





**வீடு வாங்குவது நீங்கள்**
**பணம் ஒழுங்கு செய்வது நான்**

*உங்கள் இல்லத்தை 5% முற்பணத்துடன் கொள்வனவு செய்வதற்கு வங்கி வட்டி வீதத்தைவிட குறைவாக வீடு மற்றும் வியாபார 1ஆவது, 2ஆவது, 3ஆவது அடமான கடன் பெற நாடுங்கள் - காந்தன்*

Tel.: 416.291.3997
Cell: 416.895.4283

குறைந்தவட்டி நிறைந்த பலன்



YARL WINDOW
BLINDS & DRAPERY

BLINDS DRAPERIES AND SHUTTERS

- Venetian Blinds
- Vertical Blinds
- Roller Shades
- Pleated Shades
- Cellular Shades

FREE ESTIMATE

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்



விபரங்களுக்கு: என். செல்வம் - 905.201.7733
416.806.5397
5210 Finch Ave., E. Unit #3 (Middlefield & Finch) Scarborough, ON

மேலைத் தேசத்தில்

கீழைத் தேசத்து வாசனைகள்...

# Niru BRAND ®

## எமது புதிய அறிமுகங்கள்




Niru Niru

Imported & Marketed By:

**NIRU ENTERPRISES INC.**
76, Howden Road, Scarborough.
Ontario, CANADA, M1R 3 E 4
Tel: (416) 750 1976
Fax: (416) 750 8779
www.niru.com

**NIRU (EUROPE) LTD.**
Unit 11, Mitcham Industrial Estate,
85, Streatham Road, Mitcham,
Surrey, CR4 2AP. U.K.
Tel: +44 208 640 8228
Fax:+44 208 640 8312

# கடுமையான நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு

## ஆயுள் காப்புறுதியில் குறிப்பிடப்பட்ட சில வருடங்களுக்கு மட்டும் பணம் செலுத்தி விட்டு பின்னர் பணமே செலுத்த தேவையில்லை என குறிப்பிடப்படும் ஆயுள் காப்புறுதி திட்டம் எது?

நிரந்தரமான ஆயுள் காப்புறுதி திட்டத்தில் (whole life insurance plan) இவ்வளவு காலங்கள் மட்டும் பணம் செலுத்தினால் போதும் என நிர்ணயிக்கப்படும் இவ் திட்டத்தினை ஆங்கிலத்தில் 'guranteed insurance payment plan' என குறிப்பிடப்படுவது வழமையாகும்.

மாதா மாதம் பணம் செலுத்தும் இவ் வரையறுக்கப்பட்ட காலம் பத்து, பதினைந்து, இருபது வருடங்கள் என பலவகையான வரையறுக்கப்பட்ட காலங்களில் உண்டு. அனேகமான காப்புறுதி கம்பனிகள் இத்தகைய ஆயுள் காப்பறுதி ஒப்பந்தங்களை கனடாவில் சந்தைப்படுத்துகின்றன. இத் திட்டத்தில் உள்ள சிறப்பு அம்சம் என்னவென்றால் ஒரு குறிப்பிடப் பட்ட வரையறுக்கப்பட்ட வருடங்களின் பின்பு எதுவிதமான பணமும் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. ஒப்பந்தம் வாழ்நாள் முழுவதும் வலிமையுடையதாக இருக்கும்.

தனி ஒரு மனிதன் எதிர்பார்த்து கொண்டிருக்கும் தனது உயிர் இழப்புக்கு ஒரு மிகபெறுமதியான பண பெறுமதியினை உருவாக்கி முடித்து விட்டது என்ற திருப்தியில் இருக்கலாம். குறிப்பிடப்பட்ட வருடங்களின் பின்பு இவ் ஒப்பந்தத்தில் ஒரு பண பெறுமதியும் (cash value) கிடைக்கும். நீண்ட வருடங்களின் பின்பு வயதான காலங்களில் ஆயுள் காப்புறுதி தொகைக்கு சமனாகும் அல்லது அதற்கு சமீபமாக இவ் பணபெறுமதி வட்டிக்கு வட்டி வேகத்தில் வளர்ந்து வந்து விடும்.

பொதுவாக அனேகமான கம்பனிகள் இவ் பணபெறுமதியினை உயிருடன் வாழும் போதே பெற்று கொள்ள விரும்பினால் காப்புறுதி கம்பனிகள் அதனை கடனாகவே (policy loan) வழங்குவது வழமையாகும். சிறு வட்டியுடன் திருப்பி செலுத்தப்படல் வேண்டும். திருப்பி செலுத்த தவறினால் உயிர் இழப்பின் பின்பு குடும்பத்தவர்கள் உயிர் இழப்பு நட்டஈடு பெறும் போது இக் கடன் தொகையினையும், வட்டியினையும் கழித்து கொண்டே வழங்குவார்கள். கடன் என்று இல்லாது பண பெறுமதியினை காசாக பெற்று கொள்ள விரும்பினால் இவ்வாறு பணத்தினை வழங்கி விட்டு பத்திரமும் ரத்தாகி விடும்.


சிவ. பஞ்சலிங்கம் B. Com,

(Licensed Insurance Broker)

காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:

416.321.0999


அனேகமாக இத்தகைய திட்டம் வயது குறைந்தவர்கள், அதாவது கல்விதுறைகளை முடித்து தொழில்கள் தொடங்கியவர்கள், இல்லற வாழ்வில் புகுந்தவர்களுக்கு ஆரம்ப காலங்களில் இதில் சேரும் போது, மிக அருமையான திட்டமாகவே இருக்கும் என காப்பறுதி முதல்வர்கள் சிபார்சு செய்வது உண்டு. ஆனால் வயது சற்று அதிகமாகி கொண்டு போக போக இத்தகைய திட்டங்களின் விலையும் அதிகமாகவே இருக்கும்.

### கடுமையான நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு

கடுமையான சில நோய்களினால் பாதிக்கப்பட்டு தொடர்ந்து பூரணமாக வாழ்வில் இயங்க முடியாத நிலைமை யினை எதிர்பார்ப்பவர்கள் தங்களின் பாதுகாப்புக்காக மேற்கொள்ளும் காப்புறுதி திட்டம் எது?

இதனை "Critical Illness Insurance" என ஆங்கிலத்தில் குறிப்பிடப்படுவது வழமையாகும். உதாரணமாக

- இருதய நோய் (Heart attack)
- பாரிச வாதம் (Stroke & Paralysis)
- சிறுநீரகம் செயல்படாமை (Kidney failure)
- இருதய குருதி சுற்றோட்ட தடை நீக்கும் சத்திர சிகிச்சை (Coronary artery bypass surgery)
- புற்றுநோய் (Cancer)
- கண்பார்வை இழத்தல் (Blindness)
- காது கேளாமை (Deafness)
- வாய் பேச முடியாத நிலைமை (Loss of Speech)
- உறுப்புகள் மாற்றங்கள் (Major organ transplant)
- எய்ட்ஸ் நோய் (Occupation & HIV)
- சில நரம்பியல் வருத்தங்கள்

(Parkinson's Disease, alzhemer's, Motor neuron Disease, Multiple sclerosis)

- இருதய வால்வு மாற்றங்கள் (Heart valve replacement) இப்படி ஏராளமான நோய்களில் ஏதாவது ஒன்றில் பாதிக்கப்பட்டவர்கள் குறிப்பிட்ட ஒரு பெருந்தொகையினை பெற்று கொள்ளும் நோக்கில் சேரும் ஒப்பந்தமே இதுவாகும்.

முதன் முதல் இருதய மாற்று சிகிச்சையினை மேற்கொண்ட உலகப் புகழ்பெற்ற சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர். மரியாஸ் பார்நார்ட் (Dr. Marius Barnard) என்னும் தென் ஆபிரிக்காவினை சேர்ந்த மருத்துவரே இக் காப்புறுதி திட்டம் நோயாளிக்கு, அதாவது வளர்ந்து வரும் மருத்துவ விஞ்ஞானத்தின் கருணையினால் நோயின் பின்பும் தொடர்ந்து வாழும் சமூகத்திற்கு இது தேவை என்பதனை முதலில் வலியுறுத்தி ஜப்பான், தென்ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, அயர்லாந்து நாடுகளில் உள்ள காப்புறுதி கம்பனியினால் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வந்தது. அண்மைக் காலத்தில் கனடாவிலும் உள்ள காப்புறுதி கம்பனிகள் இத் திட்டங்களை நடைமுறையில் கொண்டு வந்துள்ளது.

இக்கடுமையான நோய்களுக்குரிய காப்புறுதி திட்டத்தில் ஒவ்வொரு காப்புறுதி கம்பனியும் ஒவ்வொரு பெயரில் பல்வேறு விடயங்களையும், நன்மைகளையும் தங்கள் திட்டங்களுக்கு உரிய வரைவிலக்கணங்களுடன் அறிமுகப்படுத்தி யுள்ளன.

இதிலும் தற்காலிக குறிப்பிட்ட காலத்திற்குரிய திட்டம், நிரந்தர வாழ்நாள் முழுவதும் உள்ள திட்டம் என இரு வகை உண்டு.

- நிரந்தரமான திட்டத்தில்

(அ) குறிப்பிட்ட காலத்தினுள் இந்நோய்களில் ஏதாவது ஒன்று ஏற்பட்டு நிவாரணம் பெற்று கொள்ளவில்லையானால் செலுத்திய பணத் தினை திருப்பி பெறும் திட்டம்.

(ஆ) இந்நோய்கள் ஏதும் ஏற்படாது வேறு வழியில் உயிர் இழப்பு ஏற்பட்டால் செலுத்திய பணத்தினை அவர்களின் குடும்பத்தவர்களுக்கு திருப்பி வழங்கும் திட்டம் என பல்வேறு வகையான மேலதிக விடயங்களுடன் உண்டு.

விரும்பியபடி இலட்சங்கள் அல்லது மில்லியன் டொலர் பெறுமதியான இவ் ஒப்பந்தத்தில் சேர்ந்து கொள்ளப்படும் சேரும் போது உடல் நிலை ஆரோக்கியமாக இருக்க வேண்டும். இவ் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட வரைவிலக் கணங்களுக்கு அமைய, நோய் ஏற்பட்டு அது மருத்துவ அத்தாட்சியினால் நிரூபிக்கப்பட்டு ஒரு மாத காலத்தின் பின்பு நிவாரண பணம் நேரடி யாக நோயாளியின் பெயரில் வழங்கப்படும்.



இது தவிர சில கம்பனிகள் நிவாரணம் பெற்ற நோயாளியின்

தொடர்ச்சி 18ம் பக்கம்


www.divinehome.com for PEACE & PROSPERITY

NEW ARRIVALS OF HAND CARVED ALTARS





More than 50 Models in Display
Our Craffsmen can Custom Design
For your Pooja room from 6 inches to 12 feet
TELL US YOUR BUDGET, YOUR DESIGN. WE DO IT

- HEAT - OIL - WATER - ANY TYPE SMOKE RESISTANT
- Pooja sets new price - New Sets 06s $250.00
02 wall unit $95.00 - s/02210 - $450.00 (4ft)
06 ma 4ft - $450.00 many more low prices!!!
- GOLD GOOD LUCKY குபேரன் பல வித அளவுகளில்
- GOOD LUCK THREE LEG FROG
- GOOD LUCK DRAGON, GOOD LUCKY QUALITY CHIME FROM USA
வலம்பரிச் சங்கு, சுவாமிபடங்கள், சுவாமி சிலைகள், Fountains,
சிப்பியால் செய்த பலவித பொருட்கள்
- Antique Reproduction Console Tables, Mirrors Benches, Chairs, Curiw,
Utility Stands, Occasional (Coffee) Tables, Hall Tree, Chest many more





GREAT GIFTS IDEAS FOR ALL OCCASIONS

Visit Once    Agents Wanted
2-2956 Eglinton Avenue East, Scarborough.(Bellamy & Eglinton)
Call SABESH 416-289-1043, 416-999-3997

A HOME WITHOUT DIVINE HOME IS NOT A PERFECT HOME
To Get Spritual Vibrations In Your Home Visit

DIVINE HOMES

Manufacturers - Importers - Distributors
Switzerland Showroom 41 79 7774 4546
Malaysia Showroom 606 764 1264 Factory 60126311264





# MOHAN
## HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

mhc

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537 / 416-291-3022**

5200 Finch Ave, East Suite 210
(At Middle Field), Scarborough, M1S 4Z4

# DEBT & MORTGAGE SOLUTIONS !!



- கடன் தொல்லையா?
- கடன்காரர்களின் தொந்தரவா?
- Credit பிரச்சனையால் Mortgage கிடைக்கவில்லையா?

**கவலைப்படாதீர்கள்!**

அனைத்து வித பொருளாதார பிரச்சனைகளுக்கும் தீர்வு காண

முதல், இரண்டாவது, மூன்றாவது
Mortgage பெற அழையுங்கள்

**ராஜ்**

416-835-6695

Call : 'RAJ'

for all kinds of Debt & Mortgage Solution
Lendingtree.ca

# SAFETY TRUCKS

## Training School Ltd.

Training & Trucking Classes A, D & Z




In Classes

- 365 (Learning Permit)
- Log Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

- தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
- One On One Training
- அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம். (11 ஆம் ஆண்டு)
- We Accept Welfare & Unemployment Insurance
- வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

18 Years Canadian
Experience with Trucks

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

YOGAN SOCKALINGAM

Truck Driving போதனாசிரியர்

905-793-9546 / 416-616-5979

250 Summerlea Road, Brampton, ON

# Neelam silk

சுபமுகூர்த்தப் பட்டுக்கு என்றுமே இராசியான இடம்

'தமிழர் மத்தியில் தரமான பட்டுப் புடவை மாளிகை'

# நீலம் சில்க்

- SONALIKA PURE SILK
- JARDHOSHI SATIN & CREPE SILK
- JAPAN CRYSTAL SILK
- JAIPUR CRYSTAL SILK
- VASUNTHARA NETWORK CREPE



பட்டுத் தெரிவுகள்
அனைத்துக்கும்

"நீலம் சில்க்"

T.P: 416-778-7455 Fax: 416-778-8484
1453 GERRARD STREET, EAST (INDIAN BAZZAR)

T.P: 416-759-2002
2378 EGLINTON AVE., E. (Kennedy Rd. & Eglinton Ave, Scar.)



அரோகரா, அரோகரா! வினைதீர்க்கும் விநாயனுக்கு அரோகரா, அரோகரா! எத்தனை கட்சிகள், எத்தனை பேதம், ஒற்றுமை இல்லை. எத்தனை கட்சிக் கோஷங்கள். ஆனால் கோயிலில் மட்டும் அரோகரா! ஒன்றே குலம், ஒருவனே தேவன். அரோகரா, அரோகாரா! றிச்மண்ஹில் விநாயகர் தேர். அடேயப்பா! 3 நாள் வார விடுமுறை சனத்திரள் சொல்ல வேண்டுமா.



தேர் வடம் பிடித்து முட்டி மோதி இழுக்க தண்ணீர் பந்தலில் பிறிம்லி மீனாவும் ஆட்டிலறி அன்னம்மாவும் மோரை ரசித்துக் குடித்துக்கொண்டிருந்தனர். பிறிம்லி மீனாவின் மகன் மதன் எங்கு போவது என்று தெரியாமல் சுற்றிக்கொண்டே இருந்தான். ஒவ்வொரு வட்டம் சுற்றி வரும் போதும் ஹாய் உலகப்பு! என்றபடி சென்றான். உலகரைச் சுற்றி மாறி மாறி ஒரே கூட்டம் தான். பிறிம்லி மீனா மோர் குடித்துக் கொண்டு நிற்க மதன் ஓடி வர மதன்! மதன்! என யாரோ கூப்பிட பிறிம்லி மீனாவும் ஆட்டிலறி அன்னம்மாவும் மதனும் ஒரே நேரத்தில் பார்க்க மீசை தாடியுடன் சோகமாக.... யாரது?



Mr. தாடி. ..... ஆம் Mr. தாடி. பிறிம்லி மீனா ஒரு காலத்தில் படிப்பைக் குழப்பி பெற்றோருடன் சண்டைபிடித்து விரும்பியே திருமணம் செய்த ரகுவரன் போல் உயரமும் இடையிடையே நகைச்சுவையாக ரகுவரன் போல் கதைப்பதால் ரகு, ரகு என்றே பிறிம்லிமீனா கனவு கண்ட அவனா இவன்? Mr. தாடி.

குளிரான மோர் குடித்தும் பிறிம்லி மீனாவுக்கு வியர்த்து கொட்டியது. நான் தனிய இருந்தாலும் சந்தோசமாக இருக்கிறேன் என உலகர் வீட்டிற்கு வந்தபோது சொன்னாலும் மனதில் பூகம்பமும் அலைமோதலும் தான். ஆட்டிலறி அன்னம்மா செக்கண்ட் புளோர் செல்லம்மா எத்தனை தடவை சொல்லயிருப்பார்கள்.



மீனா, தனியபிள்ளை வளர்க்கிறது கஸ்டம். என்ன இருந்தாலும் சரி பிழையை ஒத்து போவது தான் குடும்பம் என பல வழிகளில் புத்திமதி சொல்லியிருப்பார்கள். ஏதோ பேர்த் டே பார்ட்டியில் குடித்துவிட்டு சிந்தனையின்றி சிதறிய வார்த்தைகள் பெரிய சண்டையில் பொலிஸ் கேஸ் வரையும் போய்....
Mr. தாடி இன் வாழ்க்கையில் எத்தனை மாற்றங்கள்?

அரோகரா! அரோகரா! வேண்டுவோர் வேண்டுவதை ஈவான் கண்டாய்.
நல்ல பிரான் நம்மை வருத்துவது கொல்ல வல்ல கொல்ல வல்ல
பொல்லா வினையறுக்கத்தான்

ஸ்பீக்கரில் யாரோ சொல்லிக் கொண்டேயிருக்க பிறிம்லிமீனாவின் கண்களில் நீர்த்துளிகள்.
ஆனந்தக்கண்ணீரா? அல்லது...?
கணவனைப்பிரிந்த நாளிலிருந்து அகப்படும் கோயிலெல்லாம் அர்ச்சனையும்
பார்க்கும் தெய்வத்துக்கெல்லாம் பால் அபிஷேகமும்
நாளும் கிழமையும் பிடித்த விரதங்களும் வீண் போகவில்லை.



**வைராக்கியம்**,
உடல் ஆரோக்கியத்தை பாதிப்பது. **வைராக்கியம்** தானே மன அழுத்தம், மன உளைச்சல் முழுவதற்கும் காரணம். இதற்கு மருந்து ஆயிரம் இருந்தாலும் சிரித்தால் இன்பம் கூடும் அழுதால் துன்பம் குறையும்.



எத்தனை உயிரைக்குடித்த எமது நாட்டில் நடந்த போர். இன்று உலக நாடுகளே பேச்சுவார்த்தை என சமாதான மேசைக்கு வரும்பொழுது நம்மை சூழ உள்ளவர்களுடன் ஏற்படும் சிறுசிறு பிரச்சினை தீர்க்க் முடிவதில்லை.
பிறிம்லிமீனாவின் மனதில் அன்று எழுந்த தீ சாதாரண தீயா?



1981 மே 31 யாழ். நூலகம். சிங்கள அறிவாளிகள் என தம்மை நினைத்தவர் திட்டமிட்டு தீயிட்ட யாழ். நூலக தீயை விட மீனாவின் மனதில் எழுந்த தீ கொழுந்து விட்டு எரிந்தது. ஆனால் இன்று தீயுமில்லை சாம்பலுமில்லை.



மதன், மதன்! அம்மா ஆரது? என்றபடி திரும்பினான் மதன். சிறுவயதில் பிள்ளைகளை பிரிந்தால் விளைவு அப்பா பிள்ளை பாசம் இல்லை. பிள்ளைகளை வளர்த்து அவர்கள் வளர்ச்சியில் வரும் சந்தோஷம் இல்லை. இன்று பல குடும்பங்கள் தாமாகவே வாய்திறந்து தமது பிழைகளை கூறிவருவதே அவர்கள் உரிய தண்டனை பெற்று விட்டார்கள் என்று அர்த்தம்.





அரோகரா அரோகரா! தேர் இருப்புக்கு வந்து விட்டது. மதன், அது அப்பா என மீனா நூறு தடவை வாயால் சொல்ல வந்த சத்தம் வெளியே வரவில்லை. இந்த நேரம் பார்த்து கையில் விபூதியுடன் இந்தா அன்னம்மாக்கா, மீனா பிரசாதம் எடுங்கோ பிள்ளையாருக்கு அரோகரா! என்றபடி வந்தா செக்கண்ட் புளோர் செல்லம்மா. இந்த வருடம் எண்டாலும் நீ வருந்தினதுக்கு கடவுள் கண்திறக்க வேணும். உன்ரை புருசன் வந்து சேரவேண்டும் என்று சொன்னா. Mr. தாடி விபூதி தொட்டு பூசவும் அதோடு பிறிம்லிமீனா தொட்டு பூசவும். தேரில் வரும் பிள்ளையாரை அடுத்த வருடமும் பார்க்கலாம். ஆனால் இப்படி ஒரு காட்சியை பார்க்க முடியுமா? என்று நினைத்து ஆட்டிலறி அன்னம்மா மீனாவையும் Mr. தாடியையும் பார்க்க... மதன், அம்மா இவர் என்று சொல்லேக்க யார் இந்த அங்கிள் என, அவனது வாயையும் பொத்தி அது உன்ரை அப்பா என்றபடி பிள்ளைக்கும் பூசி விடுங்கோ என பிறிம்லி மீனா சொல்ல செக்கண்ட் புளோர் செல்லம்மாவுக்கு ஒன்றும் புரியவில்லை.





அரோகரா! அரோகரா! தேர் இருப்புக்கு வந்துவிட்டது. பிறிம்லி மீனாவின் பிரச்சினையும் ஒருவாறு இருப்புக்கு வந்துவிட்டது. கத்தியின்றி, ரத்தமின்றி ஒரு யுத்தம் முடிந்தது போல. மதனுக்கு றொக்கற்றில் ஏறி சந்திரமண்டலம் போனது போல இருந்தது. மம்மி வெயர் ஸ் மை டடி என்ற போது ஐரோப்பாவில் உள்ள நாடுகளை மாறி மாறி சொல்லி அலுத்துவிட்டது.

**எத்தனை காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே.** மதனுக்கு நாளுக்கு நாள் விடயம் விளங்கி விட்டது. அதில் ஆயிரம் அர்த்தங்கள் இருந்தன. இவ்வளவு நாளும் எங்கையடா போனனி என உலகர் கேட்க, கண்களில் கண்ணீர் ததும்பி தாடியில் வழிய மெதுவாக சிரித்தார் Mr. தாடி.

அரோகரா! அரோகரா! அரிச்சனை செய்பவர்கள் ஒழுங்காக வரிசையில் வரவும் என்று அறிவிக்கவும், உலகர் கோஷ்டி கோயிலடியில் இருந்து புறப்படவும் சரியாக இருந்தது.



டடி, டடி யு நோ கனடாவின் முதல் பிறைம்மினிஸ்ரர் சேர். ஜோன் ஏ மக்டொனால் நினைவு தினம் யூன் 6 ஆம்திகதி என ஆங்கிலத்தில் கூற மீனா ரகசியமாக சிரிக்க மீனாவின் கணவரும் ஆங்கிலம் அப்படி இப்படி என்பது வேறு ஒருவருக்கும் தெரியாது....

அரோகரா! அரோகரா!
மதன் அப்பாவைக் கூப்பிடு என ஆட்டிலறி அன்னம்மா சொல்ல. ஓம் அவரையும் வரச்சொல்லுங்கோ என மீனா செக்கண்ட் புளோர் செல்லம்மாவுக்குச் சொல்ல மீனாவின் கண்ணும் வாயும் Mr. தாடியை பார்க்க மதனிடம் கைகொக்க மதனின் அடுத்த கையை மீனா பிடிக்க உலகர் நீண்ட பெருமூச்சு விட்டார். காரணம்?

ரூபன் காரில் ஏறியதும் பாட்டைப்போட
விழித்தெழுந்து விநாயகனை வணங்கி விட்டால் கலகலப்பு
நடை நடந்து நல்லூருக்குச் சென்று வந்தால் கலகலப்பு என்ற பாடல் ஒலித்துக்கொண்டிருந்தது.

127

நகைச்சுவைத் தொடர்

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்


# MALVERN MONTESSORI SCHOOL



10 Sewells Road, Scarborough
(Sewells / Neilson)

***Preparing your children for new experiences, challenges, and making them feel connected to a caring community***

APPLICATIONS ACCEPTED NOW!

## MONTESSORI PRE-SCHOOL

- AGES 2 TO 6 YEARS
- MORNING AND EVENING CLASSES
- LOW STUDENT ^TEACHER RATIO
- READING, WRITING AND MATH EMPHASIZED
- HISTORY, GEOGRAPHY AND SCIENCE
- FRENCH INTRODUCTION
- MUSIC AND ART CLASSES
- BRIGHT SPACIOUS CLASSROOMS
- EXTENDED CARE HOURS ( 7.30am - 6.15pm)
- EXCITING SUMMER SCHOOL (JULY and AUGUST)

FOR ENROLLMENT PLEASE CALL (416) 724-8900

*"THE MONTESSORI METHOD OF EDUCATION DEVELOPS THE WHOLE PERSONALITY OF THE CHILD, NOT MERELY HIS INTELLECTUAL FACULTIES BUT ALSO HIS POWERS OF DELIBERATION, INITIATIVE, AND INDEPENDENT CHOICE WITH THEIR EMOTIONAL COMPLEMENTS."*

# NTE AUTO
## New Trade Engineering Inc.




ஸ்காபரோவில் 14வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத் திருத்த வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

Also Air Condition Service & Repair

SIVABALAN

416.750.1573

**என். ரி. இ. ஓட்டோ இங்க்**

151 NATUCKET BLVD., UNIT #12, SCARBO., ON

IN NEW MILLENNIUM WE ARE ENTERING 11TH YEAR SERVICE IN SCARBOROUGH.

# முயற்சி திருவினையாக்கும்

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 52

எனது பழக்கவழக்கங்கள் சிலவற்றை, எதனாலும் ஒருபோதும் மாற்றமுடியாது எனும் உண்மையை மனப்பூர்வமாய் இன்று உணர்கின்றேன். வாழ்வில் உனது எதிர்பார்ப்புகள், ஆவலுடன் கட்டியெழுப்பிய மனக்கோட்டைகள் யாவும் தகர்ந்து, உனக்குக் கிட்டாது கை நழுவிப் போகிறதே என துயரந்தோய்ந்த இருளில் நீ தடுமாறும் போது, கீழ்வரும் வார்த்தைகளை இறுகப் பற்றிக்கொள்.

1. ஆன்ம ஸ்வரூபிகளாகிய எம்மால் உண்மையில் ஒரு குற்றமும் புரிய முடியாது.
2. வாழ்க்கையில் சிலவற்றை நாம் தேர்ந்தெடுத்துக் கொள்கிறோம்.
3. எம் தேர்வுகளிற்குப் பிரதிபலன்கள் ஏற்படுகின்றன.
4. எம்மையும் மற்றவர்களையும் எடைபோட்டு சீர்தூக்கிப் பார்க்கும்போது மட்டும்தான் பிரச்சனைகளை எம் வாழ்வில் குறுக்கிடுகின்றன.
5. வாழ்க்கை கருணை நிரம்பியது.
6. எமை மன்னித்து மீண்டும் மீண்டும் சந்தர்ப்பங்களை எம்முன் வாழ்வு வைக்கின்றது.
7. உனது இதயத்தாகம் தீர்ந்திட, உனது ஆசைக்கனவுகள் நிறைவேறிட நீ முயற்சிக்க திரும்பத்திரும்ப வாய்ப்புக்களை உனக்குத் தருகின்றது வாழ்வு.
8. நீ தார்மீகத்துடன் வாழ்ந்து வெற்றியீட்டுவதற்குத் திறவுகோல் இதுதான்.

இதுவரை செய்த தவறுகளை நினைத்து நினைத்து மனம்வருந்தி ஒன்றுமே செய்யாது நீ விசனப்பட்டுக் கொண்டிருக்கலாம். நீ செய்யத் தவறியவற்றை இனி ஒருபோதும் சரி செய்ய முடியாது என இதுவரை நீ எண்ணியிருக்கலாம். ஏற்கனவே நீ விட்ட பிழைகளைச் சீர்செய்து மீண்டும் முயற்சியெடுத்து பிரச்சினையைத் தீர்த்திட இன்று இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள். மீண்டும் மீண்டும் சலிக்காது முயற்சித்துப்பார். வெற்றி கிட்டும். எனது தவறுகளையும் துரதிர்ஷ்டங்களையும் கூர்ந்து நோக்கிக் கீழ்நோக்கிப் பார்க்காது படித்த பாடங்கள் தரும் விழிப்புணர்வுடன் இன்று முதல் மீண்டும் மீண்டும் பிரச்சினைத் தீர்விற்கு முயற்சி செய்கிறேன்.



### வாழ்வில் ஓர் இலக்கு முக்கியம்

அண்டசாரங்களைப் படைத்து, தன் சிருஷ்டி அத்தனையையும் இம்மியும் பிசகாத நியதியுடன் இயக்குவிக்கும் அந்த ஒரேயொரு பேரருட் சக்தியையே சகல மதங்களும் வெவ்வேறு நாம ரூபங்களால் போற்றித் துதிக்கின்றன. நாம் ஒவ்வொருவரும் தனித்துவம் மிக்கவர்கள். என்னைப்போல் வேறொருவர் முன் இருந்ததில்லை. இப்போது இல்லை, இனியும் இருக்கப் போவதில்லை. உடல், உள்ளம், உணர்வு, ஆன்மா என்னும் எனது பல்முகப் பரிணாமங்களின் சரிவிகித சமான வளர்ச்சியே வாழ்வில் எனது திருப்தியையும் இன்பத்தையும் நிர்ணயிக்கின்றது. இருத்தியாறாம் நூற்றாண்டில் மேற்கத்தைய நாட்டு கடுகதி இயந்திர வாழ்வில் சுழலும்போது, உடலையும் உள்ளத்தையும் மட்டுமே நான் போஷித்து வருகிறேன். ஆன்மாவைப் பற்றி யோசிக்கவே நேரம் கிடைக்காத போது, அதன் போஷாக்கைப் பற்றி எப்படி கவலைப்படுவது?

ஆனால், உடல், உள்ளத்துடன் ஆன்மாவையும் சரிவிகித சமானமாக போஷிக்க வேண்டும் எனும் விழிப்புணர்வு உலகெங்கும் இப்போது நிச்சயம் பிறந்திருக்கின்றது. கிறிஸ்தவ, இந்து, முகமதிய மக்கள் தத்தம் சமய ஆசார விதிகளின் படி இறைவனை துதிக்கின்றனர். வாழ்வில் உனக்கு ஒரு நோக்கம், இலட்சியம் கட்டாயம் இருக்கவேண்டும். அந்த இலட்சியத்தை எட்டும் முயற்சியிலே ஒவ்வொரு நாளும் நீ கண்ணும் கருத்துமாயிருக்க வேண்டும். இலட்சக்கணக்கான மக்கள் ஒவ்வொருநாளும் துயிலெழுந்து ஒரு இலக்கும் இல்லாது பொழுதைப் போக்குகின்றார்கள் என்பது வருத்தம் தரும் உண்மை. நாளாந்த வேலைக்கு நேரத்திற்குப் போய் பணம் சம்பாதிப்பது ஓர் இலக்கல்ல, அது ஒரு செயற்பாடு. மாதாந்த செலவுகளிற்குப் பணம் கட்டுவது ஓர் இலக்கல்ல, அது ஒரு செயற்பாடு. குடும்பத்தைப் பராமரிப்பது நீ செய்ய வேண்டிய வேலை, அதுவும் ஓர் இலக்கல்ல!

உனது வாழ்வின் நோக்கம் தான் உனது இலட்சியம். உனது வாழ்க்கையின் ஆரம்பம் அல்ல, அது எங்கு எப்படி முடியப் போகின்றது என்பது தான் உனது இலட்சிய இலக்காக இருக்க வேண்டும். தனித்துவமான நீ, ஏன் எதற்காக இவ்வாறு இந்த இலக்கை நோக்கிப் பயணிக்கிறாய் என்பதைப் பற்றிச் சிந்தித்தால் உன் வாழ்வின் மைய இலட்சியம் என்ன என்பதை உணர்ந்து கொள்ளலாம். அப்போ அந்த இலட்சியத்தை அடைந்திட உதவக்கூடிய செயற்பாடுகளில் நீ முழுமூச்சாக ஈடுபட்டு வெற்றியடையலாம். திருப்திப்பட்டு இன்பமடையலாம்.

ஏதோ ஒரு காரணத்திற்காக, ஏதோ காரியங்களைச் செய்வதற்காகத் தான் நாம் ஒவ்வொருவரும் பிறக்கிறோம். இத்தள்ளாத வயதில் என்னைப் பாருங்கள்! ஓய்வெடுத்துக் கொண்டிருக்க வேண்டிய வயதில் இரவிரவாக இதை எழுதத் தூண்டுகிறது உங்கள் தொலைபேசி அழைப்புகள். 1991 ஆம் ஆண்டு கொழும்பில் பஸ் தட்டிய விபத்தில் சிக்கி செத்துப் பிழைத்த என்னை இவ்வாறு தொண்டு செய்யும் கருவியாக்கி, இச்சந்தர்ப்பமளித்து இறைவன் உபயோகிப்பதை நன்றிப் பெருக்குடன் இப்போ உணர்கிறேன்.

உலகத்தில் உதித்த பெரியார்கள் அனைவரும் சுயநலம் மறந்து மக்களின் நன்மைக்காக சேவை செய்தவர்கள் என்பதற்குச் சரித்திரம் சான்று. இன்றுவரை உனக்கும் வாழ்வில் ஒரு இலக்கு இருக்க வேண்டும் என்பதை உணராமல் நீ ஏனோதானோவென்று நாளாந்தம் பொழுதை ஓட்டியிருக்கலாம். இன்று உன்னை உலுக்கி கண்களை அகலத்திறந்து பார். உனது வாழ்வின் நோக்கம், இலக்கு, இலட்சியம் என்ன என்பதைக் கண்டுபிடி. உனது இஷ்ட தெய்வம், குரு அல்லது வழிகாட்டியின் உதவியுடன், பக்தி நிறைந்த தொண்டுடன் தார்மீகவாழ்வை உனதாக்கிக் கொள். நீ பிறந்த போதிருந்த உலகத்தை உன்னால் முடிந்தவரை மேன்மைப் படுத்திவிட்டுச் செல்லக் கங்கணங்கட்டிக் கொள்.

மேலதிக தகவல்களிற்கு
அழையுங்கள் 905-624-9617

லலிதா புரூடி





# சக்தி, சக்தி என்று சொல்லு அவள் சந்நிதியில் போய் நில்லு

*பெற்றதால் அன்னை பெறுமுயிரனைத்தும் பேணலால் அன்னை பெற்றிடுவோர்*
*உற்றதால் அன்னை விரும்பிய அனைத்தும் உதவலால் அன்னை எக்கலையும்*
*சொற்றதால் அன்னை உலகொடுவானும் தொழுதலால் அன்னை என்றென்றும்*
*பற்றதாங் கருணை பொழிதலால் அன்னை பராபரை நாகபூசணியாள்.*

இறைபரம் பொருளை தாயாகத் துதிப்பதில் மனத்திற்குச் சாந்தியும், நிம்மதியும் ஏற்படுகின்றன. ‘தாயாகித் தாங்குகின்ற தயாபரன்’ என்பதிலிருந்து தாய்மையின் தனித்துவம் விளங்குகின்ற தன்றோ! தெய்வத்தைத் தாயாக நோக்குவதால் அன்பும் பக்தியும் விரைவில் கிடைத்துவிடும் என்பது சக்தி வழிபாட்டின் உயிர் நிலைக்கொள்கையாகும். தெய்வத்திற்கு பிரார்த்தனை செய்யும் போது உபாசகன் ஏதாவது ஓர் இசைந்த உறவுமுறையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அவற்றுள் சிறந்தது தாயாக வழிபடுவதுதான். ஏனெனில் உலகில் முதன் முதலில் கண்விழித்துப் பார்க்கும் குழந்தை தாயைத்தான் பார்க்கின்றது. தாய் சொல்லிக் கொடுத்துத்தான் உலகத்தை அறிகின்றது. அத்துடன் தந்தையையும் அறிகின்றது.

*நா. க. சிவராமலிங்கம்*

“தாயுடன் சென்று பின் தாதையைக் கூடி ஏயுமதே நிட்டை” என்று பெரியவர்கள் இந்த உண்மையை ஆன்ம அனுபவத்தோடு இணைத்துப் பேசி இருக்கின்றார்கள். சைவம், வைணவம் என்ற இருபெரும் பிரிவுகளிலும் தாய்த் தெய்வம் மிக முக்கியமான இடத்தைப் பெறுகின்றாள். சைவம் தாய்த் தெய்வத்தை அம்பிகை என்கின்றது. அந்தத் தாய் இறைவனுடைய கருணையே ஒழிய வேறு ஒன்றும் அல்ல என்கின்றது சைவம். ‘அருளது சக்தி ஆகும் அரண் தனக்கு’ என்கின்றது சிவஞான சித்தியார்.

இந்தச் சக்தியோடு இயைந்துதான் படைத்தல், காத்தல், ஒடுக்கல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில்களையும் இறைவனால் செய்ய முடிகின்றது. உலக உயிர்களைக் கரையேற்றுதற்கு இறைவன் என்னென்ன வேடங்களைப் போடுகின்றானோ அவற்றிற்கேற்ற வேடங்களை சக்தியும் போட்டுக்கொள்கிறாள் என்பது சைவசித்தாந்தம். இதனால் ‘எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பாள்’ எனப்படுகின்றது. ‘மடவாள் தனோடும் அருள் காரணத்தின் வருவார்’ என்பது தேவாரம். இறைவன் புரியும் திருவிளையாடல்கள் யாவும் திருவருள் சக்தியின் துணையுடனேயே நடைபெறுகின்றன. அடியார்களைச் சோதிக்கும் நேரத்தில் இறைவன் தனியாக வருகின்றான். ஆனால் அவர்களுக்கு அருள் பாலிக்கும் போதெல்லாம் இடபவாகனரூடராய்



இமயவரை பயந்த பச்சைக்கொடி போன்ற உமையவளுடன் தோன்றினார் என்கின்றார் சேக்கிழார். சக்தியை உபாசிப்பவர்கள் சாக்தர்கள் எனப்படுகின்றனர். சக்திக்குரிய ஆலயங்கள் சகல இடங்களிலும் அமைந்துள்ளன.

அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் இலங்கையின் சக்தி பீடமாக இலங்குவது நயினை நாகபூசணி அம்மல் ஆலயம். இது புவனேஸ்வரி பீடம் எனப்படுகின்றது. ஈஸ்வரி என்பது அம்பிகைக்கே உரிய சிறப்புப் பெயர். பரமேஸ்வரி, மகேஸ்வரி, ராசேஸ்வரி, புவனேஸ்வரி, ராசராசேஸ்வரி என்று பெயர்கள் அம்பிகையைக் குறிப்பன. நாகத்தால் பூஜிக்கப்பட்டவையாக அம்பிகை நாகபூசணி எனும் நாமம் பூண்டு நயினாதீவில் கோயில் கொண்டு அருள் பாலிக்கின்றாள். காஞ்சியில் காமாட்சியாகவும், காசியில் விசாலாட்சியாகவும், மதுரையில் மீனாட்சியாகவும் விளங்கும் அம்பிகையே நயினாதீவில் நாகம்மாளாக நல்லருள் புரிகின்றாள். தன்னைவந்து வழிபடும்படி பாம்புருக்கொண்டு பராபரை பயங்கொள்ளச் செய்வதால் பக்தர்கள் பல்லாயிரக் கணக்கில் இங்கு கூடுவர். ஆடி வந்து ஓடமதில் நாடி, தேடி வரும் பக்தர்களுடன் கூடிநின்று அருள் சுரப்பாள் அம்பிகை. எனவே பக்தியினாலும் பயத்தினாலும் பரவும் அடியார் தொகை அதிகமாக உள்ளது.

ஆனிமாதத்தில் அம்பிகைக்கு ஆண்டு மகோற்சவம் ஆரம்பமாகி பதினைந்து தினங்கள் நடைபெற்று தெப்ப உற்சவத்துடன் நிறைவுறும். அயல் தீவுகளிலிருந்தும் யாழ். குடா நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்தும், இலங்கைத் தீவின் பிற்பகுதிகளிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் பக்தர்கள் அலை கடலைத் தாண்டிவந்து, தமது நிலையை மலைமகளிடம் விண்ணப்பித்து தலை தாழ்த்தி வரம் வேண்டி நிற்பர். அம்பிகையும், அவரவர் தரமறிந்து அருள் பாலிப்பாள். கொடியேற்றத்திருவிழா, கைலாச வாகனத் திருவிழா, பூந்தண்டிகைத் திருவிழா, குதிரை வாகனத்திருவிழா, சப்பை ரதத்திருவிழா, தேர்த்திருவிழா, தீர்த்தத்திருவிழா, தெப்பத்திருவிழா என்பன முக்கியமானவை. பிள்ளைச் செல்வம் அருளும் பெருமாட்டி ஆதலால், பக்தர்கள் தொழுதும், அழுதும் முழுமுதற் தேவியை பழுதிலாப் பாசுரங்களால் பாடிப் பரவுவர், பயனைப் பெறுவர்.

அருள் வேண்டிவரும் அடியவரின் அயர்ச்சியை அகற்றும் பொருட்டு அமுதசுரபி அன்னதான சபையினர் அனுதினமும் அமுது படைக்கின்றனர். மகேசுர பூசையின் மகத்துவத்தை மண்ணில் நல்ல நயினையில் கண்ணாரக் காணலாம். நித்திய யாத்திரைத் தலமான பக்திவளம்மிக்க சக்தி பீடமான நயினையம்பதியை வாழ்வில் ஒருமுறை தரிசித்தால் சத்தியமாக எமக்கு சித்திகள் கிட்டும். முக்திக்கு வழி வகுக்கும் முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கும் இல்லை.

*ஏகசக்தி இன்பவரம் தரும்*
*யோகசக்தி உயிர்க்கு உயிராகிய*
*போக சக்தி புனித பராசக்தி*
*நாகபூசணி நாரணி அம்மையே.*


## யோகா சோதிடம்

• கிரகப் பொருத்தம் பார்த்தல் • சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல் • சாதகக் குறிப்புக் கணித்தல்

416-299-8361



## வீட்டில் பூச்சி, எலித் தொல்லையா?

வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் போன்றவற்றில் பூச்சி, எலித் தொல்லையா? கவலையை விடுங்கள். முற்றாக ஒழிக்க அழையுங்கள்

Kanthan: 416.291.3997





• No Spraying • No Smelling • No Moving



## SHAWN TRUCK & FORKLIFT
## DRIVING SCHOOL





Fork Lift licence
$75.00

Truck licence
$899.00

**In Classes**

**365 (Learning Permit)**
**Dangerous Goods**
**Border Crossing**
**Air Brake (Z)**
**Log book**

• A-Z & D-Z up grade • One on One Training
• Job Placement Right Away!
• உடனடி வேலை வாய்ப்புக்கள்
•வாரத்தில் ஏழு நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.

Air brake
$175.00

Excellent Quality - Low Cost Training

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

Pl. Call: Raja / Shan

416.412.7618/416.829.0603

40 NUGGET AVE., #8, Scarborough East (McCowan & Sheppard)



வாழும் தமிழ்

யூன் 4

சனிக்கிழமை காலை 9.00 முதல் மாலை 7.00 மணி வரை

## புத்தகக் கண்காட்சி

**சங்காலம் தொட்டு இன்று வரையான தமிழ்ப் புத்தகங்கள்**

**தமிழ் இலக்கியத் தோட்டத்தின் மொழி பெயர்ப்புப் பட்டறை**



*Lakshimi Holmstrom, Paula richman,*
*பார்த்திபன், சேரன், நித்தியானந்தன்,*
*வெங்கட்ரமணன்,செல்வாகனநாயகம்*
*ராமச்சந்திரன் மற்றும் பலர்.*
*கலந்து கொள்ள விரும்புவோர்*
***முன்பதிவு செய்யவும்.***

**kalam@tamilbook.com**

இடம்: ஸ்காபரோ சிவிக் சென்ரர்

**மாலை 6.00 மணிக்கு இரு புத்கங்களின் வெளியீடு**
என்னை விசாரணைக்கு உட்படுத்துங்கள் (பா.அ. ஜயகரன்
மொழியினால் சமைந்த வீடு (மணிவேலுப்பிள்ளை)

---

ஆதரவு வழங்குவோர்:
**Ranjan Fancis Xavir (416) 816 1220**
**A & A Direct Services (905) 482 9330**

# தூறல்

## The Notebook (2004)

Directed by Nick Cassavetes
Writing credits (WGA)
Nicholas Sparks (novel)
Jan Sardi (adaptation)
(more)
Cast overview, first billed only: Tim Ivey .... Rower
Gena Rowlands .... Allie Calhoun
Starletta DuPois .... Nurse Esther
James Garner .... Duke
Anthony-Michael Q. Thomas .... Nurse Keith
Ed Grady .... Harry
Renée Amber .... Nurse at Counter
Jennifer Echols .... Nurse Selma

இரண்டாம் உலகப்போருக்கு முன்னர், ரிம்மும், ஜீனாவும் காதலிக்கின்றனர். காதலுக்கு தடையாக பணம்-வர்க்கம் உள்ளது. ரிம் ஒரு தொழிலாளி, ஜீனா பணக்காரபெண். முடிவு - இருவரும் பிரிக-ின்றனர். அதன் பின் உலகப்போர். மீண்டும் சந்திக்கின்றனர். அப்பொழுது ஜீனாவுக்கு திருமணம் நிச்சயமாயிருக்கிறது. ஆனாலும் காதலர்கள் இணைகின்றனர்.

படத்தில் இது ஒரு “Notebook” வாசிக்கும்போது ஏற்படும் நினைவாக காட்டப்படுகிறது. பெரும் எதிர்பார்ப்புடன் வெளிவந்த படம். ஏமாற்றத்தை அளித்தது. நோட் புக்குறிப்பு போல் பதிவாகி யுள்ளது. அதன் உயிர்ப்பு பதிவாகவி ல்லை.

## French Fries and Curry

(உருளைக் கிழங்கு பொரியலும், கறியும்) மற்றுமோர் இந்தியாவில் வசிக்காத, இந்தியர்களின் படம். மூன்று பெண்கள் (சாரி, ரீஸரா, மிமி) ஒவ்வோர் கனவிலும், கொள்கையிலும் உள்ளனர். ஆனால் இயல்பு, யதார்த்தம் மாற்றிவிடுகிறது. வழமையான (NRI) படங்களை போல்அல்லாமல் வித்தியாசமான முயற்சியாகவுள்ளது.

கதை, திரைக்கதை, இயக்கம் - சர்ஸ்மிதா.

வணிகவியல் பட்டதாரியான இவரின் கலை - திரைப்படம் பற்றிய தேடல் படத்தில் முனைப்பாக வெளிப்பட்டுள்ளது.

**வானரன்**

## Ismail Merchant, 1936 - 2005 (25-05-2005)



மும்பையில் பிறந்து இலண்டனில் வாழ்ந்த இஸ்மாயில் மேச்சன்ட் ஒரு வணிகவியல் பட்டதாரியாவார். 1961 ல் ஒரு தேநீர் கடையில் ஐவரியை சந்தித்தார். இவர்கள் இருவரும் இணைந்து தங்களது நிறுவனமான Merchant Ivory Productions என்ற நிறுவனம் மூலம் சுமார் 40 படங்களை தயாரித்துள்ளனர். இவற்றில் பெரும்பாலானவற்றை ஜேம்ஸ் ஐவரி இயக்கியுள்ளார். இஸ்மாயில் மேச்சன்ட் Mahatma and the Mad Boy (1974), In Custody (1993). இப் படம் பற்றிய விமர்சனம் சில இதழ்களின் முன்னர் விளம்பரத்தில் இடம்பெற்றது. Lumi Gere et Compagnie (1996), The Proprietor, Cotton Mary, The Mystic Masseur (2001) போன்ற படங்களை இயக்கியுள்ளார். இவர்கள் தயாரித்த 6 படங்கள் ஒஸ்கார் விருதை தட்டிச் சென்றன. (Howards End) உட்பட.

# ஊடக சுதந்திரமும் சிவராமும்

ஊடகவியல் சுதந்திரத்தையும் சிவராமையும் நினைவு கொள்ளல் எனும் ஒன்று கூடல் நிகழ்வு, மே 13, 2005 அன்று ரொறோன்ரோவில் இடம்பெற்றது. நிகழ்வுக்கு, தினக்குரல் நாளிதழில் முன்பு பணிபுரிந்த ஊடகவியலாளர் மோ்வின் மகேசன் தலைமை வகித்தார். இலங்கையில் ஊடகவியலாள ராகப் பணிபுரிவதிலுள்ள சிக்கல்களையும் ஆபத்துக் களையும் விவரித்த மகேசன், சிவராமுடனான தனது அனுபவங்கள் சிலவற்றையும் பகிர்ந்து கொண்டார்.

சிவராமின் நீண்ட கால நண்பரும் கணினித்துறையில் பணிபுரிபவருமான விஜய சதானந்தன் முதலாவதாக உரையாற்றினார். பத்திரிகையாளரின் சுதந்திர இயல்பையும், உரிமைகளையும் வலியுறுத்திப் பேசிய அவர், சிவராம் பற்றி கவிஞர் வ.ஐ.ச. ஜெயபாலன் எழுதியிருந்த அஞ்சலிக் கவிதையை யும் உணர்வு பூர்வமாக வாசித்தார். அவரைத்தொடர்ந்து, கருத்துச் சுதந்திரத்துக்கான கனடியப் பத்திரிகையாளர் அமைப்பின் (CANADIAN JOURNALISTS FOR FREE EXPRESSION) நிறைவேற்றுப் பணிப்பாளர் றொட் மக்டொனல் உரையாற்றினார்.

சென்ற ஆண்டு 129 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டதாகத் தெரிவித்தார் மக்டொனல். கொலையாளிகளைக் கண்டுபிடிப்பதிலோ அல்லது ஊடகச்சுதந்திரத்தைப் பேணுவதிலோ அரசுகள் அக்கறை காட்டுவதில்லை எனத் தெரிவித்தார். சிவராமின் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் தன்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித் தார். இலங்கை அரசும், அதிகாரிகளும் ஊடக சுதந்திரத்துக்கு அச்சுறுத்தலாக இருந்து வருவதாகக் குறிப்பிட்ட மக்டொனல், தகவல்களைச் சுதந்திரமாகப் பெற்றுக் கொள்வதற்கும், பரிமாறிக் கொள்வதற்குமான ACCESS TO INFORMATION என்கிற சட்டமும், அதனடிப்படையாகப் பொது மக்களுக்குக் கிடைக் கின்ற உரிமையும் இலங்கையில் இல்லை என்று தெரிவித்தார். மக்களுக்கு இந்த உரிமையைப் பெற்றுக் கொடுப்பதற்காக இலங்கையின் சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பு (FREE MEDIA MOVE-MENT) எடுத்துவரும் நடவடிக்கைகள் வெற்றி பெறும் எனத் தான் நம்புவதாகவும் மேலும் தெரிவித்தார்.

அவரைத் தொடர்ந்து செந்தில் இரத்தினசபாபதி உரையாற்றினார். ஈழநாடு பத்திரிகையில் பத்திரி கையாளராகப் பணி துவங்கிய செந்தில், பின்பு IPS நிறுவனத்திலும் பணியாற்றியவர். இப்போது OMNI தொலைக்காட்சிச் சேவையின் தமிழ்ப்பிரிவில் பணியாற்றுகிறார். தன்னுடைய உரையில், தனது கடந்தகால பத்திரிகை உலக அனுபவங்களை நினைவுகொண்டது மட்டும் அல்லாமல், பத்திரிகைப் பணியின் ஆபத்துக்களையும் இடர்பாடுகளையும் துல்லியமாக விளக்கினார்.

செந்திலின் உரையைத் தொடர்ந்து பாலா கணபதிப்பிள்ளை உரையாற்றினார். சிவராமின் பல்கலைக்கழகக் கால நெருங்கிய நண்பரான பாலா,சிறிது காலம் ஈழமுரசின் கனடாப் பதிப்புக்கு ஆசிரியராகப் பணிபுரிந்தவர்.

உணர்வு பூர்வமாகச் சிவராமின் வாழ்வையும் நினைவுகூர்ந்த அவர், சிவராமுடைய ஆரம்பகாலக் கட்டுரைகளை மேற்கோள் காட்டியது மட்டு மல்லாமல், முக்கியமான பல நிகழ்வுகளை நினைவு கூர்ந்தார். அதேநேரம், சிவராமின் படுகொலைக்கு இந்திய விசுவாசிகளும் இந்திய உளவுப்படையினரும் காரணமாயிருக்கலாம் எனும் கருத்தை தர்க்க ரீதியாக அவர் முன்வைத்தார்.

அவரைத் தொடர்ந்து டி.பி.எஸ். ஜெயராஜ் கருத்துரையாற்றினார். சிவராமின் வாழ்வு, கல்வி, அறிவின் ஆழம், நுண்ணாய்வு, பலதுறைத் தேர்ச்சி என்பன பற்றிச் சுவாரசியமாகவும் தெளிவாகவும் பேசினார். வாழ்வதற்கான உரிமை தான் அடிப்படையானது. அது இல்லாமல் போனால் கருத்துச்சுதந்திரம் அர்த்தமற்றது என்று குறிப்பிட்ட அவர், ஊடகவியலாளருக்கு வாழ்வுரிமை மறுக்கப்படுகின்ற அவலத்தைச் சுட்டிக் காட்டினார். அத்துடன் சிவராம் எப்போதுமே தமிழ்த் தேசியத்துக்காகப் போராடிய ஒருவர் என்று ஆதாரங் களுடன் பேசினார். சிவராமுடைய இலட்சியம் போராளியாக இருப்பதே தவிர, ஊடகவியலாளராக மட்டும் இருப்பதல்ல என்றும் அவர் வலியுறுத்தினார்.

இறுதியாகக் கவிஞரும், இலங்கையின் சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பின் நிறுவன உறுப்பின ருமான சேரன் உரையாற்றினார். உலகின் பல பகுதிகளில் ஊடகவியல் சுதந்திரமும் கருத்துச் சுதந்திரமும் மிகுந்த நெருக்கடிக்குள்ளாகியிருப்ப தாகக் குறிப்பிட்ட அவர், செப்டெம்பர் 11, தாக்குதல்களுக்குப் பிற்பாடு, தாராளவாத ஜனநாயக நாடுகள் என்று கூறப்படுகிற நாடுகளிலேயே கூட ஊடகச்சுதந்திரம் பெரும் அச்சுறுத்தலுக்கு ஆளாவதாகத் தெரிவித்தார். இந்தப் பின்னணியில் இலங்கை போன்ற நாடுகள் மேலும் தீவிரமாக ஊடகவியலாளரை ஒடுக்குவது ஆச்சரியம் தரும் ஒன்றல்ல என அவர் மேலும் குறிப்பிட்டார். கடந்த இருபது ஆண்டுகளில் எல்லாத் தரப்பாலும் கொல்லப்பட்ட பத்துக்கும் மேற்பட்ட ஊடகவியலாளர் பற்றி விரிவாகக் குறிப்பிட்ட அவர், ஊடகவியலாளரின் படுகொலைகளை நினைவு கொள்வதில் தமிழ்ச்சமூகம் இரட்டை நிலையைக் கடைப்பிடிப்பதாகக் குற்றம் சாட்டினார். தமக்கு வேண்டப்படுபவர்கள் கொல்லப்பட்டால் ஊடகச் சுதந்திரம் என்று கூச்சல் எழுப்புவதும், தமக்கு விரோதமானவர்கள் கொல்லப்பட்டால் மௌனம் சாதிப்பது அல்லது குதூகலிப்பது என்ற நிலை ஆரோக்கியமற்றதும் அச்சந்தருவதும் என அவர் மேலும் தெரிவித்தார். தணிக்கையை விடப் பயங்கரமாக ஊடகத்துறையைப் பாதிப்பது, எமது மத்தியில் வழக்கில் இருக்கும் சுய - தணிக்கைதான் என்றும் குறிப்பிட்ட சேரன், நூறு கருத்துகளும் நூறு சிந்தனைகளும் முட்டி மோதுவதுதான் ஆரோக்கிய மான சமூகத்துக்கு உகந்தது என்றும் தெரிவித்தார்.

மோ்வின் மகேசனின் நன்றியுரையுடன் ஒன்று கூடல் நிறைவெய்தியது.

# ஆழிப் புள்

அது ஒரு
மாலைக் கருக்கல் வேளை

வாடைக் குமரி அவள்
மடிப்புப் போட்ட
சேலையின் அலைகளைத் தடவிக்கொண்டு
உப்புக் கசியும் சில்லென்ற குளிரில்
அசைந்தாடி வந்து
என் மேனியைத் தடவி

விரல் நகத்தால் கோலம் கீறி
என் உடலில் ஏறி,
உருண்டு விளையாடித் துள்ளி
எழுத்தில் வடிக்க இயலாத இன்பத்தை
என் இதயத்தில்
நிரப்பிக்கொண்டு இருக்கும்.

கிழக்கு வான் பரப்பும் கடல் முகடும்
இறுக்கிக் கட்டி அணைத்து
முத்தமிடும் வேளையில்
அவற்றின் உதட்டைப் பிரித்தவாறு
வட்ட முகக் குளிர் முகத்தோன்
நிமிர்ந்து எழுந்து நின்றான்.

அகலக் கால் பதித்து
உயர்ந்து சுருண்டு
அங்கப் பிரதெட்சணை செய்யும்
அலைப் பாய்கள்
விரிந்து தவழ்ந்து ஓடி வந்து
அழிக்காத தூரத்தில்,

ஈர மண்ணைக் குழைத்து
பிஞ்சுக் கைகளால் அள்ளி எடுத்து
கோபுரமும் வீடும்
சிகரமும் கட்டி

கைகொட்டிச் சிரித்து
விளையாடும் சிறார்கள்.

உழைப்பை ஊக்கும்
தூய நிலா வெளி அரங்கில்,
குளக்கரை மண்ணில்
கழுத்துவரை புதைந்திருக்கும்
துறைக் கல்லில்
குனிந்து நிமிர்ந்து
துணி வெளுக்கும் ஓசையில்
இரையும் நிரை மூச்சு,

தென்னம் பாளையில் தவில் மேளம்
ஏலேலோ.. பாடி
நீட்டி வலிக்கும் துடுப்பில்
புடைத்து நெழியும் நாடி நரம்புகள்,
ஏர் இழுக்கும் எருதுகளின் முக்கல் முனகல்
மூதாட்டிகளின் சங்கீதக் குரவை.

பானை சட்டிகளைத் தூக்கிவந்து
முற்றத்து வெண் மணலில்
வட்டமாய் உட்கார்ந்து,
குழையல் கவளங்களைக் கைகளில் ஏந்தி
நிலாச்சோறு உண்டு
பிள்ளைகளை வீட்டினுள்
பக்குவமாய்ப் படுக்க வைப்பர்.

மாமரத்து அடி நிழலில்
கால்போட்டுக் கதைபேசும் தம்பதியில்
வான் பரப்புத் தன் விரல்களை நீட்டி
வெண் கட்டியால் ஓவியம் கீறும்,

சங்ககால நினைவுத் திரையில்
வரவு செலவு அற்ற
இன்ப வாழ்க்கையில்
அடுத்து ஆடும் ஓர் ஏணைக்குள்
உருவத்தைச் செதுக்கிக் களிப்படைவர்.

கூந்தலை விட்டுப் பூங்கொத்து நீங்காத
புது மணத் தம்பதிகளுக்கு
இது தேன் நிலவு அல்ல
அவர்களின் தேனுக்குள் நிலவு.

வழமைபோல
உழைப்பதற்குப் புறப்பட்ட சந்திரன்,
பால் வெள்ளை நூலால் பின்னிய
வீச்சு வலையைக் கையில் ஏந்தி
மூச்சுக்கொண்டு
மீன்களைத் தேடித் தேடி
வீசி வீசி நடந்து வரும்போது,

அவனது கண்கள்
அலை நுரைப்பாத்தியில்
கழுகாகக் குத்தி நிற்கும்.

அத்திலாந்திக், பசுபிக்,
இந்துக் கடல் பரப்பில்
வட தென் துருவங்களில்
வலையை வீசி இழுக்கும்போது,

குப்பையாகச் சிக்கிவரும்
மண்டை ஓடுகள்
முள்ளந் தண்டுகள்
உதிர்ந்து கொட்டுப்படும்
எலும்புத் துண்டங்கள்



ஏன் என்று விழித்துப் பார்க்கும்.

சிந்தனைப் பாலத்தில் ஏறி
நிலம் நோக்கி நகர்ந்து வரும்போது
நீண்ட கரையோரம் பரந்து கிடக்கும்
கண்கள் திறந்த மனிதச் சடலங்கள்.

வலையைச் சுருட்டித் தன்
மார்பில் அணைத்தபடி
அடர்ந்து இருண்ட காடு சூழ்ந்த
மேல் திசைக் கொட்டிலுக்குள்

கழைந்த தன் உடைகளால்
மூடிப் போர்த்தபடி

மீளாத் துயரில்
முடங்கி
படுத்துக் கொண்டான்.

**முத்துராஜா**



# மாற்றம் சிறுகதை

வெள்ளை நிறத்தில் அங்கங்கே திட்டுத் திட்டாய் முகிற் கூட்டங்கள் விதவிதமான வரி வடிவங்களில் ஆனால் அத்தனையும் கருத்திற் படாமல் பார்வைகள் கலங்கியபடி உருவங்கள் உருத்தெரியாமல் உணர்ச்சி அற்ற உடலுடன் வெறித்துப்போய் அமர்ந்திருந்தாள் கார்த்திகா.

”ஹெல்லோ மேடம்” என்று அழைத்தாள் பணிப்பெண். திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள் கார்த்திகா. அந்த நிமிடந்தான் விமானம் பறந்து கொண்டிருப்பதை அவள் உணர்ந்தாள். பணிப்பெண் தந்த பழச்சாற்றை வாங்கி வைத்து விட்டு கலங்கியிருந்த கண்களையும் துடைத்துக் கொண்டாள். மனதில் உள்ள கவலைகள் எல்லாம் கண்களின் வழியே வரும் என்றால் இந்த நாள்வரை வற்றாத ஊற்றுப்போல் கண்களில் இருந்து கண்ணீர் வந்து கொண்டே இருந்திருக்க வேண்டும். அழுவதன் மூலம் நம் பலவீனத்தையே வெளிக் காட்டுகின்றோம். இன்று என்னை அறியாமலே கண்கலங்கிவிட்டது. ‘என்ன முட்டாள்தனம்’ என்று தன்னையே கடிந்து கொண்டாள்.

கார்த்திகா என்ற பெயருக்கேற்றபடி அவள் வாழ்வும் ஒளிமயமாய் அமையும் என்றே அவள் நினைத்தாள். ஆனால் விதி இப்படி விளையாடும் என்று நினைக்கவில்லை. திருமதி கார்த்திகா சிவகுமார் அவளுடைய முழுப்பெயர். திருமணமாகி ஐந்து வருடங்கள் முடிவடைகின்றன. கார்த்திகாவின் பெற்றோர் சிறுவயதிலேயே காலமாகிவிட்டனர். அவளது அக்கா நந்தினிக்குக் குடும்பம் இருந்ததால் கார்த்திகாவையும் சேர்த்து வளர்த்து திருமணம் செய்து கொடுத்தார்கள். மாப்பிள்ளை இலண்டனில் இருப்பதால் தாய்நாடான இலங்கையில் இருந்து இலண்டனுக்கு வந்து சேர்ந்தாள். அன்று வெள்ளிக்கிழமை. கார்த்திகா இலண்டன் வந்து இரண்டு நாட்களே ஆகின்றன. வழமைபோல் அன்றையநாள் சுறுசுறுப்பாக விடிந்தது.

“கார்த்திகா சாப்பாடு தயாரோ” என்று அறையில் அவசர அவசரமாக உடைகளை மாற்றிக்கொண்டு கேட்டான் சிவகுமார்.
“ஓம்.. எல்லாம் சரி, வாங்கோ சாப்பிடுங்கோ”
“இல்லை எனக்கு நேரம் இல்லை. நீங்க எனக்கு ஹொட்பாக்கில் போட்டுத்தாங்கோ”
சாப்பிடவில்லையே என்ற மனவருத்தத்துடன் அப்படியே செய்தாள். சாப்பாட்டை கையில் வாங்கிக்கொண்டு”
இன்றைக்கு இரவு ஒரு மணிக்குத்தான் எனக்கு வேலைமுடியும். நீங்க சாப்பிட்டு நித்திரை கொள்ளுங்கோ. என்னட்ட வேற திறப்பு இருக்குது. நான் திறந்து வருவன். யாராவது கதவைத்தட்டினால் பார்த்திட்டு திறவுங்கோ. சரி நான் வர்றன்” என்று கூறிவிட்டு காரில் புறப்பட்டான்.

கார்த்திகா உள்ளுக்குள் வந்து கதவைப் பூட்டினாள். சிவகுமாருக்குத் தாய் மட்டும்தான். தந்தை காலமாகவிட்டார். அவரும் தனது மூத்த மகனுடைய குடும்பத்துடன் ஜெர்மனியில் வசித்து வருகின்றார். வீடே அமைதியில் ஆழ்ந்திருந்தது. தொலைக்காட்சியிலும் அவளுக்குப் பிடித்தமான நிகழ்ச்சிகள் இல்லை.
வானொலியைத் திருப்பினாள் கார்த்திகா. “அவரவர் வாழ்க்கையில் ஆயிரமாயிரம் மாற்றங்கள்” என்ற பாடல் காற்றில் மிதந்து வந்தது. கூடவே தனது அக்கா குடும்பத்தைப்பற்றிய நினைவும் சேர்ந்து வந்தது. “அக்காவின் பிள்ளைகள் இருந்தால் அவர்களின் பேச்சிலும் சிரிப்பிலுமே நேரம் போய்விடும்” என்று பல சிந்தனைகளோடு அன்றைய நாளும் மெல்ல மெல்ல நகர்ந்து சென்றது.

காலையில் தன் சிப்பி விழிகளை மெல்ல விரித்தாள் கார்த்திகா. பக்கத்தில் சிவகுமார் படுத்திருந்தான். “இவர் எப்பொழுது வந்தார்” என்று நினைத்தபடியே எழுந்தாள். நேற்றிரவு பன்னிரண்டரை மணிவரை விழித்திருந்தாள். நித்திரை கண்ணைச் சுற்றிக்கொண்டு வரவே போய் கட்டிலில் விழுந்து விட்டாள்.

1

கார்த்திகா தன் வேலைகளில் ஈடுபடத்தொடங்கினாள். சிவகுமாரும் எழுந்து தன் வேலைகளைச் செய்துகொண்டிருந்தான். ரீயைக் குடிக்கக் கொடுத்துவிட்டு “நேற்று இரவு சாப்பிட்டனீங்களோ” என்று கேட்டாள்.
“ஓம்..ஹோட்டல்ல சாப்பிட்டுவிட்டுத்தான் மற்றவேலைக்குப் போறனான்” என்றான் சிவகுமார்.
“நீங்கள் வந்ததுக்குப்பிறகு எழுந்துவிடலாம் என்றுதான் படுத்தனான். ஆனால் நல்ல நித்திரை கொண்டுவிட்டன். இன்றைக்கு நேரத்தோடு வருவியள்தானே”
“இல்லை கார்த்தி, புதனும் சனியும் மட்டும்தான் நான் ஒன்பது மணிக்கு வருவன். மற்றப்படி இரவு ஒரு மணியாகும்”.
“என்ன நீங்கள். எனக்கு கஷ்டமாய் இருக்குது, தனிய இருக்க”.
“என்ன செய்கிறது கார்த்தி. புதன்கிழமை உன்ன இங்கிலிஸ் படிப்பதற்கு சேர்த்து விடுகிறன். அப்ப கொஞ்சம் நேரம் போறது லேசாய் இருக்கும்” என்றான்.
“ஏன் நீங்கள் எல்லா நாளும் இரண்டு வேலைக்குப்போக வேணுமோ கொஞ்சம் வேலையைக் குறைக்கலாமே”. என்று சொல்லிக்கொண்டே சாப்பாட்டைத் தயாராக எடுத்து வைத்தாள்.

“பிறகு எப்படி இங்க வசதியாய் வாழுறது. நிறைய சம்பாதிச்சாத்தான் இங்க வாழலாம்”. என்றபடி சாப்பாட்டுப்பையைக் கையில் வாங்கினான். தொடர்ந்து “சரி, நான் போய்விட்டு வாறன்” என்றபடியே காரை எடுத்துக்கொண்டு கிளம்பினான். கதவைத் தாளிட்டு விட்டு வீட்டை ஒழுங்கு படுத்துவதில் முனைந்தாள்.



அன்றிரவு அவன் வரும்வரை காத்திருந்தாள். இவ்வாறே நாட்கள் நகர்ந்தன. வீட்டுக்கு அருகில் இருந்த பாடசாலையில் படிக்கவும் சேர்ந்தாள். இரண்டு மாதங்கள் கழித்து மறுபடியும் வேலையைக் குறைக்கும்படி கேட்டுப்பார்த்தாள் கார்த்திகா.

“உங்களுக்கு நேரம் போகாவிட்டால், நல்ல வேலையொன்று இருப்பதாக என்னுடைய நண்பன் சொன்னவன் அதை உங்களுக்கு வாங்கித்தாறன். நீங்கள் வேலைக்குப்போங்கோ. உங்களுக்கும் பொழுது போகும்”என்றான் சிவகுமார்.
“கார்த்திகாவால் பேசவே முடியவில்லை. இவர் ஏன் இப்படி வேலை வேலை என்றே அலைகிறார். நான் சொல்வதை புரிந்துகொள்ள மாட்டாராமே”என்று மனதுக்குள் பொருமினாள். “சரி நான் வேலைக்குப் போறன். ஆனால் நீங்கள் ஒரு வேலையை விடுங்கோ. அப்படியென்றால் எங்களுக்கு நேரம் இருக்கும்”. என்று பதில் அளித்தாள்.
“என்ன கார்த்தி கதைக்கிறீங்க. வேலையை விட்டிட்டு என்ன செய்யிறது. நீங்களும் வேலைக்குப்போங்கோ நானும் வேலைக்குப்போறன். நிறையச்சம்பாதிச்சு வசதியாய் இருப்பம்”என்றான்.

“என்னால அப்படி இருக்க முடியாது. அளவுக்கு மீறி யாருக்காக சம்பாதிக்கிறியள். என்னால எல்லா நாளும் இயந்திரம் மாதிரி இருக்க முடியாது. வாழ்க்கையைக் கொஞ்சம் அனுபவிக்க வேண்டாமோ?”
”சரி கார்த்தி கொஞ்சக்காலம் இப்படி வேலை செய்வம். பிறகு சந்தோசமாய் இருப்பம்.
என்னால இப்ப வேலையை விட முடியாது”. என்று கூறிவிட்டு வேலைக்குக் கிளம்பி விட்டான். கார்த்திகாவும் புது வேலைக்குச் செல்லத்தொடங்கினாள்.

நாட்கள் மாதங்களாகின. மாதங்கள் வருடங்களாகின. ஆனால் வாழ்க்கை மட்டும் மாறவில்லை. பொறுப்புகளில்லை, குடும்பமும் பெருக்கவில்லை. இப்பொழுதே தேவைக்கு அதிகமான சொத்துக்கள் இருந்தன. ஆனால் ஏன் உழைக்கின்றோம் என்று அவளால் தெரிந்துகொள்ளவே முடியவில்லை. இக்காலகட்டத்தில்தான் அவளது அக்காவின் மூத்த மகளின் திருமண வைபவம் வந்தது. அதைப்பற்றி சிவகுமாருக்கு தெரிவிக்கவும் செய்தாள்.

“ஓ.. வளர்மதிக்கோ கல்யாணம். அவ்வளவு கெதியாய் வளர்ந்து விட்டாவோ. நல்ல விஷயம்” என்றான்.
“ஓம். அதுதான் அக்காவும் அத்தானும் எங்கள வந்து கலந்து கொள்ளட்டாம்”என்றாள்.

2

“உங்கள வளர்த்தாளாக்கினது அவயள் தானே கட்டாயம் போகத்தான் வேணும். நாளைக்கு உங்களுக்கு விசாவுக்கு விண்ணப்பிச்சிட்டு வேலைக்குப் போவம்”என்றான்.
“என்ன எனக்கோ. அப்ப உங்களுக்கு”

**தனுஜா றஞ்சித்**

“உங்களுக்கு லீவு தருவினம். ஆனால் எனக்கு தொடர்ந்து லீவு தரமாட்டினம். அப்படித் தந்தாலும் வர்றதுக்கிடையில் வேலை போய்விட்டால் பிறகு வேலை தேடுவது கஷடம்”என பதிலளித்தான்.
“அப்ப நான் மட்டும் எல்லாச் சொந்தங்களுக்கும் நடுவில் தனியாய்ப்போய் நிற்கிறதோ. எல்லாரும் உங்கள கேட்டால் என்ன சொல்லுவது. நீங்கள் இரண்டு வேலை செய்கிறியள் தானே”என்று கொட்டிவிட்டாள்.
“எனக்கு வேலை என்று சொல்லுங்கோ. அங்க இருக்கிறவைக்கு இங்கத்தைய நிலைமை தெரியும். அவையள் புரிந்து கொள்ளுவினம்” என்றான்.
“அவயள் புரிந்துகொள்ளுவினம். என்னாலதான் உங்கள புரிந்துகொள்ள முடியவில்லை”
“என்ன கார்த்தி சொல்லுறீங்கள்”
“என்னத்தையிங்கோ சொல்லுறது. இரண்டுபேரும் தனியாய் கொஞ்ச நாளாவது இந்த இயந்திர

தொடர்ச்சி 18ம் பக்கம்





# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

## Answers to Tutorial 167 — May 01, 05

**Ans. 1.** If three cans fill 2/3L, then one can fill 2/9 L.
Total number of cans req. = 8/(2/9) = 8 x 9/2 = 36.

**Ans. 2.** Since R is the midpoint of PQ and S is the mid point of QR, S is 3/4 of the way from P to Q. Since S is 12 units to the right of P, then Q is 4/3 x 12 = 16 units to the right of P. Since S is 6 units up from P. Therefore the co-ordinates of S are (2 + 16), (1 + 8) = (18, 9).

**Ans. 3** Using Pythagorean Theorem CD = $\sqrt{3^2 + 42} = 5$




Area of $\Delta$ DEC = 1/2 x 3 x 4
$\therefore$ Area of ABCD = 12, 12 = AD X 5
$\therefore$ AD = 12/5 = 2.4

**Ans.4** Let A be the area inside the $\Delta$ and inside the circle. Let B be the area outside the. $\therefore$ A + B + area of the circle.
= area of $\Delta$. $\therefore \pi r^2 = 1/2 \times 6 \times 8 = 24$
r = 24/$\pi$ = 2.8



## Tutorial - 168

1) If Y = a (x - 2) $^2$ + c and Y = (2x - 5) ( x - b) represent the same quadratic function. Find the value of P.

2) $\Delta$ ABC is obtuse angled at C. The bisector of the exterior angles at A and B meet BC and AC extended at D and E, respectively. If AB = AD = BE prove that < ACB = 108°.

3) How many numbers from 1 to 1000 are:
(a) Divisible by 5. (b). Divisible by 7.

4) The integers 64,800 can be factored as 25 x 34 x 52.
How many divisers does 64800 have.

5) How many binary sequences of length 6, 7, or 8 begin with 0

BY. MR. S.F.XAVIER (Teacher) TEL: 416-431-6774


MATH, SCIENCE & ENGLISH TUITION

MATH, SCIENCE & PHYSICS under taken for ALL Grades from Gr. 2 to 12 & OAC
Special classes in Calculus & Algebra - Geometry

English for all grades from Gr. 2 ta Gr. 10
Individual & group classes available
By an experience teacher: S.F. Xavier

CONTACT: 416 - 431- 6774 (Markham & Ellesmere)

PHARMACEUTICAL COURSES

Academy - SRN இன் புதிய ஆரம்பம் Sheppard & Warden சந்திப்பில்
1. Quality Control Lab 2. Manufacturing 3. Packaging - Peals Tel.: 416.493.0600
- UI, HRDC ஏற்றுக்கொள்ளப்படும்
உடன் வேலை செய்வதற்க உரிய Training பயிற்சி அளிக்கப்படும். David : 416.885.4981
அத்துடன் Java + Training for SCP J2 Course அனுபவம் மிக்க ஆசிரியரால் தொடங்கப்படும்.
தொடர்புகளுக்கு: திரு - 647.880.0130
வகுப்புகள் நடத்துவதற்கு அறைகள் கொடுக்கப்படும்.

Summer Courses
• Math • Science For all Grades

Chemistry, Biology
From Grade 11&12

Math, Science
From Grade 3 to 10

Based on Ontario Curriculum
McCowan & Finch
Weekdays - Evening Classes
Weekends - Morning Classes
For information please call 416-335-9779

HOME VISIT PERSONAL CLASSES

Tutor : Lesley Antony (C.Tech), Dip In Technology (OUSL)
Post Dip In Communications Engineering (Seneca)
Subjects : Grade 10 Math Grade 11 Math,Physics
Grade 12 Calculus ,Algebra, Geometry, Data Management
Preferred Locations : Downtown/Scarborough Tel. No : 416-938-2860
Email : tjlesley@yahoo.com tutorantony@yahoo.ca
Web : http://www.tutor.faithweb.com




# மாற்றம்

17ஆம் பக்கத் தொடர்ச்சி

வாழ்க்கையை விட்டுட்டு சொந்தங்களோடு இருந்திட்டு வரலாம் என்று நினைக்கிறன்".
"இங்க மட்டும் வேறு யாரோடையுமோ இருக்கிறம். தனியத்தானே இருக்கிறம்".
"தனியத்தான் ஆனால் இயல்பாய் இல்லையே".
"இப்ப நீங்கள் என்னதான் சொல்லுறியள்"என்று கேட்டான் சிவகுமார்.
"நாங்கள் இரண்டு பேரும் சேர்ந்து ஊருக்கு போய்விட்டு வருவம் என்று சொல்லுறன்"
"என்ன கார்த்தி நானோ கம்பனி நடத்திறன். நினைச்ச நேரத்துக்கு விட்டுட்டு வர்றதுக்கு.
இப்ப வேலை இடத்தில சரியான பிஸி. பெரும்பாலும் லீவு கிடைக்காது. சரி எதுக்கும் நான் முதலாளியிட்ட பதினைந்து நாள் லீவு கேட்டுப்பார்க்கீறன்"என்று முடித்து விட்டான்.
சிவகுமார் சொன்னபடி லீவு கிடைக்கவில்லை. கார்த்திகா தனியாகவே தாய்நாடு செல்லவேண்டி வந்தது. இரத்த உறவுகளைப் பார்த்ததில் கார்த்திகாவுக்குச் சந்தோசம். ஆனால் உறவுகளுக்குத்தான் காரணம்சொல்லி அலுத்துப்போனாள். கூடவே தனிமரமாய் சொந்தங்களுக்கிடையில் நின்ற வேதனை வேறு. திடீர் என்ற உடல் குலுக்கத்தால் சிந்தனையில் இருந்து விடுபட்டு வெளிநடப்புக்கு வந்தாள் கார்த்திகா. விமானம் இலண்டனை
அண்மித்துக் கொண்டிருப்பதை முன்னுக்கிருந்த சிறிய கம்பியூட்டர் காட்டிக்கொண்டிருந்தது.

அவசர அவசரமாக எழுந்து நேரத்தைப்பார்த்தான் சிவகுமார். நேரம் சரியாக மாலை நான்கு நாற்பத்திரண்டு. "இனிப்போய் காாத்திகாவ கூட்டிக்கொண்டுவர சரியாய் இருக்கும்"என்று நினைத்துக்கொண்டே செல்வதற்கு தயாரானான். கார்த்திகா ஊருக்குச்சென்ற மறுநாள் தன்னையறியாமலேயே "கார்த்தி சாப்பாடு தயாரோ"என்று அழைத்துவிட்டான். இதுபோன்று பல முறை அழைத்துவிட்டுத் தன்னையே நொந்து கொண்டான். இரவுவேளையில் வேலைமுடிந்து வீடு திரும்பும்போது கார்த்திகா கார்த்திருப்பாள் என்ற நினைவோடு வந்து ஏமாந்து போனான். பிரிவு எவ்வளவு வேதனை என்று சில வேளைகளில் உணரவும் செய்தான்.

கார்த்திகா தனது பயணப்பெட்டிகளை எடுத்துக்கொண்டு வெளியே வந்து சேர்ந்தாள். சுற்றுமுற்றும் கண்களை ஓடவிட்டாள். ஒருபக்கத்தில் சிவகுமார் நின்று கையாட்டினான். அவளிடம் வந்து அழைத்துக்கொண்டு நடந்தபடியே "பயணம் எப்படி கஷ்டமாய் இருந்ததோ"என்று விசாரித்தான்.
"பறுவாயில்ல. அவ்வளவாக கஷ்டமாயிருக்கவில்ல"என்றாள். இவ்வாறு பல விடயங்கள் பேசியபடியே வீட்டுக்கு வந்தடைந்தார்கள்.
"கார்த்தி சாப்பாடு இருக்குது சாப்பிட்டுவிட்டு ஓய்வெடுங்கோ"என்றான். குளித்து விட்டு சாப்பாட்டை திறந்து பார்த்தாள். குழப்பத்துடன்,
"என்ன இது சோறும் கறியும் கிடக்குது. எங்க வாங்கினீங்கள்"
"வாங்கவில்ல. நான் சமைச்சனான்".
"உங்களுக்கு இதெல்லாம் செய்ய நேரம் இருந்ததோ"என்று வினவினாள்.
"அரைநாள் லீவு போட்டிட்டு வந்து செய்தனான்"என்றான் அன்றைய பத்திரிகையை திருப்பியபடி. முகத்தில் மலர்ந்த சிறு முறுவலை மறைத்துக்கொண்டு,
"அப்ப இரவு சோறு சாப்பிட்டு விட்டு வேலைக்கு போறீங்களோ இல்ல வேற சாப்பாடு செய்யட்டோ" எனக்கேட்டாள்.
"வேண்டாம் கார்த்தி இனி இரவு வேலை இல்லை. வேலையில இருந்து நின்றுவிட்டன்".
"ஏனுங்கோ வேலை இடத்தில ஏதாவது பிரச்சினையோ".
"அப்படியெல்லாம் ஒன்றுமில்ல. நீங்கள் சொன்ன மாதிரி இனி ஒரு வேலை போதும். இனிமேல் எனக்கு நேரம் இருக்கும். உங்களோட நேரத்த செலவழிக்கலாம்." என்றான்.
இது கனவா நினைவா. இப்படி ஆளே மாறியிட்டாரே என்று மனதிற்குள் எண்ணிக்கொண்டாள்.
"என்ன திடீரென்று ஞானோதயம்".
"எல்லாம் பிரிவு தந்த வேதனை" என்றான் சிரித்தவாறே.
"வேதனையையும் சுகமாக்கலாம் மனமிருந்தால்" என்றாள் கார்த்திகா.
புன்னகையினுடனேயே "மனமென்ன இடமே இருக்கு, எனக்குப் பக்கத்தில்"என்றான் சிரித்தவாறே.
முத்துப்பற்கள் பளிச்சிட சிரீத்தாள் கார்த்திகா.

-முற்றும்-

# கடுமையான நோய்களினால் பாதிக்கப்பட்டவர்...

11ஆம் பக்கத் தொடர்ச்சி

மருத்துவ செலவுகளுக்கு தேவையான மேலதிக செலவுகள், வசதிகளையும் பொறுப்பு எடுத்து மேற்கொள்ளும் ஒப்பந்தங்களையும் கைச்சாத்திடுகின்றது. இக் காப்புறுதி திட்டம் இன்றைய காலகட்டத்தில் கனடாவில் உள்ளவர்களுக்கு அவசியமானதாகும். ஏனெனில் "Heart & Stroke Foundation of Canada" வின் அறிக்கையின்படி ஒவ்வொரு வருடமும் கனடாவில் சுமார் 75,000 பேர் இவ் இருதயம் சம்பந்தப்பட்ட நோய்களுக்கும், 50,000 பேர் பாரிசவாத நோய்களுக்கும் உட்படுகின்றார் கள் என தெரிவிக்கின்றது. இதில் கனடா வாழ் ஆசிய நாடுகளை சேர்ந்தவர்களுக்கு குறிப்பாக நம் இனத்தவர்களுக்கு இது அதிகம்.

"Canadian Cancer Society" யின் படி ஒவ்வொரு வருடமும் 1,34,000 பேருக்கு மேல் புற்றுநோய்க்கு ஆட்பட்டு சிகிச்சையின் பின்பு ஏதோ தொடர்ந்து நோயாளியாக சற்று காலம் உயிர்வாழ்கின்றார்கள்.

"Alzheimer Society of Canada" வின் அறிக்கையின்படி வருடம் தோறும் கனடாவில் சுமார் 80,000 பேர் "Alzheimer" என்னும் மறதியினை வளர்க்கும் நரம்பியல் நோயால் பாதிக்கப்படுகின்றார்கள். (முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட றீகன் அவர்கள் இந்நோயால் பலகாலமாக பாதிக்கப்பட்டு சில மாதங்களின் முன்பு மரணமானவர்) இப்படி நோயால் பாதிக்கப்படுபவர்களின் புள்ளி விபரங்கள் பலமாக வளர்ந்து வருவதால் இத் திட்டத்தில் சேருவது அவசியமாகும் என மருத்துவ வட்டாரங்கள் ஆலோசனை வழங்குவது வழமையாகும்.

# கே.எஸ். பாலச்சந்திரனுக்கு வயது 60

அண்ணை றைட் மூலம் பிரபலமாகி, கலியுக காலம், வாடைக்காற்று, நாடு போற்ற வாழ்க, அவள் ஓர் ஜீவ நதி, சர்மிளாவின் இதயராகம் போன்ற இலங்கை தமிழ் படங்களிலும், உயிரே உயிரே, எங்கோ தொலைவில், மென்மையான வைரங்கள், நெஞ்சங்கள், தலைமுறைகள் போன்ற கனடிய தமிழ் திரைப்படங்களிலும் நடிகராக, இயக்குனராக பங்குபற்றியுள்ளார். இலங்கை வானொலியில் கலைஞராக சிறப்பித்துள்ளார். இவர் பல குறும் படங்களையும் இயக்கியுள்ளார். மூன்றாவது சர்வதேச தமிழ் குறுந்திரைப்பட விழா வில் சிறந்த திரைக்கதைக்கான விருதைப் பெற்றவர்.
பல்கலைக் கலைஞரான இவர் மேன்மேலும் சிறப்புற வாழ்த்துக்கள்.








STARTING FROM **$189,900**

**TALLEST CONDO IN TOWN**

CALL FOR MORE INFO




**Sheppard/Neilson**
Att/Row/Twnhouse, 4+1 Bedroom
3 Washroom, Close To School, Bus,Park,Shopping,Library.Gleaming Parquet Flooring.Desirable Location.Motivated.




**McCowan/Steels**
Link 2-Storey, 4+2 Bedrooms, 4 Washrooms, Finished Bsmt, Hardwood floor, Upgraded Brlm Mn Flr,Central Air/Vac System




**Morningside & Finch**
Detached 2-Storey, 4 Bedrooms, 3 Washrooms, 2 Year New Mattamy Built Wide Lot Of About 2700 Sq Ft Original 5 Br Model With 9'Ceiling Strip Hardwood Flr Solid Maple Staircase Open Concept




**Stains/Passmore**
4 Bedroom, 2300 sf, one year old




**Westney/Tauton (Ajax)**
5 Bedrooms, 4 Washroom
Great Location,Very Spacious Home, 9' Celing, Pot Lights, Hardwood Floor




**Markham/Steels**
4 Bedrooms
Finished Bsmt, Hardwood floor




**Howden/Dixie**
4 Bedroom
4 Washroom, Immaculate Condition, Bg Lot Size




**Kingston/Audley**
4 Bedroom
3 Washroom




**Whites/Finch**
4+1 Bedroom
4 Washroom, Prestigious Pine Creek Location, Back on to Ravine




**Dixie /Octillo**
3 Bedrooms
3 Washroom




**Morningside/Sheppard**
Detached 2-Storey, 4 Bedrooms
3 Washroom, Great Location,Brandnew Mattamy Build Home, Very Spacious Home, 9' Celing, Cultured Marble To Bathrooms




**Dunbarton/Fairport**
4 Bedroom
3 Washroom

digi Media Creations -416.467.4952



# சசி செல்வரட்ணம்

Sales Representative

Direct **416.725.1125**
Office **416.321.6969**

HOMELIFE HIGHER STANDARDS

HOMELIFE/GTA Realty Inc.
1711 McCowan Rd., Suite 206, Toronto, ON M1S 3Y3

# BASEMENT RENT

### SCAR. GOLF CLUB & ELLSEMERE
1 Large bedroom bsmt for rent. Living room, kitchen, washroom, sep. entrance, parking. Avail. July 01, 05. Close to school, ttc & all amenities.
தொடர்புகளுக்கு: 416.431.9428

### SCAR. GOLF CLUB & LAWRENCE
2 bedroom bsmt for rent. 1 large, 1 small room. Sep. kitchen, large living room, full washroom. Sep. entrance, parking. utilities inclu. Rent $750. Avail. July 01, 05. Close to ttc, school, stores, etc.
தொடர்புகளுக்கு: 416.438.2660

